ஜகன் மோகினி

விக்ருதி வைகாசி. 1—6—'50. அனு நான்கு.

4

இவ்விதழில்

- ஒரு முழு நவீனம் — "தூய உள்ளம்"
  வை. மு. கோ. 90-வது நாவல்
- வழக்கம்போல் "வீராங்கனை" தொடர்ச்சியும்
  இதர முக்கிய அம்சங்களும்

27-வது ஆண்டு

இவ்விதழில் ஒரு முழு நாவல்

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
8 JUL 1950
MA

தூய உள்ளம்

வை.மு.கோ. 90.வது நாவல்

ஆசிரியை: வை.மு.கோதைநாயகி அம்மாள்

மழை பெய்தது!

ஒரு கவியை அவரது ஜீவிய காலத்திலேயே போற்றிப்புகழ தமிழர் முன்வந்தனர், தமிழன்னை மனங்குளிர்ந்ததுபோலவே இயற்கையன்னையும் குளிர்ந்தாள்; மழையைப் பொழிந்து மக்கள் மனத்தைக் குளிரச்செய்தாள். 26—5—50ல் புதுவை ஒலிம்பியா தியேட்டரில் கவியோகியைப் போற்றி பிரஸங்க மழை; வெளியே பல வருடங்களாகக் காணப்படாதிருந்த விண்மாரி. மாஜிபிரதமர் ஓமந்தூர் ரெட்டியார் தலைமையில் நடந்த இவ்வைபவத்தில் புதுவை பிரதமர், மேயர், இரண்டு நீதிபதிகள், சென்னையிலிருந்து கல்கி ஆசிரியர், ஜகன்மோகினி ஆசிரியை, இன்னும் வெளியூர்களிலிருந்து சில அன்பர்களும் சொல்மாரி பொழிந்தனர். கவியோகி பதிலளிக்கையில் செய்த பிரஸங்கத்தின் ஸாராம்சம் வருமாறு:—

மனிதஇனம் ஒரு புதிய வாழ்வை வேண்டி முன்னேறுகிறது. ஜீவநதி மலையிலும் கணவாயிலும் தாவித் தாவி, ஒரு புதிய அமைதிக் கடலை நோக்குகிறது. வழியில் ஆயிரம் சோதனைகள் வருகின்றன. வாழ்வை இன்பமயமாக்க ஸயன்ஸ் நாகரிகம் ஒளி வீசுகிறது; புதுப் புது யந்திரங்கள் இயற்கையைஆள முயல்கின்றன. ஆனால், மனித—இயற்கை கட்டுக்கடங்காத காட்டுப்புரவிபோல் அலைகிறது. எத்தனையோ தீர்க்கதரிசிகள் அதைப் பண்படுத்த வந்தனர். மனிதன் தன்னையறியாமல். தலைவனை யறியாமல் வாழத் தெரியாமல் இடர்ப்படுகிறான்.

மனிதரைப் பிடித்த துயர்கள் மூன்று— வறுமை, மடமை, அடிமைத்தனம். இந்த மூன்றும் உள்ளமட்டும் வாழ்வில் இன்பம் இராது. உலகில் ஒரு மனிதன் அடிமையாயிருக்குமட்டும் மனித சமுதாயம் அமைதி பெறமுடியாது. புறவாழ்வை எவ்வளவு அழகுசெய்தாலும், அகவாழ்வு துன்பநரகமாகவே யிருக்கும். முதலில் மனிதன் உள்ளிருந்து திருந்தவேண்டும். இயற்கை கொடுத்த கை கால் உள்ளம் மனம் மூளைகளைக் கொண்டு உழைத்துப் பிழைக்கவேண்டும். உழைக்காமல் உண்ண யாருக்கும் உரிமையில்லை. எல்லாரும் பசி தீர்ந்து வளம்பெற வாழ்வதே முதல் சீர்திருத்தம்.

அடுத்தது மடமையிருளை ஒழிப்பது: மனமயக்கமும் இனமயக்கமும் மடமையால் வருவன. தகுந்த கல்விப் பயிற்சியால் மடமை நீங்கும். விதையில் மரம்போல் மனிதருள் அறிவு மறைந்திருக்கிறது; அதைக்கெல்லியெடுக்கும் பயிற்சியே கல்வியாகும். மூன்று வயதுமுதல் ஆறுவயதுவரையில் குழந்தைக் கல்வி, ஆறுமுதல் பதினான்குவரையில் அறிவுப்பயிற்சி, பதினான்குமுதல் பதினெட்டுவரையில் சிறந்த கலைப்பயிற்சி, பதினெட்டுமுதல் இருபத்திரண்டுவரையில் தொழிற்பயிற்சியும்வீரப்பயிற்சியுந்தந்து, நம்மவரை ஆளாக்கவேண்டும். பாரதநாட்டுக்குரிய அருட்கலையும் ஐரோப்பியருக்குரிய பொருட்கலையும் ஆன்மாவும் உடலும்போல் சேர்ந்து, புதிய கலையை உருவாக்கவேண்டும். அறிவே அடிமை தீர்க்கும்.

தன்னறிவு, உலகறிவு, தொழிலறிவுகளால் அச்சமற்ற நேர்மையுடன் வாழ்வதே அடிமைத்தனத்தைப் போக்கும் வழியாகும். வறுமைமடமைஅடிமைத்தனங்களை ஒழித்து, அசல்மனிதனாலே சீர்திருத்தமாகும். நேர்மையே சீர்மை; அவரவர் நேராகத்திருந்தினாலே உலகமும் திருந்தும். தான் திருந்தாமல் உலகைத்திருத்துவது: கரியைக்கொண்டு மின்னலை எழுதுவதுபோலாகும்.

ராப்பர் தொடர்ச்சி ௩-ம் பக்கம்

ஜகன்மோகினி

ஐயுணர் வெய்தியக் கண்ணும்
பயமின்றே
மெய்யுணர் வில்லா தவர்க்கு.
- திருவள்ளுவர்

ஜகன்மோகினி யென்னுஞ்
சஞ்சிகையைக் காக்க
ஜகன்மோகினி!
மனத்தைச் சார்ந்து.
- வீரராகவ கவி

Vol. 27 | விக்ருதி ௵ | June.
No. 6. | வைகாசி ௴ | 1950

இவ்விதழிலும் ஒரு முழு நாவல்!

சென்ற இதழில் தமிழ்ப்புத்தாண்டுப்பரிசாக "கானகலா" முழுநவினம் வெளியானதை வரவேற்ற அன்பர்கள், ஒவ்வொரு இதழிலும் இத்தகைய விருந்தே அளித்தால் மிகவும் ரஸமாயிருக்குமேயென்று தெரிவித்தனர். ஒவ்வொரு இதழிலும் அவ்வாறு வெளியிடுவது சிரம சாத்யமான தெனினும் கூடியவரை சௌகர்யப்படும் போதெல்லாம் வெளியிடுவதென்ற தீர்மானத்திற்கு வந்துள்ளோம். இவ்விதழில் "தூய உள்ளம்" விருந்தளிக்கிறது. அடுத்த இதழில் "ஸௌபாக்கியவதி"யை எதிர்பாருங்கள்.

கவர்ச்சியான பட்டுப்புடவைகள்

மனோரம்யமான பட்டு, ஜப்பானிய ஜார்ஜெட்டைப் போன்ற நெசவு. சாயம், கரை, பூ யாவும் மாறாது நிலைத்திருக்குமென உத்தரவாதமுள்ளது. ஆயிரக்கணக்கான ஸ்திரீகளால் நன்கு மதிக்கப்பட்டவை.

44" அகலத்தில் 5, 6, 7, 8 கஜ நீளத்தில் கிடைக்கும்.

விலை:—கஜம் ரூ. 2—8—0. தான்.

பாக்கிங், தபாற்செலவு இனும்.

(ஒருமுறை தருவித்துப் பாருங்கள்)

ஓய்வு நேரத்தில் வேலை செய்யக்கூடியவர்களும் ஏஜண்டுகளும் தேவை. மாதம் ரூ. 200 சுலபமாய் சம்பாதிக்கலாம். விவரங்களும் ஸாம்பிலும் இனும்.

GIRSON KNITTING WORKS.,
LUDHIANA. 42.

வீட்டுக்குள்ளே உலகம்

—பழமொழிப் பித்தன்—

உலகயாத்திரை பரந்த அறிவுக்கு ஒரு சிறந்த சாதனம் என்பர். வீட்டுப்பெண்களும்,

விலகி வீட்டில் ஓர் பொந்தில் வளர்வதை
விரைவில் ஒழித்து, நாலு திசையும் சென்று வெளிநாடு கண்டு அறிவுவிசாலம்பெறவேண்டும்என்பர்பாரதியார். எனினும்வீட்டிலிருந்துகொண்டே உலகம்கண்டவிசாலாட்சிகளும் உண்டு.

ஒவ்வொரு வீட்டிலும் ஔவையார்

உலகநாடக கவிச்சக்கரவர்த்தி ஷேக்ஸ்பியர் உலகம்சுற்றி அறிவைப் பெருக்கிக்கொண்டவரல்ல. லண்டனிலேயே கண்டனர் உலகம் என்கிறார்கள். லண்டன் நகரில் உள்ள மனிதஹிருதயம் கண்டார்; அங்கே பிரபஞ்ச நாடகமும் கண்டார். அந்தப் 'பிரபஞ்ச நாடக'த்தின் சில சுடர்களே உலகப் பிரசித்தமான ஷேக்ஸ்பியர் நாடகங்கள். நம் வீட்டுப்பாட்டிமார் சிலர் வீட்டிலிருந்தே மனிதஹிருதயமும் பிரபஞ்ச நாடகமும் ஒருவாறுகண்டு, ஷேக்ஸ்பியராகாவிட்டாலும் 'ஔவையார்'களாகியிருக்கிறார்கள்.

ஔவைப்பாட்டியார்போல் எல்லா பாட்டிமாரும் பாடவில்லைதான். அவ்வளவு தூரம் நடந்து திரிந்து பிரபஞ்ச நாடகமும் காணவில்லைதான். என்றாலும் 'ஔவையார் வாக்கு' என்று சொல்லத்தக்க பழமொழிகளில் பலவும் சாதாரணப் பாட்டிமார் வாக்கேயாகும்.

இத்தகைய பழமொழிகளில் சிலவற்றை இப்போது பார்க்கலாம்.

பாட்டி கண்ட பிச்சைக்கார உலகம்

விசாலாட்சிப்பாட்டி வீட்டிலிருந்தபடியே எத்தனையோ பிச்சைக்காரர்களின் முகம் பார்த்து இரங்கிப் பிடியரிசி பிடியரிசியாகப் பிச்சைபோட்டு உதவியிருக்கிறார்கள். புண்ணியம் என்றோ, கண்ணியம் என்றோ, படியரிசி போட்டதும் உண்டு. ஆனால் தடித்த உடம்பை வளைத்து வேலைசெய்ய விரும்பாமல் பலர் பிச்சையெடுக்கப் புறப்பட்டதும், அந்தப் 'பிச்சைக்காரர் தொல்லை'யை நம்மைப்போல் அந்தப் பாட்டியம்மாளும் உணர்ந்துகொண்டாள்.

'இந்தக்காலத்தில் எல்லோரும்தான் பிச்சையெடுத்துப் பிழைக்கலாமென்று எண்ணிவிட்டார்கள். குருடா, செவிடா, நொண்டியா? சண்டித்தனம், சோம்பேறித்தனம்?' என்றெல்லாம் வாக்குப் பிரவாகமாய்ப் பேசுகிறோமல்லவா 'பிச்சைக்' காரர்பிரசினை, குறித்து? விசாலாட்சிப்பாட்டியின்வாக்கிலோ இந்த அபிப்பிராயம் சவித்திறனுடன் வெளிப்படுகிறது.

183/62

உடம்பெடுத்தவன் எல்லாம்ஓடெடுத்தான்.
ஊர்இருக்குது, ஓடிருக்குது.

இந்தப் பழமொழியுருவத்திலே இது சிரஞ்சீவியாகி விட்டது. விசாலாட்சிப்பாட்டி காலம் முதல்தானா? அதற்கு முன்பே ஔவையார்--காலத்திலேயே தோன்றிவிட்டது போலவும் ஆயுள் முன்னோக்கியும் நீண்டுவிட்டது!

பாட்டிவாக்கில் துளிகூடப் பண்டிதபடாடோபம் கிடையாது,—இருக்கமுடியாதே!

உடைமையும் வறுமையும் ஒருவழி நில்லா

என்று பண்டிதர் தோற்றுவித்த 'பழமொழி'யோடு விசாலாட்சிப்பாட்டியின் விசாலவாக்கை ஒப்பிட்டுப்பாருங்கள்.

லோபிக்குச்சாபம்

இனி வேறொரு உதாரணம் பார்க்கலாம். கருமித்தனத்தை நாமும் பார்த்திருக்கிறோம்; பரிகசித்திருக்கிறோம்; பழித்திருக்கிறோம். காமாட்சிப்பாட்டியும் அவர்களைக்கண்டு சிரித்திருக்கிறாள்; வருந்தியிருக்கிறாள்; இரங்கியிருக்கிறாள்; மனம் புழுங்கியிருக்கிறாள்; சபித்திருக்கிறாள். இவளுடைய நெஞ்சுப் புழுக்கமும் ஈரமும் தீரமும், கோபமும் சாபமும்,

உடாப்புடவை பூச்சிக்கிரை

என்றும்,

உண்ணாச்சோத்து மண்ணாய்ப்போகும்

என்றும் எவ்வளவு ஆத்திரமாக, ஆவேசமாக, வெளிப்படுகின்றன!

உத்தமனும் தப்பிலியும்

இன்னும் ஓர் உதாரணம். சட்டஞானம் சாமானியருக்கும் அதிகமாயிருக்கிறது இந்நாளிலே. தஸ்தாவேசுகளாலும் ஒப்பந்தங்களாலும் உண்மையை நிலைநிறுத்தப் பார்க்கிறோம்; உத்தமவாழ்வுவாழப்பார்க்கிறோம். ஆனால் துஷ்டர்கள் எந்த ஒப்பந்தத்தையும் உடன்படிக்கையையும் உடைத்தெறிகிறார்கள். இதற்குச் சாமானியரோடு சக்கரவர்த்திகளும் சாட்சிதான்; ஆனால் இந்தப் பெரிய உண்மையைத்தான் சிறிய வீட்டிலிருந்துகொண்டே மீனாட்சிப்பாட்டியும் உணர்ந்துகொண்டிருக்கிறாள். எவ்வளவு உணர்ச்சிவேகத்துடன் இந்த உண்மைவெளிப்படுகிறது இந்தப் பாட்டிவாயிலாக:

உத்தமனுக்கும் தப்பிலிக்கும் உடன்படிக்கை வேண்டாம்.

ஸர்வஜனவாக்கு

இன்னொரு உதாரணம். பிரபுவைக்குறித்தோ, அரசனைக் குறித்தோ, ஸர்வாதிகாரியைக் குறித்தோ, ஊரார் பலவிதமாக அபிப்ராயம் வெளியிடப் பின்வாங்கமாட்டார்கள். இந்த உண்மையை அடுப்பூதும் அம்மாளுப்பாட்டி அடுப்பங்கரையிலேயே கண்டுகொண்டு,

MMM 122341 1950-27-6

உலைவாயை மூடலாம், ஊர்வாயை மூடலாமா
ஊர்வாயை மூட உலைமூடி உண்டா?

என்று சாஸனமாகத் தந்திருக்கிருள். ஸர்வஜன வாக்கெடுப்பின் அவசியத்தை இன்று நாம் உணர்ந்திருக்கிறோம். ஸர்வஜன வாக்கின் சக்தியை அன்றே உணர்ந்தாள் அம்மாளு.

இரட்டைவாழ்வு

இன்னென்று. 'நீ உன்புன்னகையிலே ஆயிரம் கட்டிகளை ஒளித்துவைத்திருக்கிறாய்' என்கிறார் ஒரு மேலைநாட்டு மேதாவி. 'தொழுத கையிலும் அழுத கண்ணீரிலும் கொலைக் கருவி ஒளிந்து கிடக்கும்' என்பர் நமது நாட்டுப் பெரும் புலவர். இதை ஒரு பழமொழி-வடிவத்தில் நாம்தான் போட்டுப்பார்க்கலாமே.

ஒரு பண்டிதநாவலர் என்ன சொல்லக்கூடும்?

உள்ளே பகையும் உதட்டில் உறவும்

என்று சொல்லிப்பார்த்தார். ஆனல் அவரது பாட்டி ஆவுடையாச்சி,

உறவுபோல் இருந்து குளவிபோல்கொட்டுகிறனே!

என்றதும், நாவலர் தமது தோல்வியை தமக்குள் ஒப்புக் கொண்டார்.

அந்த ஆச்சியே வேறொரு சமயம்,

உள்ளே வயிறெரிய உதடு பழஞ்சொரிய!

என்று வாக்கியத்தை முடிக்காமலே நிறுத்திப் பெருமூச்சு விட்டதும், நாவலர் திகைத்தேபோனர், 'ஔவைப்பிராட்டியின் அவதாரமோ?' என்று.

ஊத்தையும் உள்வினையும்

இன்னும் ஒன்று பார்க்கலாம். புண்ணிய தீர்த்தங்களில் நீராடுவதால் பாவம் எப்படிப்போகும் என்று ஆசாரத்திருத்தவாதிகள் பேசுகிறார்களல்லவா? ஆசாரப்பாட்டிக்கே இதுவும் அதிசயமாகத்தெரியும்:

ஊத்தை போகும் உள்வினை போகுமா?

ஒற்றுமை-ஞானம்

இன்னும் ஒன்று பார்க்கலாமா? எவ்வளவோ ஞானம் நிறைந்த இந்நாட்டிலே,

ஒன்றுபட்டால் உண்டு வாழ்வே

என்ற ஞானம்மட்டும் இல்லையென்று சொல்மாரி பொழிந்திருக்கிறோம். ஒற்றுமைப் பஞ்சம்போகப் பாமாரிபொழிந்த பாரதியாரும்,

ஒன்றுபட்டால் உண்டு வாழ்வே,—நம்மில்
ஒற்றுமை நீங்கில் அனைவர்க்கும் தாழ்வே;
நன்றிது தேர்ந்திடல் வேண்டும்,—இந்த
ஞானம் வந்தாற்பின் நமக்கெது வேண்டும்?

என்ற உபதேசம் செய்கிறார். இதே உபதேசத்தைப் பர்வதப் பாட்டி என்ற ஓர் ஔவையார்,

எத்தால் வாழலாம்? ஒத்தால் வாழலாம்.

என்று ஓதிவைத்தார். பர்வதப்பாட்டி ஞானபர்வதமா என்ன?

குழந்தைத்தெய்வம்

இன்னொன்று பார்ப்போமா? குழந்தைகளைப் பயமுறுத்தாமல் அன்புவழியிலே உத்ஸாகமூட்டிக் கல்வி கற்பிக்க வேண்டும் என்றெல்லாம் இக்காளில் சொல்லுகிறோமல்லவா? ஒவ்வொரு குழந்தையையும் குழந்தைக் கண்ணனாகவோ, குழந்தைக் கிறிஸ்துவாகவோ கொண்டாடவேண்டும் என்கிறார் மாண்டிஸோரிப்பாட்டியார் (டாக்டர். மாண்டிஸோரி)

நம்முடைய வீட்டுப்பாட்டியும்,

குழந்தையும் தெய்வமும் கொண்டாடும் இடத்திலே!

என்று சொல்லிவைக்கவில்லையா?

பாட்டியின் வாழ்க்கைத் தத்துவம்

வாழ்வும் கேடும் எவ்வளவு சூட்சுமமான தத்துவத்தை வீட்டுப்பாட்டிக்கு வெளியிட்டிருக்கின்றன!

கேடுவரு முன்னே மதிகெட்டுவரும்;
வாழ்வு வருமுன்னே மதி துள்ளிவரும்!

'மூடநம்பிக்கைகளில் ஏகபோக உரிமை பாட்டிமாருக்குத் தான்' என்று சொல்லுகிறோம்! ஒரு பாட்டி சொல்வதைக் கேளுங்கள்:

கேட்டதெல்லாம் நம்பாதே,
நம்பினதெல்லாம் சொல்லாதே!

★ ★ ★

வீட்டுக்குள்ளே பாட்டிமார் கண்ட உலகம்தான் பெரும் பாலும் தமிழ்ப்பழமொழிகளாக விரிந்துகிடப்பதுபோலத் தோன்றுகிறது. குழந்தைகுட்டிகளோடு பட்சத்துடன் பழகினார்கள். உற்றார் உறவினரோடு நேசமாய்க் கலந்தார்கள். அண்டை அயலாரோடு நெருங்கினார்கள். ஏழைகளோடும் தோழமைகொண்டார்கள். கேட்டுக்கேட்டு வெளியுலகத்தையும் ஒருவாறு கனவுபோல் தெரிந்துகொண்டார்கள்.

தாங்கள் கண்ட மனிதஹ்ருதயங்களிலே உலகநாடகத்தை கொஞ்சமாவது கண்டவர்கள்தான் நம் வீட்டுப்பெண்களும், முக்கியமாகப் பாட்டிமார்களும். இப்பெண்மணிகளின் மணி யோசைதான் பெரும்பாலும் தமிழர் வீடுகளில் வழங்கிவரும் பழமொழிகள்.

என் சுய சரிதை

சகோதரி R. S. சுபலக்ஷ்மி அம்மாள்

(சென்ற இதழ் தொடர்ச்சி)

1921

ஜனவரி 4-ஆந் தேதி கிறிஸ்துமஸ் விடுமுறைக்குப்பிறகு பாடசாலை திறக்கப்பட்டது. இந்தப் பாடசாலையிலேயே என் சகோதரி ஸ்வர்ணமும் வேலையாயிருந்தாள். ஜூலையிலிருந்து 2 வருடம் லீவு எடுத்துக்கொண்டு பிரஸிடென்ஸி காலேஜில் சேர்ந்து 'கெமிஸ்ட்ரி' என்னும் பாடம் எடுத்துக்கொண்டு எம். ஏக்குச் சேர்ந்துவிட்டாள்.

ஆச்ரமத்திலிருந்து இந்தவருடம் S. S. L. C பரீக்ஷைக்குப்போனவர்கள் 8 பேர். இவர்களுள் காமகிரி, வி. ஸரஸ்வதி, வி. அபயம், யக்ஞலக்ஷ்மி, கோமதி, பூர்ணம்மாள், இந்த 6 பேரும் மேரிராணி கல்லூரியில் மேல்படிப்புக்குப் போய்ச் சேர்ந்தார்கள். யக்ஞலக்ஷ்மி தவிர மற்ற ஐவரும் B. A. L. T. முடித்துவிட்டு, கவர்மெண்டில் வேலையாயிருக்கிறார்கள். கே.லக்ஷ்மி என்பவள் டில்லிக்குப்போய், அதன்பிறகு பம்பாய்க்குப்போய் வைத்தியப்படிப்பு முடித்து அவள் ஊராகிய பல்லாரிக்குப்போய் புனர்விவாகம் செய்துகொண்டு அவள் கணவருடன் காங்கிரஸில் ஈடுபட்டு ஏதோ பொதுஜன ஸேவை செய்துகொண்டிருந்தாள்.

வி. சங்கரத்தின் தகப்பனார் திடீரென்று இறந்துபோய் அந்தக் குடும்பம் நிராதரவாக ஆகிவிட்டது. அவளுக்கு போதனாமுறை வகுப்பில் சேர விருப்பமில்லை. வரைதல் (சித்திரம்) தையல் இவற்றில் நல்லஞானம் இருந்தது. ஆகவே கல்கத்தாவிலிருந்த என். ஆர். அய்யர் அவர்களுக்கு இவளைப் பற்றி எழுதிஅவர் அன்புடன் அனுப்பிய ரூ. 240-ஐக்கொண்டு ஒரு தகுந்த ஐரோப்பிய உபாத்தினியிடம் சித்திரமும் தையலும் கற்றுத்தேறி லேடி-வெலிங்டன் பாடசாலையிலேயே சித்திர உபாத்தினியாக நியமிக்கப்பட்டாள்.

இந்த வருஷம் உபாத்திமைத் தொழிலுக்கு 3 பேர் படித்துமுடித்து, வேலைக்குப்போனார்கள். கிரிலக்ஷ்மி என்னும் ஒருதெலுங்கப்பெண்—விதவைக்கோலமே பூண்டவள்-குடியாத்தத்தில் ஒரு பாடசாலையில் வேலைகிடைத்துப்போனாள்.

ஆச்ரமத்தில் என்னிடம் முதன்முதல் வந்துசேர்ந்த அம்முக்குட்டி என்பவள் பி. ஏ. எல். டி. முடித்து, மாயவரம் கவர்மெண்ட் பெண்பாடசாலை தலைமை உபாத்தினியாக அமர்த்தப்பட்டது, எங்கள் யாவருக்கும் நிரம்ப சந்தோஷமாயும் பெருமையாயும் இருந்தது. சித்தியே அவளுடன்கூட

மாயவரத்துக்குப்போய் அவள் உத்தியோகம் ஏற்று புதுக் குடித்தனம் ஆரம்பித்ததைப் பார்த்துவிட்டு வந்தாள்.

மார்ச்சு மாதம் ஈஸ்டர் விடுமுறை. ஆச்ரமப் பெண்களை யெல்லாம் 3 பகுதியாகப்பிரித்து புழலேரிக்கு அழைத்துப் போய்வந்தோம். ஏரி நிரம்பி ஒரு மதகின் கண்வாய்கள் வழியாக அருவிமாதிரி கொட்டும். அதில் ஸ்நானம் செய்வது இன்பமாயிருக்கும். கவர்மெண்ட் படகுகளில் ஏறி ஏரியில் சுற்றிவந்து பிறகு P. W. D. பங்களாவில் தங்கி ஆகாரம் சாப்பிட்டு சிறிது ஓய்வெடுத்துக்கொண்டு திரும்பினோம். ஒரு நாள் எல்லோரும் அடையாறு பிரம்மஞானசபை பெண்கள் கூட்டத்துக்குப் போய் உபந்நியாஸங்கள் கேட்டு விட்டு அந்த இடங்களை சுற்றிப்பார்த்துவிட்டுத்திரும்பினோம்.

விதவாச்ரமத் தலைவர் கார்வே

புனுவிலிருந்து வந்திருந்த விதவாச்ரமத்தலைவர் 'கார்வே' அவர்கள் உபந்நியாசம் அன்று நிரம்ப நன்றாயிருந்தது. எங்கள் பாடசாலையையும் ஆச்ரமத்தையும் பார்த்தார். கார்வே அவர்களது அபிப்பிராயம் கீழ்வருமாறு :—

பெண்கள் கல்வியும் ஆண்மக்கள் கல்வியும் வெவ்வேறாக இருக்கவேண்டும். பெண்களுக்கு ஆங்கிலப்படிப்பு அதிகம் வேண்டாம். கடினமான கணிதப்பாடத்தை கஷ்டப்பட்டு அவர்கள் அதிகம் படிக்கவேண்டியதில்லை. அது இல்லாமலே பெண்கள் யூனிவர்ஸிடி படிப்பை முடிப்பதற்கு தனியான பாடங்கள் தயாரிக்கப்படவேண்டும். குடும்பத்தை பொறுப் புடன் வகித்துநடத்தி, குழந்தைகளை தகுந்த முறையில் வளர்ப்பதற்கு வேண்டிய கல்விதான் பெண்களுக்கு வேண்டும். அவரது முயற்சியினால் பம்பாய் யூனிவர்ஸிடி-யால் பெண் களுக்கு B. A. வகுப்பு, பிரத்தியேகமான பாடத்திட்டங்கள் அமைக்கப்பட்டு நடந்துவருகிறது.

S. S. L. C. பரீக்ஷையில் கணக்கு பேபர் திருத்தும்வேலை எனக்கும் கெமிஸ்ட்ரிபேபர் திருத்தும் வேலை என் சகோதரி ஸ்வர்ணத்துக்கும் ஏற்பட்டது. ஏப்ரல் மாதம் முழுவதும் விடைத்தாள்கள் திருத்தி மாதக்கடைசிக்குள் அனுப்பினோம். ஏப்ரல் 15-ஆந்தேதி M. E. S. இல் எனக்கு ஹெட்மிஸ்ட்ரெஸ் வேலை ஆயிற்று.

கோடை விடுமுறை

ஏப்ரல் 29-ஆந்தேதி பாடசாலை மூடப்பட்டது. ஆச்ர மத்தில் வழக்கம்போல் விடுமுறை வகுப்புக்கள் நடந்தன. சித்திமாத்திரம் ஆச்ரமத்திலேயேயிருந்து கவனித்துக் கொண்டார். நான் என் பெற்றோர்கள் சகோதரிகள் அவர்கள் குழந்தைகளுடன் மே மாதம் 7-ஆந்தேதி புறப்பட்டு திரு நெல்வேலி ஜில்லாவில் உள்ள பாபநாசத்துக்குப் போனேன். தாமிரபரணி நதிக்கரையில் தெற்கு அரண்மனை என்று ஒரு

இடம். அரண்மனையென்றால் ஏதோ பெரியஅழகிய கட்டிடம் என்று எண்ணிவிடாதேயுங்கள். நீண்ட திண்ணையும் தாழ்வாரமும். திண்ணை 3 வீடுகளுக்குப்பொது.நடுவீடு 3 அறைகள் தாழ்வாரம் முற்றத்துடன கூடினது. எதிரில் ஒரு கலியாண மண்டபம். அதன் நடுவில் சதுரமான மேடை. திண்ணை. தாழ்வாரத்துக்கும் மண்டபத்துக்கும் இடையில் நடைபாதை. அதன்கீழ் நதியின் ஓட்டம். மண்டபத்தின் 3 பக்கங்களிலும் படித்துறை—எதிரில் சலசலவென்று ஏற்றத்திலிருந்து கீழ் நோக்கி வேகமாக ஓடும் தாமிரபரணி நதி. பின்பக்கமெல்லாம் மலைக்காட்சி. தினம் காலையில் எழுந்து மலைமேல் ஏறி, மறு பக்கம் இறக்கத்தில் சென்று சிறிதுதூரம் நடந்துசென்றால் அங்கு, அகஸ்தியர் கோவிலும், எதிரில் சுமார் ½ பர்லாங்கு அகலமுள்ள, பாறைகளிலிருந்து இழியும் நீர்வீழ்ச்சிகளும். அதில் ஸ்நானம் செய்துவிட்டுத் திரும்புவோம். கோடை நாட்களில் சிறிதுசிறிதான அருவிகள் பாறுங்கற்களைத் தாண்டித் தாண்டிச் சென்று அருவியின்கீழ் சுகமாக ஸ்நானம் செய்யலாம். வெள்ளம் வந்துவிட்டால் அருவிகளின் சமீபத்தில் அண்டவே முடியாது. "ஹோ" என்னும் இரைச்சலுடன் பால் நுரையைப்போல வேகத்துடன் கொட்டும் அருவிகளிலிருந்து வெளிப்படும் தூவானம் ரொம்பதூரம் வரைக்கும் வீசும். சிறிது தூரத்தில் பாறைகளின்மேல் உட்கார்ந்து சுற்றிலுமுள்ள பசுமையான செடி கொடி விருட்சங்களால் ஆன காடுகள் அடர்ந்த மலைகளையும் எதிரில் கல்மேல் சிலுசிலுவென்று தூவாளத்தை வீசித் தெளித்துக்கொண்டு கொட்டும் மகோன்னதமான அருவிகளையும் பார்த்துக்கொண்டே இருந்தால் நேரம்போவதே தெரியாது. என் தங்கை சாவித்திரி அட்டை,வர்ணப்பெட்டியுடன் சிலநாட்கள் அங்கு உட்கார்ந்து சுற்றிலுமுள்ள காட்சிகளை வர்ணங்களைக்கொண்டு சித்திரம் வரைவாள். நாங்கள் ஏதாவது படித்துக்கொண்டும் குழந்தைகள் ஓடி ஆடிப்பாடி விளையாடுவதைப் பார்த்துக்கொண்டுமிருந்துவிட்டு அஸ்தமிக்கும் சமயத்தில் வீடு திரும்புவோம். சில நாட்களில் சமையல்சாமான்களுடன்போய் அருவிகளுக்கு சமீபத்தில் மரநிழல்களில் மும்மூன்று கற்களை அடுப்புகளாக்கி எல்லாரும் சேர்ந்து ஐந்தாறுவிதபோஜனதிகளைத்தயாரித்துக்கொண்டு ஸ்நானம் செய்து சாப்பிட்டு சிரமபரிகாரம் செய்துகொண்டு மாலையில் திரும்புவோம். அகஸ்திய தீர்த்தத்தைத் தாண்டி இன்னும் சிறிதுதூரம் மலைமேல் ஏறினால் அங்கு கலியாண தீர்த்தம் என்னும் அழகிய அருவி. (தொடரும்)

ஜகன்மோகினி	இந்தியா, ஸிலோன்.	பர்மா.	வெளிநாடு
தனிப் பிரதி	அணா 4.	0—4—6.	0—5—0
வருடச் சந்தா	3-0-0.	3—8—0.	3-12—0

தூய உள்ளம்

வை.மு.கோ. 90.வது நாவல்

1

இளங்கன்று பயமறியாது

"உலகத்தையே மறந்து என்னடா யோசனை செய்கிறாய்? ஏய் பிச்சுமணி!...ஓ! தூங்குகிறாயா?...சீ...ச்சீ! வெட்கமில்லை? பரீட்சை முடிந்ததும் சுறுசுறுப்பாய் சுதந்தரப் பறவைபோல் சிறகடித்துப் பறந்து துள்ளிவிளையாடாமல் தூங்குகிறான் தூக்கம்.! ஏய் தூங்குமூஞ்சி! எழுந்திருடா! காலை பத்துமணிக்கு எந்த மடையண்டா தூங்குவான்?" என்று கூவிக்கொண்டே ராமு, பிச்சுமணியைத் தட்டி எழுப்பி முகத்தில் ஒரு டம்ளர் ஜலத்தைத் தெளித்தான்.

பிச்சுமணி அலறிப்புடைத்தவாறு எழுந்து முகத்தைத் துடைத்துக்கொண்டு ''போடா பழி! முகத்தில் தண்ணீரையைக் கொட்டுகிறான். எந்தக்கோட்டையைப் பிடிப்பது மிஞ்சிவிட்டது? இரவுபூராவும் தூங்காமல் சற்று கண்ணயர்ந்தால் ஏண்டா எழுப்பினாய்''...என்று சிள்ளென்று சீறிவிழுந்தான்.

ராமு:—அடேயப்பா! தொறவாளுக்கு இரவுபூராவும் என்னவேலை மும்முரமோ தெரியவில்லை. அல்லது எந்தக் கோட்டையைப் பிடிக்க முஸ்தீபு போட்டயோ?...போடா முட்டாள்! 'பிக்னிக் பார்ட்டி'க்கு நேரமாகிறதடா! இன்னும் ஒருமணி காலத்திற்குள் எல்லா மாணவர்களும் வந்துவிடுவார்களே. நீ இப்படித் தூங்கிக்கொண்டிருந்தால் அவர்கள் உன்னைப்பார்த்துச் சிரிப்பார்களே என்று எழுப்பினால் ஏதோ தடபுடல் படுத்துகிறாயே... எழுந்து குளித்துவிட்டுக் கிளம்பு... நாழியாகிறது. சரியாக 1 மணிக்கு ரயில் கிளம்புகிறது. நாம் சற்று முன்னாடி சென்றால்தான் வசதியான இடம் கிடைக்கும். ஏண்டா! உங்கள் வீட்டிலிருந்து திண்டிக்கு என்ன கொண்டு வரப்போகிறாய்?...

பிச்சுமணி:—சாப்பாட்டுராமனுக்குத் திண்டிமீதுதானே நினைவு: ஒரு மூட்டை புளியோதரை, ஒரு கூடை இட்டிலி, ஒரு தூக்கு முறுக்கும் சீடையும், ஒரு டப்பா மோகினி ஸில்வர் ஜூபிலி கேக்...இத்தனையும் உனக்குப் படையல்போடச் செய்துவைத்திருக்கிறது போதுமா!...

ராமு:—அடேடே!...இப்போதே நாக்கில் ஜலம் ஊறுகிறதடா! அதோ கோபு, பாலு, அனந்தன், சின்னப்பா—உம்! புற்றிலிருந்து ஈசல் கிளம்புவதுபோல் கிளம்பிவிட்டது...வாருங்கள்! வாருங்கள்!...மகாஜனங்களே வாருங்கள். உங்களுடைய மூட்டைகள் இந்த மூலையை அலங்கரிக்கட்டும். உங்களுடைய திருமேனிகள் இந்தக் குட்டிச்சுவரையலங்கரிக்கட்டும். தூங்குமூஞ்சி பிச்சுமணியவர்கள் ஒரு செம்பு தண்ணீருடன் விழித்துவிட்டார்கள்!...

கோபு:—அடப்பாவி! இப்பதானா தூங்கி எழுந்தான்?

ஸ்வாமிநாதன்:—சரிதாண்டா! உங்களுக்குப் பரிகாஸமும் வம்புந்தான் தெரியும். அடுத்தது, திண்டியில் முதல்பரிசு அடிப்பீர்கள். பிச்சுமணி நேற்றிரவு பூராவும் விழித்திருந்து அந்த படத்தை எழுதி முடித்துவிட்டாண்டா! படம் பஸ்டு க்ளாஸ். நாளைக்குள் அது பம்பாய்ப் படக்காட்சிக்குப் போட்டிக்கு அனுப்பும் படமானதால் வெகு ஊக்கத்துடன் செய்திருக்கிறான். க்ராமக்காட்சிகளை...அதிலும் நம் தென்னாட்டு க்ராமத்தைச் சித்திரித்திருக்கிறான் பாருங்கள். தத்ரூபமாயமைந்திருக்கிறது. கட்டாயம் இந்த படம் பரிசடித்துவிடும் என்று நான் நினைக்கிறேன். அவன் விடியற்காலை 5 மணிக்குத்தான் சற்று தூங்கினான். நானும் ஆற்றங்கரைக்குப் போனேன்.

ராமு:—ஓகோ! விஷயம் தெரியாமல் அவனை ஆட்டிப் புடைத்துவிட்டேன். சரி; இப்போது முதலில் ஒரு கூட்டம் ரயில்வேஸ்டேஷனுக்குச் சென்று இடத்தைப் பிடித்துக் கொள்ளுங்கள். ஒரு வண்டி பூராவும் நமக்குச்சரியாகிவிடும் படி இடத்தை முற்றுகையிடுங்கள். மற்றவர்கள் பின்னல் வருகிறோம். மணி 11 அடிக்கப்போகிறது. எழுந்திருங்கள் ...என்றான்.

உடனே 5, 6 பேர்கள்மட்டும் கிளம்பிச்சென்றார்கள். அச் சமயம் இவர்களுடைய க்ளாஸ்மேட் அல்லாத ஒரு வாலிபன் அங்கு வந்தான். அவனைப்பார்த்த ராமு...''டேய்வெங்கடேசா! பிக்னிக் பார்ட்டிக்கு வருகிறாயா! ஜாலியாக இரண்டுதினங்கள் இருந்துவிட்டு வரலாம். என்ன யோசிக்கிறாய்? வாயேண்டா!'' ...என்று முதுகில் தட்டிக்கொடுத்தான்...

வெங்:—டேடேடே!...உன்னுடைய ஊதாரித்தனத்தைப் போலவே இருக்கிறது உன்னுடைய தட்டலும். நீ தட்டுவ தாக எண்ணி என் முதுகுத்தோலை நைஸாக உரித்துவிடுவாய் போலிருக்கிறதப்பா! போதும்போதும்! சற்று தூரவிருந்தே பேசு. க்ராமத்தில் படாதபாடுபட்டு வயிற்றைக்கட்டி வாயைக் கட்டி, வெய்யிலில்களைத்து மேட்டில் மண்டைவெடிக்க நின்று பாடுபட்டு வேலைக்காரர்கள் திருடியதும் ஒளித்ததும்போக மிச்சம் கொடுக்கும் தானியத்தை விற்று, பட்டணத்தில் மகன் படித்துப் புரட்டிப் பிற்காலத்தில் தன்னைக்காப்பாற்றப் போகும் மனப்பால் குடித்தவாறு பணமனுப்புவதை வருத்தம் தெரியாது தாம்தூம் என்று செலவு செய்துதிரியும் மைனர் களாகிய உங்கள் கோஷ்டியில் என்னைச்சேர்க்காதேப்பா! உல் லாஸயாத்திரையாம்...ஸல்லாபயாத்திரையாம்...இது யாருக்கு வேண்டும்? ஏதோ கஷ்டப்பட்டு படித்துப் பரீக்ஷை எழுதி யாயிற்று. வீட்டிற்கு வேண்டியதை வாங்கிக்கொண்டு பிரிந் துள்ள பெற்றோர்களையும் சகோதரசகோதரிகளையும் ஊர் சிநேகிதர்களையும் பார்க்க ஆவலுடன் ஓடாமல் இன்னமும் பணத்தை வீண்செலவிட்டுப் பாழாக்க யாத்திரையாம் யாத்திரை!...

ராமு:-அடேயப்பா! பெரிய அனுபவத் தாத்தாடா இவர்: வரேன் வரவில்லை, இரண்டில் ஒன்று சொல்லாமல் உன்னை யாரடா புராணம் படிக்கச் சொன்னது? மூன்று வீடுகளும் நான்குமனிதர்களும் உள்ள குப்பைக்காட்டில் போய் யாரால் இருக்கமுடியும்? ஏதோ மத்தியில் பத்துநாட்கள் இருந்தால் போதாதா? மனிதன் வாழ்க்கையில் சதா சந்தோஷத்தையும் ஆனந்தத்திற்கு ஆஸ்பதமானவைகளையும் தேடவேண்டுமே யன்றி சதா கவலையும் கண்ணீரும் கஷ்டமும் எதற்கடா பட வேண்டும்? ஊருக்குப் போனதும் தங்கையின் கல்யாணத் திற்கு அம்மாவும் அப்பாவும் அடதாளம் போட்டு அழுகை ராகத்தில் தொணதொண பல்லவிகளை ஆரம்பித்துவிடு

வார்கள்...“என்டா! நீ பட்டினத்திலிருக்கிறாயே, யாராவது சரியான பையனைத் தேடக்கூடாதா?” என்று நச்சரிப்பார்கள். இந்தப்பீடை யாருக்குவேணும்...அதோடாவிட்டது? “பெரிய பெண் கர்ப்பமாயிருக்கிறாள்; அவளுக்கு வளைகாப்பு! சீமந்தம் செய்யவேண்டும். கையில் பணமில்லை. உன் சிநேகிதர்களிடம் கைமாற்றாகச் சிறிது தொகைவாங்கித்தரக்கூடாதா?”...அப்பப்பா! ..போதும் இதெல்லாம் உனக்கென்னடா தெரியும். வேதாந்தம் பேசுகிறாயே! எனக்காக என்னடா அவர்கள் பாடுபட்டுப் புரட்டுவது? என் பெற்றோர்கள்? பெற்றகடனுக்கு செய்கிறார்களாக்கும்! இதிலென்னடா அதிசயம்?...என்று கூறிக்கொண்டே அவன் முன்புநிற்காது போய்விட்டான்.

அங்கிருந்த மற்றவாலிபர்களில் சிலர் பெரிதாகச் சிரித்தார்கள். சிலர் மவுனம் சாதித்தார்கள். இரண்டொருவர் வெங்கடேசன் சொல்வது மிகவும் சரி என்று ஒப்புக்கொண்டு “அப்பா நீ சொல்வது சரியானபேச்சு. ஏதோ புத்திகெட்டத்தனமாய் இந்த யாத்திரைக்கு நாங்களும் ஒப்புக்கொண்டோம். ஆளுக்கு 10 ரூபாயிக்குமேல் செலவாகிறதாம். இந்தபத்து ரூபாயிக்குச் சாமான்களை வாங்கிக்கொண்டுபோனால் அம்மா எவ்வளவுசந்தோஷப்படுவாள்! ஒரு சிறியபாவாடையும் சொக்காயும் வாங்கிக்கொண்டுபோனால் அங்கச்சி எவ்வளவு ஆனந்தப்படுவாள்! இரண்டு விளையாட்டுச் சாமான்கள் கொண்டு போனால் குட்டித்தம்பியின் கரைகடந்த ஆனந்தத்தைக்கண்டு எத்தனை பூரிக்கலாம்...சிச்சி! இந்தபுத்தி முன்பேதோன்றாது போயிற்றே! பொன்விளக்காயினும் புத்துருக்கு நெய்யாயினும் அதைத் தூண்டிவிட ஒரு தூண்டுகோல்வேண்டாமா? வெங்கடேசா! நீதான் இப்போது தூண்டுகோலாகவந்து எங்கள் அறியாமையைப் போக்கினாய். உனக்குமிகுந்த வந்தனம்...டேய் ஸந்தானம்! நான் இந்த உல்லாஸயாத்திரைக்கு வரவில்லை; இன்னொருசமயம் பார்த்துக்கொள்ளலாம். நான் போய்வருகிறேன்” என்று கிளம்பினான். இன்னும் இரண்டொருவரும் நின்றுவிட்டார்கள்.

“சனியன் பிடித்தவன்போல் எங்கிருந்தோ வந்து சேர்ந்து ‘சும்மா இருந்த சங்கை ஊதிக் கெடுத்தானாம் ஆண்டி’ என்பதுபோல் செய்துவிட்டான். இவனுடைய பாட்டன் வீட்டு சொத்து என்ன கொள்ளைபோய்விட்டதோ தெரியவில்லை. பிசினாறி!” என்று ராமன் ஆத்திரத்துடன் வெங்கடேசனைத் திட்டினான்.

இதற்குள் பிச்சுமணியும் ப்ரயாணத்திற்குத் தயாராய் வந்துசேர்ந்தான். எல்லோரும் மூட்டைகளைத் தாமே தூக்கிக்கொண்டு ஒய்யாரநடையும் மிலிடரிநடையும் மைனர் நடையும் மண்டைக்கொழுப்பு நடையுமாகநடந்து ஸ்டேஷனை நோக்கிச் சென்றார்கள். வருத்தமோ கவலையோ அறியாத ஷோக்குமைனர்கள் இவர்கள் என்பதை அவர்களுடைய

பார்வையிலும் விசிலடிப்பதில் சினிமாப் பாட்டுகளைப் பாடுவதிலும். கக்கபக்க என்று சிரிப்பதிலும் நன்றாக எடுத்துக் காட்டிவிட்டது. இதையே வீதியிலுள்ளவர்கள் ஒரு கண்காட்சியைப்போல் வேடிக்கை பார்த்தார்கள். அதைப்பார்த்ததும் சில துஷ்டர்கள் கண்ணடிப்பதும் விசிலடிப்பதும் கபகபவென்று சிரித்து முகத்தைக் கோணிக் குறும்பு செய்வதுமாகச் சென்றார்கள். சில மாணவர்கள் மைனர் வாழ்க்கையின் சம்ப்ரதாயமே இதுவாக எண்ணி இருப்பதை உலகத்தில் ப்ரத்யட்சமாகக் காண்கிறோமல்லவா? தற்கால வாழ்க்கையின் போக்கே தமது லக்ஷியமாக எண்ணிமகிழும் அந்த அப்பாவிமாணவர்களுக்கு இதிலுள்ள இழிவோ, துன்பமோ, பெற்றோர்களின் பரிதவிப்போ, பிற்காலத்தில் இச்செய்கை வாழ்க்கையின் ஆணிவேரையே ஆட்டிவிடும் பயங்கரமோ எப்படித் தெரியமுடியும்? தெரிந்துகொள்ளும் எண்ணந்தான் எப்படி உதிக்கப்போகிறது?

2

குஷியின் சிரிப்பு—பசியின் துடிப்பு

புகையைக் கக்கிக்கொண்டு வண்டிகள் சிலகிளம்புகிறதும் சில வந்து நிற்பதுமாகத் தம் கடமையைச் செய்கின்றன. வண்டிக்காகக் காத்திருக்கும் கூட்டமும் வண்டியிலிருந்து இறங்கும் பலவிதமான கூட்டங்களும் ஒரு புது உலகத்தையே காண்பதுபோலிருந்தது! மூட்டைகளின் குவியல்களுக்கு எப்படி எண்ணிக்கை இல்லையோ அப்படியே அவைகளைத் தூக்குவதற்காகப் போட்டியிடும் கூலிகளுக்கும் கணக்கில்லை.

கல்யாணம் செய்துகொண்டு வந்திறங்கிய கோஷ்டியைக் கண்ட இந்த மாணவர்களாகிய காளைக் கூட்டத்தினர் நின்று பார்த்துப் பின் ''டேய்...கொரங்குமூஞ்சி மகனுக்குக் கிளிமூக்கு பெண்ணைப் . பாரடா!'' என்று ஒருவன் ஸினிமாப் பாட்டு மெட்டில் இழுத்துப் பாடினான். மற்றவர்கள் குலோ வென்ற சப்தத்துடன் சிரித்தார்கள். அதில் ஒருவன், ''அடேடே! கல்யாணப்பிள்ளை அப்படியே பெண்ணைப் பார்த்து லவ் பண்ணி (லௌ) மோகிச்சு விழுந்துவிடுவான் போலிருக்கிறது. மூஞ்சியெப்பாரு கொரங்கு...என்று பரிகாஸம் செய்து சிரித்தபடியே அந்த கல்யாணகோஷ்டிகள் இறங்கிய வண்டியில் இந்தக் காளையர்களின் கூட்டம் தடதடவென்று விழுந்தடித்துக்கொண்டு ஏறி அட்டகாஸத்துடன் உட்கார்ந்தது.

ஜன்னலுக்கு வெளிப்புறம் தலையை நீட்டி, போகிறவர்களையும் வருகிறவர்களையும் வேடிக்கை பார்த்துச் சிரித்துப் பரிகஸிப்பதில் இவர்களுக்குள்ள ஆனந்தம் வேறெதிலும் இல்லை.

பாவம்! வாழைப் பழம் முதலியன விற்பவனை அனுவச்யமாகக் கூப்பிட்டு ஒன்றுக்கு ஒன்பது விலை குறைவாகக் கேட்டு அவனை அழவைத்தனுப்புவதுமாக விபரீதத்தாண்டவமே ஆடியவாறு இருக்கிறார்கள். வண்டியில் பிறர் ஏறவந்தால் அவர்களிடம் சண்டையிட்டு ஏறுதபடி துரத்துவதில் ஒரு ருசி...

நாட்டுப்புறத்தான்கள் ஏறவந்தால், "அப்பாப்பா! இந்த ரயில் நீ போகிற ஊருக்குப் போகாது; அதோ தெரிகிறதே அதுதான் அந்த ஊருக்குப் போகும் வண்டி" என்று பொய்யைக் கூறி அவர்களை விரட்டியடிப்பதும், பாவம்! அதையே அவர்கள் நம்பி மூட்டை முடிச்சு மனிதர்களுடன் ஓடு ஓடு என்று ஓடுவதைக்கண்டு பெரிதாகச் சிரிப்பதும் ஒரு தமாஷாக எண்ணிச் செய்கிறார்கள்.

இதற்குள் சில மாணவர்கள் புகைவண்டியின் புகைக்குச் சரியாகப் போட்டியிடுவதுபோல் ஸிகரேட் பிடித்து ஆனந்தமடைகிறார்கள். இத்தகைய வைபோகத்தில் ரயில் கிளம்பி விட்டது. இனி கேட்கவேண்டுமா? எத்தனை சினிமாப்பாட்டுக்கள், உதவாக்கரை ப்ளேட்டுப் பாட்டுக்கள் உண்டோ, அத்தனையையும் பாடிக் கும்மாளமடிக்கவும் அந்தப் பாட்டுக்கள் வரும் சினிமாவைப்பற்றிய விமர்சனங்கள் செய்யவும் இறங்கினார்கள்.

இரண்டு சிறிய ஸ்டேஷன்கள் சென்றதும் மூன்றாவது பெரிய ஜங்ஷனில் ஒரு நொண்டிப் பிச்சைக்காரன் கட்டையை ஊன்றியபடியே பாடிப் பிச்சைஎடுக்க வந்தான். அவனை அந்த வண்டியிலேயே ஏறவிடாமல் விரட்டியடித்துவிட்டனர். இன்னும் சில ஸ்டேஷன்களைத் தாண்டியதும் ஒரு பிச்சைக்காரி இடுப்பில் ஒரு குழந்தையைத் தூக்கிக்கொண்டு கையில் ஒரு 5-வயது பையனைப் பிடித்துக்கொண்டு இந்த வண்டியில் எப்படியோ ஏறிவிட்டாள். இந்த காளைகள் எதையோ பார்த்துக்கொண்டிருக்கையில் இரண்டொரு ப்ரயாணிகளும் கூட ஏறினார்கள்.

அவள் ரயிலில் அலைந்து திரிந்து பிச்சைஎடுக்கும் பரம தரித்திரப்பிண்டந்தான்: ஆனால் அவள் சாரீரத்தில் ஜ்வலிக்கும் வைரக்கல்லின் ஜிலுஜிலுப்பான ப்ரகாசமும் நயமும் இனிமையும் எல்லோரையும் ப்ரமிக்கச்செய்துவிட்டன.

கணீரென்ற அவளது இனிய சாரீரத்திற்குப் பக்கத் துணைவாத்தியம் வாசிப்பதுபோல் அந்த 5–வயதுப் பையன் மேல்ஸ்தாயியில் தன் தாயாருடன் சேர்ந்து பாடும் அழகு பின்னும் ப்ரமிக்கச் செய்தது.

உள்ளம் உருகிப்பஜனைசெய்குவோம்: ஓம். ஹரி என (உ)
துள்ளித்திரியும் கள்ளமனத்தின் துடிப்பும் வஞ்சநடிப்புமின்றியே

என்கிற ஷண்முகப்ரியா ராகத்திலுள்ள அருமையான பாடலைப் பாடியபிறகு "தர்ம ப்ரபுக்களே! இந்த பச்சைப்பாலகனுக்குக்

காலணு கொடுங்க" என்று வெகு வணக்கமாயும் மனமுருகியும் கேட்டாள்.

இந்த மைனர்களில் சிலர் "அடேயப்பா! என்ன சாரீரம்! என்ன அகாரம் ரவைஜாதியுடன் கொட்டுகிறது! இத்தனை சுகமாகப்பாடுகிறவள் ஷோக்காக ஸினிமாப் பாட்டுபாடினல் எத்தனை அழகாயிருக்கும்? சினிமாவில் ஏதேதோ தரித்திர மூதேவிகள் கர்த்தபக்குரலுடன் அழுகிறதுகளே! இம்மாதிரி இயற்கையாயிருக்கிற ஆட்களைப் பொறுக்கிப்போட்டால் எத்தனை ஜோராக இருக்கும்!" என்று ஆங்கிலத்தில் பேசிக் கொண்டார்கள். அதற்குள் அங்கிருந்தவர்களில் ஒருவன் "ஏ பிச்சைக்காரி! இந்த பஜனைப்பாட்டும் உண்டைசாத்துப் பாட்டும் வாணும். ஜம்மென்று ஒரு சினிமாப்பாட்டு பாடு பார்க்கலாம்." என்றான்.

பிச்சைக்:—அப்பனே! எனக்கு எந்த சினிமாவும் தெரியாதுங்க. எங்க அப்பாரு எனக்கு இளவயசிலேந்து இந்த மாதிரி பாட்டுதானுங்க சொல்லிக்குடுப்பாரு. எத்தனையோ பாவத்தைச் சேஞ்சு இந்த ஜென்மத்தே எடுத்திருக்கிறேனே, அந்த பாவத்தைத் தொலேச்சு தலேமுழுவுரத்துக்கு சாமி மேலே பத்தியா பாட்டாவது பாடினு பாவம் போவாதா?

"அடே டே டே!...பெரிய வேதாந்தப் பழமாயிருக்கிருப்பா...ஏ. பிச்சைக்காரி! இதோபாரு; இது எந்த காலம் தெரியுமா? கலிகாலம்; சாமி! பூதம்! அது! இது! என்றால் உன் வயிறு நிறையாது. ஈரத்துணியை மடிச்சுத்தான் போட்டுக் கொண்டு தவம்செய்யவேணும். ஏதோ காலத்திற்கு ஏத்தபடி ஜோரா...சினிமா பாட்டு பாடினல் கூடரெண்டு காசு கிடைக்கும்; தெரிஞ்சுதா? எந்த ஓட்டல்முதல் குப்பைத் தொட்டிவரையில் ப்ளேட்டுகளில் சினிமாப்பாட்டுதான் அலறுகிறதே. அதுவா உனக்குத் தெரியாது?...'ஆனந்தமென் சொல்வேனே...என்று ஷோக்கா அப்பிடி பாடுபாக்கலாம்" என்றான் ஒரு மைனர்.

மற்றே:—சேச்சே! அது வேண்டாம்..."உன்னைக்கண்டு மயங்காதபேர்களுண்டோ" என்று விறுவிறுப்பாபாடும்மே!...

இன்னே:—போடா; உன்னைக்கண்டுமாச்சு, என்னைக் கண்டுமாச்சு! அது பழம்புளிச்ச பழயது, யாருக்கடா வேண்டும் இதோபாரம்மா! "காதலினலே'

பிச்சை:-(இடைமறித்து,)ஐயையோ! ...காதலும்கிதலும் இதென்ன சாமி! ஆளுக்கொன்னு ஏதோ சொல்றீங்களே, எனக்கொன்னுமே புரியலீங்களே! சாமிமேலே பாட்றபாட்டைக்காட்டினும் சினிமாப் பாட்டா உங்களுக்கு ஒஸ்தியா இருக்குதுங்க? ஐயோ சாமி! அந்த கன்றுபின்ன பாட்டுலே இன்னுங்க மோட்சம்? எங்க அப்பாரு இதுமாதிரி கூத்துப் பாட்டெல்லாம் பாடவேகூடாதுன்னு திட்டுவாரு, என்னேகூட ஒரு நாடகக்காரன் கூப்பிட்டான். அவனே காரி

உயிஞ்சிட்டுப் போயிட்டேனுங்க...சாமி!...ஏதாச்சும் தர்மம் குடுங்க.

இன்னே:—டேயப்பா! பெரிய வாயாடியாயிருக்கியே. இப்படி ரயில்லே பிச்சைஎடுக்கரத்தைவிட உனக்கு நாடகத்திலே ஆட்ராது இளப்பமாபோயிட்டதா...பயித்தியக்காரி?

பிச்:—சாமி...வயத்துக்கு இல்லேன்னு கையை நீட்டி பிச்சைவாங்கி பொயக் கறத்தை உடமோசமான தல்லவா கூத்தாடிப் போயக்கறது? சேச்சே!...அந்த மாதிரி உசிரெ வளக்கரத்தை விட உட்டுடலாமே!.........சாமி ஏதாச்சும் காலணுபோட்டா போடுங்க. இல்லாட்டிபோனு பேசாமெஇருங்க வீண்சமாசாரம் எதுக்குங்க! இந்த பச்சைப் பாலனுக்கு ஒருவாய் கஞ்சிவாருங்க!



இன்னொரு துடுக்கானபேர்வழி: ஏய்! பேச்சைப் பாத்தா ப்ரமாதமாயிருக்கிறதே! அப்பேர்பட்ட கவுரவமாகப் பிழைக்கிறவளாயிருந்தா நீ உன்கையைஉழைத்துக் கஞ்சி குடித்திருக்க வேண்டும். பச்சைப் பாலகனும் சிகப்புப் பாலகனும் வெக்கமில்லாமே இழுத்துக்கொண்டு வந்து பஞ்சைப் பாட்டு வேறு பாடுகிறாயா... ... போம்மே...!

பிச்சுமணி:—ஏ பிச்சைக்காரி! நீ பெரிய ப்ரஸங்கங்கூடப் பண்ணுவாய்போலிருக்கிறதே. எவ்வளவு படிச்சிருக்கே? எதுக்கு எடுத்தாலும் எங்கப்பா!...சாமி! தர்மம்—இழிவு உயர்வு என்று ஏதேதோ சொல்வதைப்பார்த்தால்......

''சாமி! நானும் அப்போம்பிடிச்சு பாக்கறேன் மனசுள றங்கி வதாச்சும் குடுத்தா குடுங்க; இல்லாட்டிப்போனு பேசாம இருங்க. பிச்சைக்காரியே போயி நீங்க இப்படி பரீச்சை பண்ணறது அயகா இல்லீங்க. நீங்கல்லாம் படிச்ச பெரிய மனுசருங்க, மேதாவிங்க. நான் என்ன சாமி! பிச்சைக்கார நாயிதான். இருந்தாலும் படிச்சவங்களே, படிக்காதவங் களே, பணக்காரங்களே ஏயங்களே அல்லாம் படைச்சசாமி ஒத்தன் இருக்கானே, அவனெ கும்பிடத்தானுங்க எங்களுக் குத் தெரியும். எங்க பெரியவங்களும் அவன் பேரைச் சொல்லி கினுதான் வாழ்ந்தாங்க. அந்த வழிலேயே எங்க காலமும் போறதுங்க. நாங்க ஏழையானுலுங்கூட எங்களுக்கு படிப்பும் ஞானமும் இல்லாட்டிப்போனுக்கூட எங்களுக்கும் பத்தி உண்டுங்க. நாயம் அன்னயம் தெரியுமுங்க. மனுசாளுக்கு முக்யமானது மானம், மரியாதி இதுதானுங்க. அதுவும் எங் களுக்குத் தெரியுமுங்க...பிச்சைக்காரியா வந்துட்டத னுலேயே எங்களுக்கு ஒன்னுமே இல்லேன்னு கேவலமா நெனச்சுப்புக்கூடாதுங்க. பிச்சைக்காரக் கூட்டத்திலேகூட யோக்யரும் உண்டு, அயோக்யரும் உண்டு. இல்லேன்னு சொல்லல்லே, படிச்சவங்க கூட்டத்துலேயும் - பணக் காரக்கூட்டத்துலேயும்கூட ரெண்டும் இல்லீங்களா! சாமீ...

முன்கோபியான ஒரு மாணவன் ''சீச்சீ...என்னடா ரோதனே! பிச்சைக்காரக் கழுதையை ஒரு கல்தா குடுத்துத் தள்ளாமே லொடலொடன்னு என்ன தொணதொணப்பு வேண்டிக்கிடக்கிறது. எடுக்கறது பிச்சை; பேசுவது படே வேதாந்தம். அல்பக்கழுதைகளின் பவிஷு தெரியாதாக்கும்! தே பிச்சைக்காரி! மரியாதையா அடுத்த ஸ்டேஷன் வரும் வரையில் வாயெ அடைத்துக்கொண்டிரு; கதவின்கீழே அகப்பட்ட தப்பளேமாதிரி கத்தாதே'' என்று அவன் சீள் ளென்று சீறிவிழும்போது பிச்சைக்காரியின் கைக்குழந்தை அந்த துடுக்குவாலிபனின் படுக்கைமீது சிறுநீர்கழிந்து விட்டது, அந்தநீர் துணிகள் அடைத்துள்ள பையின் மீதும் விழுந்துவிட்டதுதான் தாமதம்: மணி வாயில் வந்தபடி கண்ணு மண்ணு தெரியாத கோபத்துடன் அந்தக் குழந்தை யின் முதுகில் பளார்பளார் என்று நாலறைஅறைந்து கன் னத்தைப் பிடித்து நன்ருகத்திருகிவிட்டான்.

குழந்தை ஓரேயடியாய் வீறிட்டழ வாரம்பித்தது. புத்தி தெரியாத பச்சைக் குழைந்தையின் செய்கைக்கு இப்படி ஒரு க்ஷணத்திற்குள் அடித்தும் கிள்ளியும் இம்ஸித்ததைக் காண எந்த பெத்ததாயின் உள்ளந்தான் பொறுக்கும்?

பிச்சைக்காரியின் உடம்பே பற்றியெரிகிறதுபோன்ற ஆத்திரம் உண்டாகிவிட்டது. வயிற்றெரிச்சலின் வேகத்தில் 'ஐயையோ!' வென்று கத்திவிட்டாள். குழந்தையை மார்புடன் சேர்த்து அணைத்துக்கொண்டு "ஐயோ! இதென்ன அக்ரமம்! நீங்க செய்யறது தெய்வத்துக்குப் பொறுக்குமா! பச்சைக்குழந்தையின் இந்த செயலுக்கு இப்படியா அதைக் கொண்ணுப்புடறதுபோல அடிப்பது? உங்களுக்கு நெஞ்சு கல்லா, இரும்பா! நீங்க மனுஷாளா! பிசாசா? ஒங்க ஆட்டிலே கொயந்தே குட்டி இல்லையா? ஒங்க கொயந்தெங்க இப்பிடி சேஞ்சாக்கா கொண்ணுபோடுவீங்களா! பச்சைப் பாலகனை பாத்து ஓங்கி கைதுணிஞ்சு இப்பிடி அடிக்கற நீங்க எதுக்குத்தான் பயப்படப்போறிங்க. ஆண்டவன் ஒருத்தன் அல்லாத்தையும் பாத்துக்கிட்டுத்தான் இருக்கறான். இந்த அனியாயத்தை அவன் பொறுக்கமாட்டான். நான் பிச்சைக்காரியானுக்கூட எனக்கும் ஒங்களேபோலே அல்லா உணர்ச்சிகளும் உண்டு. பிச்சைக்காரிக்குக்கூட புள்ளே அருமை ஒங்க அம்மாவுக்கு இருக்கறமாதிரிதான் இருக்கும். இந்த ஒலகம் அறியாத குழந்தையை இப்பிடியா அடிக்கறது? இப்பிடியா என் வவுத்தை எரியப்பண்றது? இதுதானு நீங்கபடிச்ச படிப்பின் நலுமை... இதுக்கு தானு நீங்க பொறந்தீங்க. ஒங்களுக்கு ஈவிரக்கம் வேணுமா? பச்சாத்தாபம் வேணுமா? எடுத்தஜன்மத்துக்கு இந்த அக்ரமந்தானு முக்யம்?...

"என்கண்ணு! அழாதேடா, ராஜா! இந்தப்பாழும் ரயில் எப்போ நிக்கப்போறதோ தெரியல்லேயே! புத்தி இல்லாமே இந்த வண்டிலே ஏறினேன்; ராஜா! என்னப்பனே! அழுவாதேடா" என்று கண்ணீர் வழிய குழந்தையைத் தோளில் சாத்திச் சமாதானம் செய்தபடியே கதவருகிலேயே நின்றாள்.

இந்த மாணவர்களிடையேகூட "இச்செய்கை தகாது... இப்படி அடிக்கக்கூடாது. சின்ன குழந்தைதானே. அதற்குத் தெரியுமா! இதென்ன கண்மூடிச் செய்கை?" என்கிற பேச்சும் எழுந்தது. மாணவர் கூட்டத்தில் சேராத இரண்டுபேர் மிகவும் அங்கலாய்ப்புடன் அவர்களைத் திட்டியதோடு பிச்சைக்காரியைச் சமாதானம்செய்தார்கள். மாணவர்களில் சிலர் கால்ரூபாய் ரெண்டணு காசுகளைப் பிச்சைக்காரியின் மற்றொரு குழந்தையின் கையில் கொடுத்தார்கள்.

பிச்சைக்காரியின் ஆத்திரத்தில் அந்தக் காசைப்பிடுங்கி "சாமி: நீங்க குடுத்த பரிசே போதுங்க. இந்த காசு எனக்கு வாணும். என்கொயந்தே உசிரோடே இருந்தா நானு நல்ல மனுசாகிட்டே பிச்சைவாங்கி சந்தோஷமா பொயப்பேன். என் ராசாவுக்கு இந்த அடியினுலே ஒன்னும் ஆபத்து வாராதிருந்தாபோதும். இந்தமாதிரி இன்னும் யாரேயும் செய்யாதீங்க. திருப்பி ஒங்களே நல்லா திட்டிட்டு போயிடு

வாங்க...என்று சொல்லும்போது ஸ்டேஷனில் வண்டி நின்றது. "ஆண்டவனே! இந்த புத்திகெட்டவங்களுக்குநல்ல புத்தியெகுடு, படிக்கறபடிப்புக்குச் சரியான மதியைக்குடு" என்று சொல்லியபடியே கேவிக் கேவியழும் குழந்தையைக் கண்ணீர் பெருகத் தோள்மீது சாத்தியவாறு சடக்கென்று இறங்கி மறைந்துவிட்டாள்.

மாணவர்களிடையே பெரிய மவுனமும் பரபரப்பும் இதயத்தில் ஏதோ ஒருவித உணர்ச்சியும் குடிகொண்டன. நன்றாக அடித்தவர்கள் மட்டும் தலையை நீட்டி வெளியே பார்த்தார்கள்.

ரயில்வே கேட்டுக்கும் அப்பால் சென்ற பிச்சைக்காரி தன் குழந்தையைச் சமாதானப்படுத்தி பால்கொடுத்தவாறு கண்ணீரைத் துடைத்துக்கொள்வதைக் கண்டார்கள். ஸ்டேஷன்மாஸ்டரின் மனைவியிடம் பிச்சைக்காரி பேசும் மாதிரியிலிருந்து அடித்தவர்களைத் திட்டுவதுபோல் ரயிலைக் காட்டிக் காட்டிக் கையை ஆட்டுவதாலும் முகத்தைச் சுளிப்பதாலும் தெரிந்தது. அடுத்த நிமிஷமே வண்டி தன் கடமையைச்செலுத்த இத்தனைபாரத்தையும் இழுத்துக்கொண்டு நகர்ந்தது.

3

காளைகள் நடனம்—கடிதப்படலம்

விசாலமான பெரிய ஆற்றில் திளைந்து திளைந்து மாணவர்கள் குளித்துவிட்டுப் பின் தாங்கள் தங்குவதற்காகத் தயாரித்துள்ள டேராவுக்கு வந்து, கொண்டுவந்திருந்த ஆகார மூட்டைகளை அவிழ்த்துக் காலிசெய்கையில், ராமு மற்றவர்களைப்பார்த்து "ஏண்டா! இன்றைய தபால்பெட்டியை யாரும் கவனிக்காமல் வந்துவிட்டோமே?" என்றான்.

ரகு:—நானா மறக்கிறவன்? அப்படியே வாரிப் பையில் போட்டுக்கொண்டு வந்துவிட்டேன். அவரவர்களுடைய கடிதத்தைத் தபால்காரன்போல் நான் பொறுக்கிக் கொடுத்துவிடுகிறேன். கடிதத்தை உரக்கப் படியுங்கள். அதொரு தமாஷாய் ஜோராயிருக்கும். கடிதங்களின் பகாராடுபோல் நடத்தலாம்; என்னசொல்கிறீர்கள்?

ரங்கு:—அடேபோடா! சிலருடைய கடிதத்தில் நிறைய ரகசியமிருக்கலாம். ஏதாவது காதல் கீதல்......

சங்கரன்:—சீச்சீ! அப்படிப்பட்டவர்கள் இங்கு யாரடா இருக்கிறார்கள்? என் கடிதத்தை நான் படிக்கிறேனப்பா! எனக்குச் சரியானபடி கிட்டு சம்பாவனைகள் கிடைத்திருக்கும், கேளுங்கள்.

"சிரஞ்சீவி சங்கரனுக்கு ஆசீர்வாதம். உபயக்ஷேமம். உல்லாசயாத்திரையை முடித்துக்கொண்டு தாமதமின்றி

வந்துவிடு. இந்த லீவில் உன் கல்யாணத்தைக் கட்டாயம் முடித்துவிடுவது எனத் தீர்மானமாகி விட்டது....

என்றதைப் படிக்கக்கேட்ட மற்றவர்கள் பெரிதாகச் சிரித்துக் கையைத்தட்டி சங்கரனின் தலையைப் பிடித்து ஆட்டிப் புடைத்துக் குரங்கு சேஷ்டைகள் செய்து "டேய் மாப்பிள்ளே! எங்கேடா பெண்பார்த்திருக்கிறாய்?....ஏண்டா இதுவரையில் எங்களிடம் சொல்லவில்லே? இந்த சந்தோஷச் செய்தியைச் சொல்வதற்கா இட்டு சம்பாவனே கிடைக்கும் என்று ஜோக் பண்ணினாய்?" என்று ஒரேயடியாய் கலாட்டா செய்து கூத்தடிக்கக் கிளம்பிவிட்டார்கள்.

நீலகண்டன்:—டேய் சங்கர்! உன் கல்யாணம் எப்படிடா நடக்கப்போகிறது? உன்னே ஏலம் போடுகிற வ்யாபாரமா? அல்லது மரியாதையான முறையா?....

கோவிந்தன்:—டேய்! இந்த சரக்கு கல்யாண மார்க்கெட்டில் அதிகம் ஏலத்தில் விலேபோகாது. ஏனென்றால் இரண்டுதரம்பரீக்ஷையில் கோட்டடித்த பெருமைஉள்ளசரக்கு பாரு! ஏதோ, ஆயிரம் இரண்டாயிரம்வரையில் பிச்சைக் காசு, போனால் போகலாம்!

கோபா:—சீச்சீ, அப்படி இல்லேடா! கோட்டடித்தது ஒரு பக்கம் இருக்கட்டும். பெரிய போலீஸ் உத்யோகஸ்த ருடைய திருக்குமாரர். அதோடு செல்லமாக ஒரே ஒரு பிள்ளே; நல்ல மன்மதக்குஞ்சுபோன்ற அழகுவீரன். ஆள் நல்ல வாட்டசாட்டமான கட்டைத்தடியன்போலிருக் கிறான். சொத்தும் ஏராளமாயிருக்கிறது. பையன் கல்யாணத் திற்கு முன்பே சாஸ்திரோக்தமாய் ஹோமம் (ஸிகரேட்டு) செய்கிறான். இத்தனே சிறந்த யோக்யதாம்சங்கள் பொருந்தி யுள்ள மாப்பிள்ளேயாகையால் தாராளமாகக் கொள்ளேயடிப் பார்கள். டேய்...என்னடா ஊமைபோலிருக்கிறாய்? சந்தோ ஷம் தலேக்கேறிவிட்டதா...

சிவகுமார்:—தலேக்கேறாமல் வேறு என்ன செய்யுமாம்? உனக்கும் கல்யாணமாகும்போது இந்த ஆனந்த உதய மாகும். அது கிடக்கட்டும். டேய் சங்கர்! நீயோ பணக் காரன். பணம் நிறைய இருப்பவனுக்குப் பெண்வீட்டாரிடம் ஏண்டா பிச்சைக்காசு வாங்கவேண்டும்? நல்ல ஏழை வீட்டுப் பெண்ணேக் கல்யாணம் செய்துகொண்டு ஒரு குடும்பத்திற்கு உதவி செய்தால் எத்தனே நன்றாக இருக்கும்? அதுதான் இல்லே என்றால் வரதக்ஷிணேயாவது வாங்காது கண்ணிய மான முறையில் கல்யாணம் செய்தால் என்னடா...

மணி:—நானும் அப்போதுமுதல் பார்க்கிறேன். அவன் கடிதத்தை மேலேபடித்து முடிக்கவிடாது நீங்களே இப்படி மடக்கிவிட்டால் எப்படியடா அவன் பேசுவான்? இந்த காலத்தின் வெட்கங்கெட்ட நிலேமையின் போக்கில் பணக்கார னும் வரதக்ஷிணே என்கிற பிச்சையைவாங்குகிறான். ஏழையும்

பிச்சை வாங்குகிறுன். அந்த அம்சத்தில் மானஹீனமற்ற முறையை இருதாத்தாரும் ஒன்றுகவே அனுஷ்டித்து அதையே கண்ணியமாகவும் எண்ணுகிருர்கள். இம்மாதிரி செய்யும் பெற்ருேர்களைக் கண்டிப்பதற்கு இனி சர்க்கார் தான் ஒரு சட்டம் விதிக்கவேண்டும். இதைப்பற்றி மகாத்மாஜி ஸேவாசங்கத்தினர்கூட ஒருமுறை ரேடியோவில் பேசினுர்கள்; அதை நாங்கள் மிகவும் ரஸித்தோம்.

ராமு:—அதென்ன விஷயமடா! எனக்குத் தெரியாதே...

மணி:—என் தெரியாது? நீ ரேடியோ கேட்காமல் தூங்கிக்கொண்டிருந்து ஓரே கோட்டைவிட்டுவிட்டாயோ என்னவோ? அதென்னவென்றுல் வரதட்சிணை வாங்கும் பெற்ருேர்களுக்கும் கல்யாணப்பிள்ளைக்கும் 5 வருஷம் கடுங் காவல் தண்டனையும் தலைக்கு 5 ஆயிரம் ரூபாய் அவர்கள் சர்க்காருக்கு வரதட்சிணையாய் அபராதம் கட்டவேணும் என்றும் சர்க்கார்சட்டம் போட்டுக் கட்டுப்படுத்தினுலன்றி இந்தப் பிரா கு ஒழியாது என்று அழுத்தமாகப்பேசினுர்கள். சர்க்கார் எதை எதையோ படித்து ஏதேதோ சட்டம் போடுகிருர்கள். இதற்கோர்சட்டம்போட்டு, கொள்ளையடிக் கும் பிள்ளைவீட்டாரின் கர்வத்தையடக்க முன்வந்தால்தானே! நான் அதிகாரத்திலிருந்தால் சட்டத்தைத் தீட்டிவிட்டுத்தான் மறுகாரியம் பார்ப்பேன்.

மாதவன்:—ஏண்டா! ஏதேதோ வேலைநிறுத்தம் என்று கண்மூடித்தனமாக ஆரம்பிக்கிருர்களே! வரதக்ஷிணை வாங்கிக் கல்யாணம்செய்யும் பெற்ருேர்களிடம் பிள்ளைகள் என் கல்யாணநிறுத்தம் என்கிற சண்டையை ஆரம்பிக்கக் கூடாது என்கிறேன். எங்கவீட்டில் அந்தப்பேச்சுக்கிளம்பினுல் கட்டாயம் நான் நடத்தியேகாட்டுவேன். வெறும் வாய்ப் பேச்சு வீரன் நானல்ல, தெரியுமா!

விச்வம்:—டேய்! 'வரதக்ஷிணையும் சீரும் கொள்ளை யடிக்க விரும்பும் பிள்ளைகளை நாங்கள் மணக்கமாட்டோம்' என்று கன்யாப்பெண்கள் கல்யாணநிறுத்த ஸ்ட்ரைக் செய்தால் வெகு நன்றுகஇருக்கும். பெண்களால் ஆகாத காரியம் என்னடா இருக்கிறது? இப்போதுதான் சகலமான உத்யோகங்களுக்கும்பெண்கள்துணிந்துவரும் காலமாயிற்றே! இதில் இத்தகைய ஸ்ட்ரைக்கு கட்டுப்பாடுடன் செய்தால் இந்தக் கொள்ளைக்கூட்டத்தினரின் திமிர் சற்று அடங்கும்.

சுப்பு:—சற்று அடங்குமா? முற்றிலும் அடங்கிவிடும். என்னுடைய அத்தை மகள் B. A. பாஸ் செய்துவிட்டு மேலும் M. A. க்குப் படித்தாள். அப்போது ஒரு நல்லவரன் அவளை மணக்கவந்தது. ஒரே தீர்மானமாய் வரதக்ஷிணை வாங்கும் பிள்ளையானுல் எனக்குவேண்டாம் என்று உறுதி யாகக்கூறினுள். இவளையே மணக்கவேண்டும் என்கிற ஆசையால் பையன் பிடிவாதம்செய்தான். அவன் பெற்ருேர்

களோ 5 ஆயிரம் ரூபாய் வரதக்ஷிணைக்குக் குறைந்துபண்ண முடியாது என்றார்கள். கடைசியில் பையன் பெற்றோர் இல்லாமலேயே இந்த விவாகத்தை முடிப்பதாகக் கூறினான். அதற்கும் அந்தப்பெண் சம்மதிக்காமல் அவர்களை இணங்கும் படிக்குச் செய்துவிட்டாள். கல்யாணமாகி ஜம்மென்றிருக் கிறார்கள். இந்த வரதக்ஷிணை வாங்காததின் பலன் அவர்கள் பெண்ணுக்கும் வரதக்ஷிணை கொடுக்காது கல்யாணம் நடந்தது...சரி!...மேலே கடிதத்தைப் படிக்கட்டுண்டா, கேட்போம்...உம்..சங்கர் படிடா''.. என்றான். சங்கர் படிக்க ஆரம்பித்தான்:

''ஏற்கெனவே நான் உனக்கு எழுதியிருந்த பூர்ண கும்பத்துப் பெண்ணைத்தான் முடிவுசெய்திருக்கிறேன். ஜாதகவிஷயம் மற்ற எல்லாம் முடிவாகிவிட்டது. எதிர் ஜாமீன் 5 ஆயிரம் நான் கேட்கிறேன். அவர்கள் 3 ஆயிரம் கொடுப்பதாகக் கூறுகிறார்கள். அதுவிஷயத்தில்தான் சிறிது தாமதமாகிறது...

மறுபடியும் மாணவர்கள் ஓரே எக்காளமிட்டுக் கேலி செய்யக் கிளம்பிவிட்டார்கள்...''பஸ்டு க்ளாஸ் பையன். 5 ஆயிரம் ரூபாய்! 5 ஆயிரம் ரூபாய் !! யாருக்கு ஏலத்தில் வேணும்! கேளுங்கள்! கேளுங்கள்!...ஒருதரம்...இரண்டுதரம்'' ...என்று சுந்து பெரிய கலாட்டாவே செய்யவாரம்பித்தான்.

பரமசிவம்:—டேய் சங்கர்! என்னடா இதற்குப் பதில் எழுதப்போகிறாய்? 5 ஆயிரம் போதாது. 10 ஆயிரம் வேணும் என்று எழுதுகிறாயா?...

சந்தானம்:—சேச்சே! அது சரியல்ல. பையனை ஒரு தட்டிலும் பணத்தை ஒரு தட்டிலும் வைத்து துலாபாரம் போல் வரதக்ஷிணைபாரம் எடைப்போட்டுப் பணம் கொடுத்தால்தான் செய்துகொள்வேன் என்று எழுதுடா! நீ என்னவோ கொட்டாப்புளி மனிதன். 150 பவுண்டு இருக்கிறாய் ...என்றான். எல்லோரும் கொல்லென்று சிரித்தார்கள்.

ரகு:—ஏண்டா! கடிதங்கள்மகாநாட்டில் இன்னும் ஒரு கடிதத்தில் பாதிகூட முடியவில்லையே. இதையே இப்படி அரட்டையடித்துக்கொண்டிருந்தால் மற்றகடிதங்கள் படிப்பதுஎப்போது?...சங்கர்! கடகடவென்று மூச்சுவிடாமல் படித்துவிடு. வரதக்ஷிணைக்கு இடம் போரதக்ஷிணையாக்கி பதிலும் எழுதிவிடு—என்றான். சங்கர் மீண்டும் படிக்கவாரம்பித்தான்:

''பெண்மிகவும் அழகாயிருப்பதால் 3 ஆயிரம் ரூபாயாக இருந்தால்கூடப்போதும்; ஒப்புக்கொள்ளு... என்கிறாள் உன் தாயார். நீ என்னசொல்கிறாய்? உடனே வந்துசேரு.

இதைப் படித்ததும் சங்கர் பதில்சொல்லாது யோசித்தான் ''தூத்தூ! சில பிள்ளைவீட்டுக்காரர்களுக்கு மான

ஹீனமே இல்லை. தான் காலணு செலவுசெய்யாமல் கூறை, தாலி, சகலமும் பெண்வீட்டாரையே செய்துகொள்ளச் சொல்லிவிட்டு தடிமரம்போல ஒருபட்டாளம் பேர் சாப்பாட்டிற்குவந்து உட்காருகிருர்கள். இதைக்கண்டாலே எனக்குப் பிடிப்பதில்லை. பெண்வீட்டாரும் சக்தியானுஸாரம் செய்யட்டும். பிள்ளைவீட்டாரும் புடவைகள் ஏதோ முடிந்தவரையில் ஆபரணங்கள் முக்யமான மாங்கல்யம் செய்து கல்யாணத்தைப்பண்ணிய முன்காலத்து வழக்கம்தான் அழகாயிருக்கிறது. அதைவிட்டுப் பெண்வீட்டாரையே சுரண்டுகிறவர்கள் மனிதர்களேயல்ல. பெருங்கொள்ளைக்காரர்கள். பிசாசுதான்" என்று ஆத்திரத்துடன் கூறினுன் துரைராஜன்.

ராமு:—டேய்! நாம் படித்துப் பட்டங்கள்பெற்றதற்கு அடையாளமாய் ஒரு ப்ரதிக்ஞை செய்துகொள்வோம்; வரதக்ஷிணைவாங்காது கல்யாணம்செய்தால்ஒப்புக்கொள்வோம்; இல்லையேல் பெற்றோர்களை அழவைப்போம்; சரிதானு! ''வரதக்ஷிணை ஒழிப்புச்சங்கம்' என்று ஒரு சங்கம் ஆரம்பித்து நாம் தீவிரமான ப்ரசாரம்செய்து வெற்றிபெறலாம். இதற்குச் சம்மதமானவர்கள் கைதூக்குங்கள்... என்றுன்.

ஒரே காகோஷமும் ஆரவாரமும் அந்தஇடத்தில் எதிரொலித்தது. பிறகு, ஸேதுராமன் கடிதத்தைப் படிக்க ஆரம்பித்தான்.

> சிரஞ்சீவிக்கு மங்களம். உபய க்ஷேமங்கள். நீ லீவு விட்டஉடனே வந்துவிடுவாய் என்று உன் குட்டித்தம்பியும் அங்கச்சியும் தினம் எதிர்பார்க்கிருர்கள். குடும்ப வருத்தம் தெரியாமல் தாம்தூம் என்று செலவுசெய்வதாக உன்மீது புகார் விளைவதைக்கேட்டு நான் வருத்தப்படுகிறேன். நல்ல பையன். மிக்க யோக்கியனுயும், அடக்க ஒடுக்கத்துடனும் இருக்கிருன்; சிக்கனமாக வாழ்கிருன் என்கிற சிறப்புவார்த்தைகளை நான் கேட்கும் பாக்யத்தைச் செய்யவில்லையே என்று விசனப்படுகிறன். உன்னை நாங்கள் எத்தனை கஷ்டப்பட்டுப்படிக்கவைக்கிருேம். என்பதை நீ உணராதது நாங்கள் பண்ணின பாவந்தான். உன் பரீக்ஷைக்குக் கட்டுவதற்குப் பணம் அகப்படாமல் அம்மாவின் கையிலிருந்த ஒரே ஒரு தங்கவளையலையும் விற்றுப் பணத்தை யனுப்பினேன். இப்படி நாங்கள் கஷ்டப்படுவதை நீ கொஞ்சமாவது நினைத்துப் பார்க்காமல் உல்லாஸயாத்திரையாம் உபத்திரவயாத்திரையாம் இதெல்லாம் எதற்கு? லீவு விட்டஉடனே நீ வந்திருந்தால் ஒரு பத்துருபாயாவது தண்டச்செலவு இல்லாதிருக்குமல்லவா? இனியாவது இதோடு ஊர்வந்து சேரு. இன்னும் வீண்செலவு வைக்காதே. மாணவர்கள் வாழ்க்கையில்டம்பாசாரித்தனத்தைத்தான்காண்கிறேம் அமைதி

யும் சாந்தியும்கூடிய வாழ்வைக் கடைப்பிடிக்கும் உத்தமர் யாரோ?.....

இக்கடிதத்திற்கு எத்தகைய ஆரவாரமும் இல்லை. சிரிப்புமில்லை. 100 க்கு 99 பேர் இதேரீதியில் வாழ்வை நடத்தும் மைனர்களாகையினல் அனேகமாய் எல்லோருடையவாழ்க்கையிலும் இதே பல்லவியைப் பெற்ரோரிடம் கேட்டவர்களே.

"உம். இதென்னராமாயணம்? ஏதோ மாணவர்கள் வாழ்க்கையில்தானே சுதந்திரமான சந்தோஷத்தைக்காணலாம்; இதை அறியாத கர்நாடகப்பெற்ரோர் இப்போதுமுதல் நம்மையும் கவலையிலாழ்ந்து சாகச்சொல்கிருர்கள். போடா! லொடலொட்டைக் கடிதம்...வேறு படியுங்கடா!" என்ருன் சோமசேகரன்.

இன்னும் சிலருடைய கடிதங்களும் இதேமுறையில்தான் இருந்ததால் ஒன்றும் ரஸிக்கவில்லை. விச்வநாதன்கடிதத்தைப் படிக்கவாரம்பித்தான்.

"விச்சு...உன் பரீக்ஷைவேளையில் உனக்கு இவ்விஷயத்தைஎழுதி உன் மனத்திற்கு தொந்தரவு கொடுத்துப் பரீக்ஷைக்கு ஹானி விளைவிக்கக்கூடாதென்று அப்போது எழுதவில்லை. இப்போதும் பயந்துவிடாதே. எந்தத் தொழிலை நடத்தினுலும் அந்தத்தொழிலுக்கு ஏற்ற முக்கிய சிறந்த குணங்கள் இல்லாவிட்டால் அவர்கள் எந்தத் தொழிலுக்கும் லாயக்கற்றவர்கள் என்று தள்ளிவிட வேண்டும். முக்கியமாக பொறுமை, அமைதி, சாளமாய்த் தட்டிக்கொடுத்து போதிக்கும் சாமர்த்தியம் முதலிய நல்லகுணங்கள் இருக்கிறதா என்ற முதல் பரீக்ஷையை உபாத்தியாயினிகளுக்கு முதலில் செய்துபார்த்துப் பிறகு தொழிலைக்கொடுக்கும் முறையை அனுஷ்டித்தால் தேவலை என்றுகூடத் தோன்றிவிட்டது. ஏனென்ருல் உன் செல்வத்தங்கை இந்திராவின் கணக்கு உபாத்தியாயினியின் செய்கை அப்படி வயிறெரியும்படியாயிற்று.

வகுப்புக்குமீறிய ஏதோ பாடத்தைதக்கொடுத்து அது சரியாகப் படிக்கவில்லை, எழுதவில்லை என்பதற்காக வகுப்பிலுள்ள மாணவிகள் அத்தனைபேர்களையும் ஏககாலத்தில் தயை தாக்ஷண்யம் இன்றி தனது ருூலுக்கு மீறி 100 - தோப்புக்கரணம் போடச்செய்தாளாம். அந்த ராக்ஷஸச்செய்கையின் பலன் உன் தங்கை ஓரே படுக்கையாக ஒரு வாரம் கிடந்தாள். இந்த பயங்கரமான அசட்டுத்தண்டனையைக்கண்டு மாணவிகளின் பெற்ரோர்கள் கடுஞ்சீற்றங்கொண்டு வசைபாணத்தைப் ப்ரயோகித்தார்கள். இனியாவது அந்த உபாத்தியாயினிக்கு புத்திவருமென்று நினைக்கிறேன். இந்திரா பரீக்ஷைக்குக்கூட போகமுடியாதஅளவு உடல்நலம்

கெட்டுவிட்டது. அதோடு எப்படியோ பரிக்ஷையும் எழுதி பாஸ்செய்துவிட்டாள்.

நீயோ ஆத்திரக்காரன். நீ உபாத்தியாயர்தொழிலுக்காக L. T படிக்கவேணும் என்று ஆசைப்பட்டு எழுதுகிருயே, "அந்தத்தொழில் உனக்குலாயக்கில்லே. இந்திராவின் உபாத்தியாயினிபோல் நீ நடத்திவிடுவாய் என்று நான் பயப்படுவதால் அந்த ஆசையை விட்டுவிடு. உபாத்தியாயர் தொழில் என்ருல் சாமான்யமில்லே. மாணவிகளின், மாணவர்களின் வருங்காலவாழ்க்கை பூராவும் இவர்களுடைய உத்தமமான போதனையிலும் அன்பிலும் அடங்கிக்கிடக்கிறது என்பதை முதலில் உணர்ந்து, மாணவர்கள் என்றென்றும் கொண்டாடும் முறையில் நடப்பவர்கள்தான் சரியான உபாத்திமைத் தொழிலுக்கு ஏற்றவர். பெரியகுற்றம் செய்துவிட்டவர்களைத் தண்டிப்பதுபோல் அசட்டுப்பிசட்டென்று இந்திராவின் உபாத்தியாயினி செய்துவிட்டதுபோல் நீயும் பெயரெடுக்காமல் ஏதாவதொரு க்ளார்க்குவேலே கிடைத்தாலும்போதும். த்ருப்தியடை. மாணவர்களே அடித்தும் திட்டியும் தோப்புக்கரணம் போடவைத்தும் போதிப்பவர்கள், முறை தவறியவர்களாவார்களேயன்றி அவர்களே உலகம் கொண்டாடாது. இதை நாம் இங்கு யோசித்துக்கொள்ளலாம். உடனே வரவும்."

இதைப்படித்துக் கேட்டதும் உபாத்தியாயர்களேப் பற்றிய விமர்சனமும் வம்பும் பலமாக நடந்தது. அடுத்தபடியாக நாகராஜன் படிக்கவாரம்பித்தான்.

"உன் கடிதத்தை நான் வெறுக்கிறேன். உன் சிநேகிதன் பணக்காரன் என்பதற்காக நீ உன் சக்திக்கு மீறி அவனுக்குப் பரிசளிக்கவேண்டும் என்று செய்தது எந்த நியாயம்? பசிஏப்பக்காரனேக் கவனிப்பாரைக்காணவில்லே. புளி ஏப்பக்காரனுக்கு விருந்திட்டுக் களிப்பதா பெருமை? மகாதேவன் பணக்காரன். அதற்காக அவனுக்கு 100 ரூபாயிக்குக் கடனுவது வாங்கி தங்க மோதிரம்செய்து கொடுத்ததைப் பெருமையாகஎழுதும் அதே கை 'சேஷாத்ரி ஏழை அவனுக்கு 5 ரூபாய் பணமாக ஓதியிட்டேன்' என்று எழுதியிருக்கிறது. இதுவா நியாயம்? அந்த பணக்காரனுக்கு நீ 5 தம்பிடிகூட கொடுக்காமல் ஏழைப் பையனுக்கு 100 ரூபாயைப் பணமாகக் கொடுத்திருந்தால் எத்தனை உபயோகமாயிருந்திருக்கும்? நீ பணக்கார மகாதேவனுக்கு 100 ரூபாய் கொடுத்ததை அவன் லக்ஷியமே செய்திருக்கமாட்டான். ஏனென்ருல் பணத்தின் அருமை அவனுக்கு எப்படித் தெரியும்? இந்த நூறு ரூபாயைப் போல் எத்தனையோ பேர்கள் கொடுத்திருக்கலாம். ஆயிரம் ஆயிரமாயும்

கொடுத்திருக்கலாம். அந்த முறையில் நீ கொடுத்தது த்ருணமாகத்தான் அவனுக்குத் தோன்றியிருக்கும். 5.ரூபாய்கொடுக்கப்பட்டவன் அதைசின்னவெத்திலை செலவுக்குக் கொடுத்திருப்பான். அதில்கூட அவன் த்ருப்தியடைந்திருப்பான். உலகத்தில் நீ பிறந்திருந்தும் உலகத்தைச் சரியானபடி உணரவில்லை. சேஷாத்ரி கல்யாணத்திற்குப் போகாமல் பணக்காரக்கல்யாணத்திற்குப் போனதாக நீ பெருமையாக எழுதியிருப்பதை நான் வெறுக்கிறேன். நம்நிலத்தில் வேலைசெய்யும் கந்தனுக்குக் கல்யாணமாயிற்று. கல்யாணச்செலவுக்காக 250 ரூபாய் கொடுத்ததோடு நானே ஜம்மென்று உட்கார்ந்து கல்யாணத்தைநடத்தினேன். அவன் அடைந்த சந்தோஷம் கூறத்திறமில்லை. நீ எத்தனைபடித்தால் என்ன? உயர்ந்த நோக்கமும் பரந்தஎண்ணங்களும் சிறந்த பழக்கமும் கொஞ்சங்கூட அடையவில்லை. இத்தகைபபழக்கவழக்கங்கள் எல்லாம் உனக்கு உண்டாக்குவதற்காகவேஉன்னை ஹாஸ்டல்வாஸத்திற்கு அனுப்பியதற்குப் பலன் தலைகீழாகிவிட்டது. இனியாவது இம்மாதிரி குறுகிய மனோபாவமில்லாது விசாலபுத்தியுடன் இருப்பாய் என்று நினைக்கிறேன். நல்லவேளையாகச் சில அதிகப்ரசங்கிகளின் சகவாஸத்தினால் நாஸ்திகனாக ஆய்விடாமல் தினம் கோயிலுக்குப்போவதாயும் தோத்திரப்பாடல்கள் படிப்பதாயும் எழுதியிருப்பதுபற்றி மிக்க சந்தோஷம். சீக்கிரம் வந்துசேரு''

இதைப் பற்றிய மிகப் பெரியவிவாதங்கள் கிளம்பின. ஏழைகளை அவமதித்து அலக்ஷியம் செய்வதும் பணக்காரர்களையே கொண்டாடி வால்பிடிப்பதும் மிகவும் கேவலமானது. இருதரத்தாரையும் சமமாக பார்த்துப்பழகுவதுதான் உசிதம் என்ற தீர்மானத்திற்கு வந்தார்கள். பிறகு மணவாளன் படிக்கவாரம்பித்தான்.

''அண்ணா! நீ வரும்போது நம்பகோடியாத்துப்பாட்டியின் கொள்ளுப்பேத்தி கோமளா வீட்டிற்குப்போய் அப்பளாக்கல்லும் சின்ன எந்திரமும் வாங்கிண்டுவரும்படி பாட்டி எழுதச்சொன்னாள். எதித்தவீட்டு ஏகாம்பர மாமாவுக்கு கொஞ்சம் கோதுமை வேண்டுமாம். 5 படி கிடைத்தால்கூடப் போதுமாம். அதையும் வாங்கிக் கொள்ளு. நம்மவீட்டுக்கு 5 படி வீதம் பருப்புகள் வாங்கிக்கொண்டுவா''...

''சேச்சே.. இதென்னகடிதமடா! பெரியசுமைதாங்கிபோல் அம்மி, கல்லுரல் எல்லாம் கொண்டுவரச்சொல்லி எழுதுவா போலிருக்கிறதே! சப்புசவுக்கென்ற கடிதம் போதும். சரி. வெயில் நன்றாகத் தாழ்ந்துவிட்டது. நாம் வெளியேபோய் பார்க்கலாம்''என்று சாமான்களுக்குக்காவலிருக்கஒருஆளைமட்

டும் வைத்துவிட்டு மிகவும் குஷியுடன் கிளம்பிச்சென்றார்கள். குளுகுளுவென்ற காற்று வெகுரமணீயமாய் வீசியது.

4

ஆனந்தமும் அமளியும்

இயற்கைக் காட்சிகளைக்கண்டு புகைப்படம் பிடிக்கிறவர்கள் அதிலீடுபட்டார்கள். குசாலாகப்பாடுகிறவர்கள் பாடவும் சித்திரம்வரைகிறவர்கள் அந்த இன்பத்திலீடுபடவும் கட்டுரை காவியம் எழுதுகிறவர்கள் அதிலும் தம்தம் இஷ்டம் போல் ஆரம்பித்தார்கள். கும்மாளமடித்துக்குதித்துப் பின் இருட்டினதும் கூடாரத்திற்கு வந்துசேர்ந்தார்கள். மறுநாள் அருகிலுள்ள ஊர்பூராவும் சுற்றிப் பார்த்துவிட்டு மலை உச்சிவரையில் ஏறிஇறங்கி இன்பசாகரத்தில் ஆழ்ந்துப்பின் மூலைக்கொருவராய்த் திரிந்தவாறு ஆளுக்கொரு சினிமாப் பாட்டைப்பாடி ரஸிக்கும்போது குபீரென்று ஒரு பெரும் புயற்காற்றும் பயங்கரமான கருமேகங்களைக்கக்கிக்கொண்டு வானம் சூழ்றி, நடுநடுங்கும்படியான இடியும் மின்னலும் உண்டாகிஅடுத்தக்ஷணத்திலேயேபெரும்மழை ஆரம்பித்தது.

தம்தம் மனம்போன போக்கில் பிரிந்து திரியும் மாணவர்கள் இந்த பயங்கரத்தைக் கனவில்கூட நினையாது மதோன்மத்தமாகத் திரிந்தசமயம் ப்ரளயம்போல் வந்து விட்டதைக் கண்டு நடுநடுங்கிப்போய் ஒருவரையொருவர் காணமுடியாதபடி காற்று சுழற்றிச்சுழற்றி அடித்துத் தள்ளுகிறது. இருளும் கப்பிக்கொண்டு இராக்காலம் வந்து விட்டதால் ஒருவரைபொருவர் சொல்லிக் கூப்பிடுகிறார்கள். இடியின் ஓசையில், காற்றின் பெரும் உறுமல்போன்ற சப்தத்தில் எதுவுமே காதுகேட்காது. கரடு முரடான கல்லிலும் முள்ளிலும் புரட்டி அடிக்கும் பரிபவத்தைச் சகிக்கமுடியாது. எப்படி எப்படியோ சிதறிப் பிரிந்து தத்தளிக்கின்றார்கள்.

அந்த ஆபத்தான நிலைமையில்தான் ஒவ்வொருவருக்கும் உண்மையானபாசமும்,பெற்றோரிடம் மதிப்பும் பெற்றோர்கள் பெரியோர்கள் ஆசாரியர்கள் முதலியவர்களின் மிகப் பரிசுத்தமான அன்பு நிறைந்த தூய உள்ளத்தின் தன்மையும் பகவான் ஒருவன் ரக்ஷகன் ரக்ஷிக்கக் காத்திருக்கிறான்; அவனை பஜித்தால் விபத்துக் கடலையும் நீந்திவிடலாம் என்கிற எண்ணமும் பளிச்பளிச்சென்று உண்டாகியது.

தாம் சிறியவயதுமுதல் படித்துவந்த பாடபுத்தகத்திலுள்ள நீதிகள் முற்றும் அப்போது அதன் ஸாரத்தை அறிய ஆசையுமில்லை. அறிய முயலவுமில்லை. பரீட்சை பாஸ்செய்து விட்டால் போதும் என்கிற ஒரே எண்ணத்துடன் ஏதோ மெஷின்போல்பாடங்களைப்படித்தார்களேயன்றி அதைப்பற்றி

நினைத்துக்கூடப் பார்க்கவில்லை. அந்த புத்தகங்களில் உள்ள பாடல்கள் திடீரென்று நினைவுக்கு வந்தன:

“துப்புடையாரை அடைவதெல்லாம்
சோர்விடத்துத் துணையாவரென்றே,
ஒப்பிலேனாகிலும் நின்னடைந்தேன்
ஆனைக்கு நீயருள் செய்தமையால்,
எய்ப்பென்னைவந்து நலியும்போது அங்கு
ஏதும் நானுன்னை நினைக்கமாட்டேன்
அப்போதைக்கு இப்போதே சொல்லிவைத்தேன்
அரங்கத்தரவணைப் பள்ளியானே.”

— பெரியாழ்வார்

தத்வோபதேசத்தின் உண்மைநிதர்சனம்போல் ஒருவருக்ொருவர் சம்பந்தமில்லாது மூலைக்கொருவராய் தள்ளப்பட்டுவிட்டசமயம் அவரவர்களின் உள்ளத்தில் கொந்தளித்த உணர்ச்சியும் பயங்கரமும் எண்ணிக்கைக்கு அடங்காது மீறிவிட்டது. “ஐயோ! இப்படியேஇறந்துவிடுவோமோ? அப்படியாயின் நம் பெற்றோர்களின் கதி என்னவாகும்?...மக்கள் மனிதர்கள் இல்லாத இத்தகைய பயங்கரப்புசல்காற்றிலா மாண்டுபோகும்படி விதியமைந்தது?.. அடாடா! என்னால் என் பெற்றோர்கள் எத்தனை நன்மைகளை பலன்களை எதிர் பார்த்தார்கள்?...என் மனைவி கல்யாணமானபிறகு என்னை இன்னும் சரியாகக்கூடப் பார்க்கவில்லையே! அவள் கதி என்னவாகும்?...என் உடன்பிறந்த சகோதரி என்னையே சகலமும்என்றுநம்பி இருக்கிறாளே அவள்கதிஎன்னவாவது?”... என்றுஅவரவர்களுடைய நிலைக்கேற்றவாறு எண்ணித் துடிக்கிறார்கள்.

காற்றும் மழையும் நிற்கும் வழியையே காணவில்லை. யார்யாரை எங்கு தள்ளிப் புரட்டியடிக்கிறது என்றும் தெரியாது கும்பிருட்டில் தவிக்கிறார்கள். தங்களுடைய காலம் இதோடு முடிந்துவிட்டதாகவே சிலர் எண்ணி அதே அதிர்ச்சியில் சோர்ந்துவிட்டார்கள்.

பிச்சுமணி அங்குள்ள இயற்கைக் காட்சிகளை வெகு அற்புதமாய் சித்திரம் தீட்டிக்கொண்டிருக்கையில் இருட்டிவிட்டதால் எழுதுவதை நிறுத்தி யோசித்துக் கொண்டிருக்கையில்இத்தகையபேரிடிமுழக்கத்துடன் வந்த பெருங்காற்று மழையில் அவனை ஓரே சுழற்று சுழற்றி அடித்துப் புரட்டிக் கொண்டேபோய்விட்டது. சித்திரமும் அதற்கான சாமான்களும் எங்கு சிதறி எப்படியாயிற்று என்றதை உணரக்கூட முடியாதவாறு சுழற்றி அடித்துவிட்டது.

கல்லும் முள்ளும் உடம்பில் கீறி மகத்தான பாதையை உண்டாக்கியது. “என்னுடைய அருமைத்தாயார் போக வேண்டாம் என்று தடுத்தும் அதைக்கேளாமல் வந்ததற்குப் பலன் என்பிணங்கூட என் தாயாருக்குக் கிடைக்காது

போலிருக்கிறதே! பெரியவர்களுடைய வார்த்தையைத் தட்டிய தன் பலன் இதுதான் போலும். அடாது செய்தால் படாதுபடுவர் என்ற பழமொழி சரியாகிவிட்டதே. திக்கோ திசையோ ஒன்றுமே தெரியவில்லையே! இந்த நிர்மாநுஷ்ய மான இடத்தில் எப்படி கரை காண்பது? ஆகா! மதோன் மத்தமாகத் திரிந்தகாலத்தில் பகவானைப்பற்றி நினைக்காது திமிருடன் திரிந்த நான் முறையிடும் இந்த தீனக்குரலைக் கேட்டு அவன்மதிப்பானா! என்னிடரைத்தீர்ப்பானா? ஆபத் ரக்ஷகா! பக்தபரிபாலா!'' என்று கத்துகிறான்.

தன்னம்பிக்கை அடியோடுகுறைந்துவிட்டது. செடியும் கொடியும் எங்கு பார்த்தாலும் உடம்பில்பட்டுத் துணிகளைக் கிழித்து உடம்பையும் ரத்தகாயப்படுத்தி தாங்கமுடியாத வேதனையை உண்டாக்கிவிட்டது. இத்தகைய பயங்கரப் புயல் காற்றுமழையை இவர்கள் பார்த்ததே இல்லையாதலால் பிச்சுமணிக்கு இந்தஅதிர்ச்சியைத்தாங்கமாட்டாது மயக்கம் வந்துவிடும் நிலைமை உண்டாயது.

தன் சகாக்கள் எங்கு எப்படியானார்களோ! என்று தவிக்கிறான். சுமார் இரண்டு மணிகாலம் இம்மாதிரி கடும்புய லுடன் மழைபெய்தபிறகு சற்று காற்றின் கடுந்தாண்டவம் குறைந்து மழைமட்டும் பலமாக அடித்துக்கொண்டி ருந்தது. இருட்டுக்கருக்கல் வாங்கவேஇல்லை. பிச்சுமணியால் அதற்குமேல்சற்றும்தாளமுடியாமல்சோர்ந்துபோய், விழுந்து விட்டான். பின்னும் சிலநிமிஷங்கள் கழித்து மெல்ல கண்ணைத் திறந்து பார்த்தான். இதயம் துடிக்கிறது. கண்ணீர் அருவிமழையின் வெள்ளத்துடன் போட்டியிடுகிறது.

கால்களும் கைகளும் ஓய்ந்து சோர்ந்துவிட்டநிலைமையில் சுற்றுமுற்றும் பார்த்தான். சிறிதுதூரத்தில் மினுமினும் பூச்சி பறப்பதுபோல் விளக்கின் வெளிச்சம் தெரிந்தது. பகவானை வேண்டித் துதித்ததற்கு பகவான் கிருபை செய்து விட்டதாக ஒரு தனித்த நம்பிக்கை உண்டாகியதும், அந்த பரிசுத்தமான நம்பிக்கை என்கிற வேகத்தினால் அவன் இதயத்தில் இதுகாறும் காணாத ஒரு தூய்மையைக் கண்டு வியப்புற்றான். தூயஉள்ளம் படைத்துள்ள மகான்களைப்பக வான் எப்போதும் இதே உணர்ச்சியுடன்தானே வைத்திருப் பார் என்றும் தோன்றியது.

5

கடவுளின் லீலை—படிப்பினை சாலை.

மெல்லத் தட்டித்தடுமாறியவாறு அந்தவிளக்கு எரியும் வெளிச்சத்தைக் குறிபார்த்துக்கொண்டு அங்குவந்தான். சகாக்கள் யாராவது இங்கிருப்பார்களா? இதுாயில்கேட்டோ

வெள்ளை கேட்டோ ஏதாவதிருக்குமா!... என்றஎண்ணத்துடன் வந்தவனுக்கு மிகச்சமீபத்தில்வந்தபிறகுதான் சிறுசிறு குடிசைகள்மட்டும் இருப்பது தெரிந்தது.

ஜோவென்ற மழையின் அலறலையும் பிறிக்கொண்டு அந்த மிகச் சிறிய ஏழைகுடிசைக்குள்ளிருந்துநான்கைந்து குரல்கள் ஒன்று சேர்ந்து...“ உள்ளம் உருகிப்பஜனை செய்தோமே” என்கிற பாட்டின் ப்ரம்மானந்த ஒலி கேட்டதும் திடுக்கிட்டான்... முதல்நாள் ரயிலில் இதேபாட்டை ஒரு பிச்சைக்காரி பாடியது பளிச்சென்று நினைவிற்கு வந்ததுடன், ரயிலில் நடந்த சகலமும் குபீரென்று நினைவுக்கு வந்து ஒரு குலுக்கு குலுக்கியது.

ஏற்கெனவே குளிரால் நடுங்கி விரைத்துள்ள பிச்சுமணிக்கு இன்னும் சரீரம் நடுங்கி ஆடத்தொடங்கியது. நிற்கமுடியாது துவண்டுபோய்த் தன்னை மறந்து கூச்சலிட்டவாறு விழுந்துவிட்டான்.

பாட்டின் மத்தியிலும் இந்த தீனமான குரலைக்கேட்டு பாட்டை நிறுத்திவிட்டுக் கவனித்தார்கள். ஏதோ சப்தம் கேட்பதை உணர்ந்து ஒருத்தி மெல்ல குடிசையின் தட்டிக் கதவைத் திறந்துகொண்டு வெளியே எட்டிப்பார்த்தாள்.

யாரோ ஒரு ஆள் விழுந்திருப்பதைக்கண்டு திடுக்கிட்டு மெல்ல அருகில் வந்தாள். விளக்கு காற்றுக்கு நிற்காது படக்கென்று அணைந்துவிட்டதால் மறுபடியும் ஏற்றி குடிசைக்குள் வைத்துவிட்டு வந்து பார்த்தாள்.

குளிரால் விரைத்து நடுங்கும் பிச்சுமணிக்கு ஸ்மரணையே தப்பிவிட்டது. “ஐயோ பாவம்! யாரோ இந்த காத்து மழையில் அகப்பிட்டுகிணுங்க...சாமீ சாமீ!...எயுந்து இப்படி உள்ளாரவாங்க” என்று வெகுகனிவுடன்கூறினாள். தன்ப்ரக்ஞை தனக்கில்லாது விழுந்துள்ள மனிதனின் உயிர்இருக்கிறதோ இல்லையோ என்கிற சந்தேகம் உண்டாகியது.

பக்கத்துக்குடிசையிலிருந்த ஒருவனை அழைத்துஇவனைத் தொட்டுப்பார்க்கச் செய்து ஈரத்துணியை மாற்றி பக்கத்திலுள்ள வண்ணானிடமிருந்த வேறுஉடையை அணிவித்து செத்தை குப்பைகளைக் கொளுத்திக் கணப்புமூட்டியதோடு சுடச் சுட ஜலத்தைக் காய்ச்சி அவன் முகத்திலும் உடம்பிலும் ஒத்தியதோடு சுடுஜலத்தையும் வார்த்துக் குடிக்கச் செய்தார்கள்.

சுமார் அரைமணி நேரமாகியபிறகு பிச்சுமணி சற்று தெளிவுபெற்றுக் கண்ணைத்திறந்து பார்த்தான். சற்றுமுன்பு குளிரால் விரைத்திருந்த சரீரத்தில் சூடுஉறைப்பதையும் ஈரத்துணி இல்லாமல் உலர்ந்த துணியிருப்பதையும் பார்த்து வியப்புண்டாகியது. பேசமுடியாது ஏதோ செய்தது. கண்ணை நன்றாகக் கசக்கிக்கொண்டு மறுபடியும் மிரளமிரள விழித்தான்.

"சாமீ! இன்னுபாக்கிறீங்க! பயப்படாதீங்க. ஐயோபாவம்! இந்த காத்துமழெலே எப்பிடியோ அம்பிட்டுகினீங்களே! கடவுள்தான் காப்பாத்தினுன். எங்க இந்த குடிசையைக்கூட எங்கே பிச்சிகினு போவுதோன்னுபயந்து அவன்நாமத்தையே பாடி பஜனைசேஞ்சிகிட்டே இருந்தோம். அந்த ஆண்டவனே நம்பினு அவன் கைவிடமாட்டாங்க. சாமீ! ரொம்ப காசிபட்டுப் பூட்டீங்க. நல்லா தூங்குங்க. காத்தாலே சரியாப்பூடுங்க. மயெகூட நின்னுபூட்டுதுங்க" என்று வீணையின் நாதம் போன்ற இனிமையான குரலில் பேசினுள்.

அவள் முகத்தைப் பார்க்கப் பார்க்க பிச்சுமணியின் மயக்கம் தெளிந்து நன்றுகத்தெளிவு உண்டாகிவிட்டதோடு முதல் நாள் ரயிலில் பாடிக்கொண்டுவந்த அந்த பிச்சைக்காரிதான் இவள் என்றது சடக்கென்று புரிந்துவிட்டதுதான் தாமதம் இவன் மனச்சாட்சியும் உணர்ச்சியும் இவனைக் குத்திக் குத்திக் காட்டி "டேய்! படித்தமடையா! ஏழைப்பிச்சைக்காரிக்கும் இதயம், தயை தாக்ஷிண்யம், பச்சாத்தாபம், கருணை, பரோபகாரம், தெய்வபக்தி, தூயஉள்ளம், சாந்தம், கற்பு, பொற்பு, கண்ணியம்முதலிய பலவித உயர்ந்த அம்சங்களும்உண்டு என்பதைத் தெரிந்துகொள்ளடா! இவளுடையபச்சைபாலகன் சிறுநீர் விட்டுவிட்டதைப் பொறுக்காது அதை அடித்தும், இவள் மனத்தைக் கொதிக்கச்செய்தும், நிந்தையானவார்த்தைகளைப் பேசியும்துள்ளிக்கவிழ்த்தாயே! எந்தபிச்சைக்காரியைநீத்ருணமாக மதித்துத் தலைகால் தெரியாத மிருகம்போல் நடத்தினுயோ அதே பிச்சைக்காரி உனக்கு ஆபத்தில் கைகொடுத்தாள் பாரடா! தூயஉள்ளம் என்பது பிச்சைக்காரிக்கும்உண்டு என்ற பாடத்தைக் கற்றுக்கொள்ளு. வெட்கங்கெட்டவனே! என்று இடித்து இடித்துக் காட்டுகிறது.

"என்னை இன்னுன் என்று அவள் தெரிந்துகொள்ளாதிருக்கவேண்டுமே. நான் ஒரு மனிதனு? மிருகம். சந்தேகமில்லாமல் மனித மிருகந்தான்! அடடா! என்னென்ன விசித்ரத்தை பகவான் நடத்திக்காட்டுகிறுன்? 'பிச்சைக்காரிக்கு இத்தனை அழகா?' என்று நேற்று வெளித்தோற்றத்தைக் கண்டு ப்ரமித்தேன். இன்று உள்தோற்றங்களையும்கண்டு சரியான பாடங்கற்றுவிட்டேன். படிப்பாவது மண்ணுவது? இதெல்லாம் பிறவிக்குணம்" என்று தனக்குள் பலமான யோசனை எழுந்துவிட்டது. தான் இன்னும் உற்றுப் பார்த்தால் எங்கே தெரிந்துகொள்வாளோ என்கிற பயத்தால் திரும்பிப் படுத்துவிட்டான்.

உள்ளிருந்து இவளுடைய கணவன் வெகுஅன்பான குரலில் "தேவயானீ தேவயானீ!...குள்ளப்பன்ஊட்டுக்குப் போயி பாலுவாங்கியாந்து ஐயாவுக்குக் குடு. ஆபத்துலே நாம்ப ஒதவி செய்தாதான் கடவுள் நமக்கு ஒதவி செய்வான். மழை நல்லா நின்னுடிச்சி ரவேபோய்வா" என்றுன்.

இதற்கு பிச்சுமணி..''ஐயா! அதெல்லாம் ஒண்ணும் வாணாம். எனக்கு செய்திருக்கும் இந்த பரமஉபகாரத்தை நான் என்றும் மறக்கமாட்டேன். நான் தூங்குகிறேன்; நீங்களும் படுத்துக் கொள்ளுங்கள்'' என்றான்.

''சாமி! இந்த ஏழைகுடிசையைநோக்கி நீங்கல்லாம் வரத்தகுமா? உம். நான்போய் வாங்கிவர கொடுத்துவைக்காத குருடனுங்க. எங்ககதையேகேட்டா ஒங்கமனசுவெடிச்சுப்பூடுங்க. எங்க தேவயானி இந்த கலிகாலத்து காணக்கிடைக்காத தங்க முங்க. அவளாலேதானுங்க மழைபேயுது. நான் ஆதியில் ஓர்க்ஷாப்பிலே வேலையாயிருந்து போதாதவேளையாலே ஏதோ ஆயுதம்பட்டு, கண்ணுபோயிட்டுதுங்க. எங்க தேவயானி அதுக்குமுன்னாலே என்மேலே விச்வாசமாயிருந்ததைவிட ஆயிரம் பங்கு இந்த குருடன்மேலே ப்ரீதியாயிருந்து காப்பாத்தறா. படிச்சவங்கள்ளேசிலரு, நன்னாயிருந்தா ஒண்ணு, நலங்கெட்டா ஒண்ணுன்னு ஆட்றாங்களே! எங்க தேவயானி கிட்டே அது ஒன்னுமில்லேங்க. மகாஉத்தமி. பொறுமைலே பூமிதேவிதானுங்க.

நேத்திக்கிக்கூட ரயிலிலே பிச்சைஎடுக்கச்சிலே யாரோ துஷ்டப்பயல் எங்ககொயந்தெயெ அடிச்சுப்புட்டானாம். அந்த அடி தாங்காமே பச்சைக்கொயந்தைக்கு காச்சலுவந்திடுச்சுங்க. ஒரு பேச்சு திட்டியிருப்பாளா! பகவான் இருக்கறான்; காப்பாத்துவான்னு சொல்லிப்புட்டா. அப்படிப்பட்ட லச்சுமிக்கு சம்பாரிச்சுப்போட சக்தியில்லாமே நான் கடக்கரேனுங்க... என்தேவயானியின் ப்ரீதியே எனக்குக் கண்ணு ப்ரகாசம் போல இருக்குதுங்க. எந்த ஜன்மத்திலே யார்கண்ணை குத்தினேனோ இப்படி அனுபவிக்கிறேனுங்க. இப்பகூட ஒரு டாக்டரு நெறைய பணம் குடுத்தா வைத்தியம் சேஞ்சுசொஸ்தப்படுத்துறேன்னு சொன்னாரு..... உம். அன்றாடம்பிச்சை எடுத்து வயிறுவளக்கறநாயிக்கு பணம்ஏதுங்க? பணம்இருந்தா தானேங்க அல்லாம்......

என்று கண்ணைத் திறக்காமல்தன்போக்காகச் சொல்லிக் கொண்டுபோவதைக் கேட்கக் கேட்க இவன் துடிதுடிப்பு இன்னும் அதிகமாகிவிட்டது. இதற்குள் தேவயானி பால் கொண்டுவந்து ''இந்தாங்க சாமீ! ரவெ சூடாகுடியுங்க.'' என்று அன்பாகக் கொடுத்தாள். அதைவாங்கிக் குடிக்கிறான். உள்ளத்தில் ஏதோ ஒரு சக்தி பெரும்போர் செய்து வதைக்கிறது.

அதற்குமேல் பேசமுடியவில்லை. தான் இன்னான் என்று தெரிவதற்குமுன்பு இங்கிருந்து தப்பித்துக்கொண்டு போய் விடவேண்டும் என்கிற ஒரே எண்ணம் போராடுகிறது. அதோடு, தன் சகாக்கள் எப்படியானார்களோ என்றும் கவலை வாட்டுகிறது.

183162

"பிச்சைக்காரர்களின் குடும்பத்திலா இத்தனை ஒத்துமை? இத்தனை படிப்பினை"...என்று வியப்புக்கடலாடுகிறான். அதோடு குருடன் சரிதை நெஞ்சையள்ளுவதால் சற்று மவுனமாயிருந்து "ஏனப்பா! எந்தடாக்டர் பணம் அதிகம் கேட்டார்?" என்றான்.

குருடன்:—சாமி! எவருன்னு எங்களுக்குத் தெரியுங்க? கண்ணு வயித்தியத்துலே பெரிய கெட்டிக்காரராம்.

தேவ:—ஊம்...யாரானு என்னுங்க? ஏயே பிச்சைக் காரிதானேங்க. எங்களே பாத்தாலே எலக்கரம். நேத்தி வண்டிலே ஒரு பட்டாளம் படிக்கர புள்ளேங்க என்னே இன்னு கேள்விகேட்டாங்க தெரியுமா! ஸினிமாப் பாட்டுபாடு ட்ராமா ஆடு...அப்பிடி இப்பிடின்னு ஒருகாலனு போடாமெ ஆட்டிவெச்சாங்க. அவுங்களெபாத்தா எனக்கு ஐயோ பாவமிண்ணு கண்ராவியாக இருந்துதுங்க. படிக்கிறபுள்ளேங்கலக்ஷணமாமரியாதையா பெருந்தன்மையாவாயத் தெரியாமெ இப்படி கூத்தடிச்சா அவுங்களாலே பெத்தவங்களுக்கு இன்னுசொகம் உண்டாகும்? சொல்லுங்க. அந்தமாதிரி புண்ணியவானே கட்டிக்கிற பொண்ணுக்குத்தான் என்ன நிம்மதி இருக்கும் சொல்லுங்க. ஏதோ இவங்களெபோல தடாம் புடாம்னு படிச்ச ஒரு பொம்பளெயே இவன்கட்டிகினு ஒடனே சண்டெதான். "நானும் படிச்சவ நீயும் படிச்சவன். பேசாதெ கட" இன்னு சொல்விப்புடுவாங்க.

குருடன்:—தேவயானீ அதுமட்டுமா? நானு மில்லுலே வேலெயாயிருந்தேன்பாரு. அங்கே எங்க மொதலாளியின் மவன் இப்படித்தான் டம்பாச்சாரிநாடகம்ஆடிகிட்டிருந்தாரு. அவருக்கு பெரிய B. A. படிச்ச பொண்ணெக் கட்டினுங்க. அவங்களுக்குள்ளே ஒத்துமை இங்கறது மருந்துக்குமில்லே. கடைசீயிலே அவ ஓடியேபூட்டா. படிச்சபடிப்பே நல்ல தான வயிலே செலவிட்டாக்கா சரியான பலனெ அடையலாம். கோணவயிலேபோனு சாமி சும்மாவா வேடிக்கைபாப்பாரு!... சாமீ! நீங்க பெரியபடிப்பாளியாகவோ உத்யோகஸ்தராகவோ இருக்கலாம். தாம்படிச்சத்தைமொதல்லே தனக்குஉபயோகப் படுத்திச் சரியான வழியிலே வாழ்க்கையை நடத்தினதனுலே தான் நம்ப பெரியபெரிய தலெவருங்க நமக்கு குருவா இருக்கராங்க. ஒரு விவேகானந்தருடைய சரித்திரம் போதாதுங்களா? ஒரு மவாத்மா சரித்திரத்தைவிடவா வேறு வேணும்? நான் படிக்காத பொத்தகம் இல்லீங்க. இப்பதான் இப்பிடி பிச்சைச்காரனு கெடக்கறேனுங்க.

தேவ:—தே...திருப்பித்திருப்பி அப்படி சொல்லாதே. ஒனக்கென்ன கொரவு? ஒனக்காக நான்சாகாமே ரொம்ப நாள் இருக்கணும். உன்னேவிட எனக்கு வேறு என்ன இருக்குது? ...சாமீ! நீங்களே சொல்லுங்க. பிச்சை எடுத்தாவது அவருக்கு செய்யறதுதானே என்சொகங்க?

குரு:—சாமீ! என்தெய்வயானி தெய்வந்தானுங்க. இவ இப்பிடி பிச்சை எடுக்கக்கூடாதுண்ணு இவஅம்மா ஊட்டே அண்ணன், தம்பிங்க சண்டெபோட்டாங்க. எங்கஊட்டோடே இருன்னும் சொன்னானுங்க...இந்த பிச்சை எடுக்கரத்தெவிட ஆத்தாவூட்லே இருக்கறது இளைப்பம். நான் மாட்டேன். என் குடும்பத்தெகாப்பாத்த நானு பிச்சைஎடுத்தா என்ன? ஊட்டுவேலே செய்தா என்ன? இன்னு சரியானபடிகேட்டிட்டு வந்துட்டாங்க. கடவுள் நல்லகொரலையும் பாட்டையும் குடுத்திருக்காரு. தெனம் 8 அணா காசு கிடைக்குதுங்க. அதுலே கஞ்சிகுடிச்சு காலத்தெ சந்தோஷமா கழிக்கிறோமுங்க.

தேவயானி:—சாமீ! ஒசத்திஜாதியோ மட்டஜாதியோ படிச்சவங்களோ படிக்காதவங்களோ! யாரா இருக்கட்டுங்க ஆண்டவனுக்குப்பொதுவா சத்தியமா நடக்கணுமுங்க. அப்பிடி நடந்தா ஏன் சாமி அவன் கைவுட்ரான்?...படிச்ச படிப்போ, கத்த வித்தையோ; தருமத்துக்கும் ஏழைக்கும் இரங்கி செய்யற மவாராஜாங்க ரொம்ப கொறவுங்க ..ஏழைங்களே பாத்தா ஒருவெறுப்பு. ஒருபரிகாசம். இழிவா எளப்பமா பேச்சு. இதெல்லாமா கவுரதேசாமீ! அந்த டாக்டருபேரு தருமலிங்கமாம்...பேருதான்தருமலிங்கம். வாயிலே வார்த்தை இன்னாவந்திடுச்சிதெரியுமா ?.. "ஏய் குருடா! ஏண்டா வயித்தியம் பண்ணிக்க ஆசைப்படுகிறாய்? குருடனாகவே இருந்தால் எல்லோரும்காசு நிறைய போடுவா. வயித்தியம் பண்ணிண்டா வேலையல்ல செய்யணும். அதிலும் உன்கண்ணுக்கு வயித்தியம் பெரியவயித்பமல்லவா செய்யணும். அதுக்கு காசு ஏதடா! போடாபேசாமல்...பாட்டுபாடி பிச்சை எடுடா !..."

இன்னு சொன்னாருசாமி...என் வயிறுஎரிஞ்சுபோச்சுங்க. அவரு மக்க மனுசாளுக்கு இப்பிடிவந்திடுச்சுன்னா இப்படி சொல்லுவாரா?...மறுபேச்சு பேசாமே வந்துட்டோமுங்க." என்று கூறும்போதுகண்ணீர் வந்தது...உம்: மனிசா எளக்காரம் பண்ணா என்னங்க என்னப்பன்கடவுள் ஒருத்தர் இருக்கிறார். அவன் கஞ்சிவாப்பான்னு எனக்கு நம்பிக்கை உண்டுங்க. அதனாலேதான் சந்தோசமாயிருக்கோமுங்க.

தர்மலிங்கம் வேறுயாருமில்லை. இவனுடைய தகப்பனார்தான். உயர்ந்த கண் டாக்டர். அவருக்குள்ள புகழும் கீர்த்தியும் சொல்லிமுடியாது. "அவருக்குமா இத்தகைய கொழுப்பு வார்த்தை வந்தது?" என்று தனக்குள் துடித்தான்.

"அப்பா! நீ கவலைப்படாதே. அந்த டாக்டர் வேறு யாருமில்லை. எங்கப்பாதான்...தாயே! நேற்று உன்குழந்தையை இரும்பு உள்ளத்துடன் தயை தாக்ஷண்யமின்றி அடித்தபாவிகளில் நானும் ஒருவன்தான். அத்தகைய கொடுமையைச்செய்தஎன்னைபகவான் சரியானபடி தண்டித்துபுத்தி வரும்படிச்செய்துவிட்டார்...என்றுமுடிப்பதற்குள்..."ஹா...ஹா...நீங்களா நேத்து ரயிலில் வந்தவங்க...சாமீ! ஏதாச்சும்

குத்தமாபேசியிருந்தா மன்னிக்கணுமுங்க..." என்று பயந்து நடுங்கியவாறு சொன்னாள்.

மணி:—தாயே! நானல்லவா உங்களிடம் மன்னிப்புக் கோரவேண்டும்? உங்களுடைய தூயஉள்ளத்தின் ப்ரதி பலிப்பு எனக்கு ஒரு கடுகளவாவது இருந்தால்போதும். பரம ஏழைகளிடமிருந்தும் பிச்சைக்காரர்களிடமிருந்தும் கற்றுக் கொள்ளவேண்டியவை உலகத்தில் மக்களுக்கு ஏராளமா யிருக்கின்றன என்கிற பாடத்தைத்தான் இன்று கற்றுக் கொண்டேன். என்னுடைய முரட்டுச் செய்கைக்கு மன்னிக்க வும்; நான் செய்த அபராதத்திற்குப்ராயச்சித்தமாக என்பிதா விடம் சொல்லிக் கட்டாயம் உன்கணவனுக்கு வயித்தியம் செய் கிறேன். நீங்கள் முன்புவந்த அதே இடத்திற்கு வாருங்கள்" என்று உறுதிகூறினான்.

மேலும் ஆறுமாதகாலமாயிற்று. தேவயானையின் கண வன் வடிவேலு கண்கள் ப்ரகாசம் பெற்று டாக்டர் தர்மலிங்கம் ஆஸ்பத்திரியில் ப்ரத்யேக வார்டனாகி வேலை செய்கிறான். ஆஸ்பத்திரி தோட்டத்திலேயே இவர்களுக்கென்று கட்டிக் கொடுத்துள்ள சிறியவீட்டில் தேவயானையும் குழந்தைகளும் வார்டன் வடிவேலுடன் சுகமாக இருக்கிறார்கள். அவளுடைய பழைய தொழில் போயேபோய்விட்டது.

பிச்சுமணியின் மாசு படிந்த உள்ளம் இந்தப் பிச்சைக் காரக்குடும்பத்தின்மூலம் தூயஉள்ளமாக மாறிவிட்டதால் வடிவேல் கண்வயித்தியம் செய்துகொண்டிருக்கும்போதே குருட்டுக்கணவனும் குணவதியான மனைவி தேவயானையும் இரண்டு குழந்தைகளுடன் ஐக்யமும் அன்பும் ப்ரகாசிக்க நடத்தும் குடும்பத்தை, தன் வாழ்வில் முக்கியமாறுதலை உண் டாக்கிய குடும்பத்தை, அப்படியே தகுந்த வர்ணஜாலங்களு டன் சித்திரமெழுதினான். "பிச்சைக்காரக் கற்பரசி" என்ற தலைப்புடன் தேவயானையின் சித்திரம் ஒன்றையும் எழுதினான். தேவயானையின் தூயஉள்ளத்தின் சோபை அந்த சித்திரத்தில் அப்படியே ப்ரதிபலித்தது. அதோடு 'இந்துப்பெண் ஏழைப் பிச்சைக்காரியானாலும் குடும்பத்தில் குருட்டுக் கணவனுடன் மிக்க ஒற்றுமையுடன் விளங்குகிறாள்' என்ற குறிப்புடன் அதை மேல்நாட்டுக்கு அனுப்பினான்.

அந்த சித்திரத்திற்கு முதல் பரிசு ஆயிரம்ரூபாய் பண மளித்தார்கள். அந்த ரூபாயை அப்படியே அவர்களுக்கு ஆஸ்தியாகக் கொடுத்ததுடன், தங்கவளையல் செய்து, தனக் குப் பால் கொடுத்த கரத்திற்குப் பூட்டிமகிழ்ந்தான்.

தேவயானையின் குடும்பம்சந்தோஷமாயிருப்பதைப்பார்த் துப்பூரிப்பதைவிட நித்யமங்களகல்யாண வைபவ சுகம் பிச்சு மணிக்கு வேறு எதுவுமே தோன்றவில்லை. அதுவே அவன் கலாரஸனையைத் தூண்டிவிடும் தூண்டுகோலாயமைந்தது. அவனது சினேகிதர்களும் ஒரு சிறிது திருந்தினார்கள். சுபம்.

வீராங்கனை

வை. மு. கோ. 88-வது நாவல்

"மகாராணி நமஸ்காரம்... இன்னும் தூங்கவில்லையா அல்லது விழித்துக்கொண்டீர்களா?"... என்று மிகமிகப் பணிவுடன் மரியாதையாகக் கேட்டான்.

மகாராணி ஒரு க்ஷணம் எதையோ யோசித்தாள். அடுத்த நிமிஷம் தணிந்தகுரலில் நிதானமாக..."லக்ஷ்மணஸிங்! என்னைப் பார்த்தால் உனக்கு எப்படித்தோன்றுகிறது!" என்றாள்.

லக்ஷ்:—தாயே! இன்னும் தூங்காததுபோலத்தான் தோன்றுகிறது. நாளைமுதல் பிறந்ததினவிழாவல்லவா! அந்த குதூகலத்தில்...

வீர:—லக்ஷ்மணஸிங்! அந்த குதூகலத்தினால்தான் நீயும் தூங்காமல் அப்போதுமுதல் 'ராமா, கிருஷ்ணா!' என்று மெல்லியகுரலில் பாடிக்கொண்டிருக்கிறாயா?...

லக்ஷ்:—ஹிஹிஹி . மகாராணீ! அதைகூடத் தாங்கள் கவனித்து விட்டீர்களா! என் வாய் அரைநிமிஷம்கூடச்சும்மா இருக்காது. சதா பகவன்னாமத்தைச் சொல்லிக்கொண்டுதான் இருக்கும். அதுதானே நம்மை நல்லவழிக்குச்சேர்க்கும் சிறந்த துணையாகும். அதனால்தான் சதா பஜித்துக்கொண்டிருக்கிறேன். எங்க மகாராணிக்குப் பிறந்தநாள் திருவிழா என்றால் எங்களுக்குச் சந்தோஷம் கரைகாணமுடியுமா தாயே! அதனால் தூக்கமே வரவில்லை.

வீர:—லக்ஷ்மணஸிங்! உனக்கு அபாரமான தெய்வபக்தி இருப்பதுபோல் ராஜபக்தியும் இருக்கிறது என்றுசொல்லு. இந்த அரசாங்கத்தினிடம் உனக்கு அத்தனை ப்ரீதியா?

லக்ஷ்.—தாயே! இதைக் கேட்கவாவேணும்? ஒரு மனிதனுக்குத் தன்னுயிர் எப்படியோ அப்படியல்லவா ராஜபக்தியும்.

வீர:—ஓ! மெத்தசந்தோஷம்......லக்ஷ்மணஸிங்! மகாராணியாகிய நான் உன்னை சில விஷயங்கள் கேட்கப்போகிறேன். நீ பயப்படாமல் தைரியமாக உண்மையைச்சொல்லு. நீ சதா பஜிக்கும் கடவுள்மீது ஆணையாக நான் உன்னைக் காட்டிக் கொடுக்காமல் காப்பாற்றுகிறேன். இது சத்தியம்....ஏன் இப்படி சரீரம் நடுங்குகிறது? ஏன் இப்படிப் பயப்படுகிறாய்? லக்ஷ்மணஸிங்! என்னை நம்பு. நான் சத்யம்செய்து பேசும்போது உனக்குப்பயமே இல்லை. அரண்மனையில ஏதேது எப்படி நடக்கிறது என்பது எனக்குத்தெரியும். இருப்பினும கேட்கிறேன், பயப்படாமல் சொல்லு; இப்போது எல்லோரும் தூங்குவதால் உனக்கு எத்தகைய ஆபத்தும் வராது. என்னுடைய தகப்பனாருக்கு உண்மையில் பைத்தியமா! அல்லது...என்று மேலே சொலவதற்குள்

லக்ஷ்மணஸிங் நடுங்கிப்பயந்து "தாயே! மகாராணி! மன்னிக்க வேண்டும். இதுவிஷயம்...

வீர:—லக்ஷ்மணஸிங்! பயப்படாதே. இது விஷயத்தில் உனக்கு எத்தகையபயமும் வேண்டாம். நான் என்னுயிரைக்கொடுத்தாவது

உனக்கு ஆபத்தின்றிக் காப்பேன். இந்த அரசாங்கத்துச் சட்டப்படி எனக்கு 16-வது வயதுமுதல் மைனர் நீங்கி சுதந்திரம் வந்து விடுகிறது. நான் அப்போது உன்னைத் தகுந்த மரியாதையுடன் நடத்துவேன். ஒரு க்ராமத்துக்கே உன்னை ஜமீன்தாராக்கிவிடுகிறேன். இது சத்தியம். என் பிதாவைப்பற்றியும் பழைய திவானைப் பற்றியும் அறிய மிக்க ஆவலுள்ளவளாக இருக்கிறேன். உன்னை நான் நம்பிக்கேட்கும் இவ்விஷயத்தில் தைரியமாய் தெரிந்ததைச் சொல்லு. திவான் நமது சத்துருக்களிடம் சேர்ந்துகொண்டு நம்மீது படையெடுக்கப்போவதாகக் கேள்விப்படுகிறேன்...

லக்ஷ்மண:—(ஆத்திரத்துடன்) தாயே! மன்னியுங்கள். மகா ஸத்யஸந்தராகிய பழைய திவானின் காலில் ஒட்டிய தூசிகூட உங்களுக்கு த்ரோகம் செய்யாது. உங்கள் க்ராமத்தின் புனருத்தாரண திட்டத்தை இப்புதிய அரசாங்கம் அடியோடு நிராகரித்து விட்டதை யறிந்த அந்த மகான் தான்போட்டதிட்டத்தை தன் சொந்த பணத்தினுல் நிறைவேற்றிவைத்தார். எதற்காகத்தெரியுமா? அந்த க்ராமத்து ஜனங்கள் எங்கே உங்களுடன் பகைத்துக் கொண்டு எதிரிகளுடன் சேர்ந்து உங்களுக்குத் தீங்கு செய்து விடுவார்களோ! என்கிற அபாரமான யோசனையினுல்தான். இந்த வஞ்சக மந்திரியும் திவானும் அந்த உத்தமன்மீது இந்த அரசாங்கத்துப் பணத்தைக் களவாடிவிட்டதாயும் இன்னும் ஏதேதோ குற்றங்களைச்சாட்டி அவரையும் அவர் மனைவியையும் விசாரணையில்லாததண்டனையைக்கொடுத்து, எங்கேயோரகஸியமாக வைத்திருக்கிறார்கள். இதைப்பற்றித் தங்கள் பிதா கேட்டு கிளர்ச்சி செய்ய எண்ணியதற்குத்தான் அவருக்குப் பயித்தியமென்றுகூறி அதற்கான ஆஸ்பத்ரியிலும் தனிஇடத்தில் போட்டுவிட்டார்கள். அந்த மகான் கண்ணீர்விட்டுக் கதறிக்கதறி எப்படியோ தப்பித்துக் கொண்டு ஓடிவிட்டார். அவர் எங்குப்போனர், என்ன செய்தி என்பது யாருக்கும் தெரியவில்லை. ரகஸியத்திலேயே அவரைத் தேடிப்பிடிக்க ஏற்பாடு நடக்கிறது அதற்குள் உங்கள் கல்யாணத்தை முடித்துவிடவேண்டும் என்ற தீவிரயோசனையில்தான் இப்போது சகலமும் நடக்கிறது. தாயே! தாங்களே தெய்வமென்று நம்பி இதைச்சொல்லிவிட்டேன். தயவுசெய்து எனைக் காட்டிக்கொடுக்காமல் காப்பாற்றவேண்டும்" என்று திடுதிடுப்புடன் கூறினுன்.

இதைக் கேட்ட வீரலக்ஷ்மியின் ரத்தம் கொதித்தது. இன்னது செய்வதென்று தோன்றுது பல்லைக்கடிக்கிருள். கையை நெறுக்குகிருள்.....லக்ஷ்மணசிங்....இத்தனை விபரீதத்திலாகாரியம் நடந்திருக்கின்றது? இருக்கட்டும். இந்த நேரத்தில் நாம் சந்தித்ததாகவே கடவுளைத்தவிர பிறருக்குத் தெரியவேண்டாம். நாளையவிழா நடக்கட்டும். என்னுடைய உரிமை கைக்கு வரட்டும். நீ பயப்படாமல் போய் உன் வேலையைப்பாரு." என்று மிடுக்காக உறுதியுடன்கூறித் திரும்பும்போது, சற்றுதூரத்தில் மஞ்சுளாவும் சுகுணுவும் வருவதைக் கண்டு லக்ஷ்மணஸிங் நடுங்கிப்போனுன்; அவளை தலைசுற்றியது.

இதைக்கண்ட விரலட்ச்மி தன்பெயருக்குத்தகுந்தவாறு, லக்ஷ்மணஸிங்கு தனது காவல் கடமையை மறந்து தூங்கிவிட்டதாகவும் அதைத்தான் பார்த்து அவனைக்கண்டிப்பதாயும் ஒரு புதிய திடும்ப்ரவேச கற்பனை நாடகம் நடித்து, நன்றாக எச்சரித்து புத்தி கூறியதைக்கேட்ட லக்ஷ்மணஸிங்,மகாராணியின் திறமையைக்கண்டு ப்ரமித்துப் பூரித்தான். தனக்குள் தாங்கமாட்டாத வியப்புடன் "இத்தகைய மாணிக்கம் அந்த ஆடம்பர அல்பதேவதையின் வயிற்றில் எப்படிப் பிறந்ததோ! எங்கள் நாட்டுமக்களின் பாக்யந்தான் இந்த அற்புதப்பிறவி கிடைத்தது" என்று எண்ணி மகிழ்ந்தவாறு, "தாயே! இனிமேல் தூங்கவேமாட்டேன். மன்னிக்கவேண்டும். ஏதோ வயதான கிழமாகையால் கண்ணயர்ந்துவிட்டேன். தாங்கள் தயவுசெய்து பெரியம்மாளிடம் சொல்லாமல் என்னைக்காப்பாற்றுங்கள். நான் பெரியஸம்ஸாரி" என்று கூழைக்கும்பிடுபோட்டு நடித்தான்:

சுகுணாவும் மஞ்சுளாவும் இந்த நாடகத்தைப் பார்த்துக்கொண்டேவந்ததால், வேறு எத்தகைய சந்தேகமும் படாமல்... "மகாராணி தூங்குகிறார்களா?"...என்று பெரியம்மாள் பார்த்துவரச்சொன்னதாகக் கூறிவிட்டுப்போய்விட்டார்கள்.

அவர்கள் போன பிறகு மறுபடியும் மகாராணி "லக்ஷ்மணஸிங்! இனிமேல் என்னை நம்புவாயா?...இதோ! நீ என்னை நம்புவது போல் நான் உன்னை நம்புகிறேன். நாம் இருவரும் பகவானை நம்புவோம். இன்றுமுதல் ப்ரதிதினமும் நீ இதே கோத்தில் இந்த அரண்மனையில் நடக்கும் சகல விஷயங்களையும் என்னிடம் நேரில் தெரிவிக்கவேண்டும். நீ எதற்கும் பயப்படாதே. நான் உன்னையே என் பிதாவைப்போல் எண்ணிக்கேட்கிறேன். நாளைய தினம் பிறந்ததின ஊர்வலத்தின்போது நான் ஏறிவரும் யானையின் பாகனுடன்கூடவே நீ தவறாது வரவேண்டும். தெரிந்ததா? எதற்கும் பயப்படாதே" என்று எச்சரித்து அனுப்பினாள்.

21

மகாராணியின் பிறந்ததினத் திருவிழாவை அறிவிக்கும் அறிகுறியாக பீரங்கியிலிருந்து 15 தரம் சுடும் சப்தம் பேரொலியுடன் கிளம்பியது. அரசாங்க ராணுவமரியாதைகளும் பாண்டுவாசிப்பின் மனோஹரமும் மேளக்காரர்களின் இசைகோஷமும் மற்ற இதர தாரை தம்பட்டம், குழல் கொம்பு, நகாரா டமாரம் முதலிய பறைவகையராக்களும் வீதிக்கு வீதி பெருமுழக்கம் செய்கின்றன. வீதிதோறும் மகரதோரணங்களும் முத்துப்பந்தல்களும் அலங்காரங்களும் தடபுடல்படுகின்றன.

மகாராணியைப்பற்றி பொதுமக்கள் கேள்விப்படுகிறார்களேயன்றி நேரில் பார்த்ததுகிடையாது. ஆதலால் மகாராணியின் பவனிக்கோலத்தைக்காண லக்ஷக்கணக்கான ஜனங்கள் வீதியில் கும்பல்கும்பலாகக் கூடிவிட்டார்கள், மகாராணிக்கு நேரில் காணிக்கை

செலுத்துவதற்காகப் பல ஏழைகள் தம்தம் சக்தியானுஸாரமும் சக்திக்குமிஞ்சியும் காணிக்கைகள் பலவிதங்களில் வைத்துக்கொண்டு வீதியில் காத்திருக்கிறார்கள்.

அன்று பொழுதுவிடிவதற்குமுன்பே அரண்மனையின் ஆரவாரம் கூறத்தரமில்லை. வள்ளியம்மாள் பல அரசகுடும்பத்திலிருந்து வந்துள்ள பெண்மணிகளையும் இதர பெரியமனிதர்கள் வீட்டுப் பெண்மணிகளையும் அழைத்துக்கொண்டு ராணியிடம் வந்து மகாராணிக்கு அலங்காரம் செய்வதிலேயே ஈடுபட்டாள்.

முதல் நாள் மிகவும் அதிர்ச்சியான நம் நம்பத்தகாததுமான விஷயத்தைக் கேட்டதுமுதல் மகாராணியின் உள்ளம் கொதிக்கும் கொதிப்பை அவளால் அடக்கவே முடியவில்லை.

ஆயினும் வெகு ப்ரயாஸைப்பட்டு அடக்கிக்கொண்டுசாதாரணமாக இருப்பவள்போல் பாவனைகாட்டியவாறு தன் முன்னோர்கள் எப்படி அலங்காரம் செய்துகொண்டிருந்தார்களோ அதே முறையில் தானும் அலங்காரத்தைச் செய்துகொண்டு மிகுந்த களிப்புடன் இருப்பவள்போலக் காணப்பட்டாள்.

சரியாக சூர்யோதயத்திற்கெல்லாம் ஊர்வலம்கிளம்பிவிட்டது வீரலக்ஷ்மி இந்த கஜேந்திரபுரிக்கு வந்தநாள்முதல் அவ்வூரையும் ஊர் குடிமக்களையும் பார்க்கவேண்டும் என்று அதிக ஆசைப்பட்டும் தனக்குக் கிடைக்காதுபோனதால் உண்மையில் அவளுடைய அத்தனைகோபத்திலும் ஒருதிவலை சந்தோஷமும் உண்டாகியது.

கம்பீரமான தோற்றத்துடன் சாக்ஷாத் ஸ்ரீமகாலக்ஷ்மியைப் போன்ற அழகுடன் வீரலக்ஷ்மி தன்னைக்கொண்டுவந்த கஜேந்திரனின்மீதே பூட்டியுள்ள அம்பாரியில் த்ருஷ்டியாகிவிடும்படியாய் அமர்ந்து அப்படி ஒரு முறை வீதியையும், வீதியில் கூடியுள்ள வீரமக்களையும், குடிமக்களையும் பார்த்ததும் அவளுடைய இதயத்தில் ஒருபுறம் கட்டுக்கடங்காத இன்ப ஊற்றும் ஒருபுறம் துன்பத்தின் மேகப்புகையும் ஒருங்கே கிளம்பின. தன் பிதாவையும், பழையதிவானையுமே எண்ணி ஏங்கியது. பழைய க்ராமத்துக் கிழவியையும் நினைக்காமலில்லை.

"கஜேந்திரபுரி மகாராணிக்கு ஜே! வீரலக்ஷ்மி தேவிக்கு ஜே!" என்று குடிமக்கள் வானளாவ எழுப்பும் ஜே கோஷத்தின் ஆனந்த ஒலி அந்த ஊர் பூராவும் எதிரொலித்தது. தான் சொல்லியபடி லக்ஷ்மணஸிங்கு யானையின் பக்கம் இருக்கிறானா என்று பார்த்தாள். தடபுடலான சரிகை உடையுடன்... அவன் சிப்பாய்க் கோலத்துடன் யானையின் பக்கத்திலேயே நிற்பதைப் பார்த்ததும் சற்று த்ருப்தியடைந்தாள்.

தான் க்ராமாந்திரவாஸியாய் தனிக்காட்டு அரசியாய் காடு பூராவும் திரிந்துகொண்டிருந்த காலத்தில்கூட தான் இத்தனை ஜனங்களை ஒரே இடத்தில் சேர்ந்துபார்த்து இன்புற்றதில்லை. ஆயிரக்கணக்கான தலைகளைப்பார்த்ததும் எங்குமில்லாத ஆனந்தத்தையடைந்து தான் மகாராணி என்கிற கர்வத்தையே அடையாமல்

கையை ஆட்டியும் அபயம் கொடுப்பதுபோல் அமர்த்தியும், கூப்பியும் உத்ஸாகத்துடன் அம்பாரியில் உட்கார்ந்திருக்கிறாள். தாதிகள் சாமரம் வீசவும் குடை பிடிக்கவும் அந்த ஆனந்தக் காக்ஷியைக்கண்டு பொதுமக்கள் பேராரவாரம் செய்கிறார்கள்.

"தேவேந்திர போகம், ப்ரம்மானந்தக் காட்சி" என்றெல்லாம் பொதுமக்கள் கூறியபடியே "மகாராணீ நமஸ்காரம்! இந்த ஏழைக் குடியானவர்களைக் காப்பாற்றவேண்டும். உங்கள் செங்கோல்தர்மக் கோலாக வாழவேண்டும்." என்ற கோஷம் வானைப்பிளக்கின்றது. இத்தனை உத்ஸாகத்தின் மத்தியில் வீரலக்ஷ்மியின் உள்ளத்தில் தன்னுடைய பிதாவின் நினைவும் சிவானின் அன்பும் ஒருபுறம் வேலைசெய்து அவர்கள் இந்த வைபவத்தில் கலந்துகொள்ள வில்லையே என்று ஏங்குகிறது.

அடுத்தக்ஷணமே தன்னுடைய சிறிய க்ராமத்தின்மீது எண்ணம் பாய்கிறது. இந்தவைபவத்தில் அவர்களும் கலந்துகொண்டிருக்கும்படி அழைப்பு அனுப்பாது தன் தாய் செய்துள்ள வஞ்சனையும் பளிச்சென்று மனத்தில்பட்டது. தனது வருத்தங்களையும் ஆத்திரங்களையும் உள்ளடக்கிக்கொண்டு வெகு சந்தோஷமாக உட்கார்ந்திருந்தாள்.

ஏழைகளின் காணிக்கைகளை எல்லாம் பக்கத்தில் வரும் அதிகாரிகள் வாங்கிக் குவித்துக்கொண்டிருக்கிறார்கள். இந்த போஜனத்தைக்கண்டு பூரித்துப்போகும் வள்ளியம்மாள், மகாராணியை விட அதிகமான அலங்காரத்துடன் காக்ஷியளிப்பதைக் கண்டு சிலர் பரிகஸிக்காமலும் இல்லை.

ஒவ்வொரு வீதியின் அலங்காரமும் கூட்டத்தின் ஆரவாரமும் கண்டு பூரிக்கும் வீரலக்ஷ்மியின் கண்கள் ஆயிரக்கணக்கான கூட்டத்தின் மத்தியில் தன் பிதா எங்காவது காணப்படுவாரா என்று துளாவித்தேடுகிறது. நான்கைந்து வீதிகளைக் கடந்துசென்றதும் ஒரு வீதியில்" வீரலக்ஷ்மி! வீரலக்ஷ்மி!"என்று கும்பலாக ஒரு கூட்டத்தினர் கத்துகிற குரலைக்கேட்டு வியப்புடன் பார்த்தாள். தன்னுடைய க்ராமத்து ஜனங்களில் தன்னுடன் விளையாடிய சினேகிதர்களும் சினேகிதைகளும் மிகவும் நாகரீகமாய் அலங்காரத்துடன் நிற்பதைப்பார்த்துப் பரம சந்தோஷமடைந்து அவர்களை ப்ரத்யேகமாய்ப் பார்த்துச்சிரித்தும் கையை ஆட்டியும் தன்வந்தனத்தைத் தெரிவித்துப் பூரித்ததோடு யானையை நிறுத்தும்படி பாகனிடம் உத்திரவிட்டாள்.

அடுத்த நிமிஷமே யானை நின்றதும் அந்தக் கூட்டத்தினர் ஓட்டமாக அருகில் வந்து தாம்கொண்டுவந்திருந்த பரிசுகளை நேராகக்கொடுத்ததோடு "வீரலட்சுமீ! உன்னைக் கடவுள் பரிபூர்ண க்ருபையுடன் ரக்ஷிக்கட்டும்" என்று வாழ்த்தினார்கள்.

அதில் ஒரு வீர வாலிபன் நல்ல கட்டுமஸ்தான சரீரத்துடன் மிடுக்காக நோக்கியவாறு "வீரலட்சுமீ! இதோ என்னுடைய அன்

பளிப்பு" என்று ஒரு வள்ளிகல்யாண புத்தகத்லதயும் ஒரு வள்ளி கல்யாணகட்டத்தைத்தீட்டிய அழகியசித்திரத்தையும்கொடுத்தான்.

அதை வாங்கிக்கொண்ட வீரலட்சிமி முதலில் ஒன்றும் தெரியாது விழிக்கும்போது கூடவிருந்தவர்கள் சிரித்தவாறு "மகாராணீ! இவன் புனர்ஜென்மமெடுத்திருப்பதால் உங்களுக்குத் தெரியவில்லை. உங்களை இதே கஜேந்திரன் இந்த பெருமைபொருந்திய பட்டத்திற்குக் கொண்டுவரும்முன்பு நாம் வள்ளிகல்யாணம் நடித்தபோது சுப்ரமண்ய வேஷம்போட்டு யானையைக் கூப்பிட்ட அதே மாட்டுக்காரக் கந்தன்தான் இவன். உங்களுடைய பழைய திவானின் கருணையால் இவன் படித்தும் சித்திரம் வரையப் பயின்றும் இந்த உயர்ந்த நிலைமைக்குவந்து இப்போது தவன புரியில் மகிழ்ச்சி என்ற பத்திரிகையில் சித்திரக்காரனுக இருக்கிருன்......என்று சொல்லியவுடனே ஆச்சரியம் தாங்காது "ஹா!... அந்த...சுப்ரமண்யனு நீ!......உண்மையாகவா?".....என்று ப்ரமித்து வியப்புக்கடலாடினுள்.

யானையின்மீது ஆரோகணித்துள்ளபடியே இவள் பேசுவதும், கீழிருந்து சிலர் பேசுவதும், யானை நகராது நின்றுவிட்டதும் கண்ட அரசாங்கத்து அதிகாரிகள் வியப்புடன் பார்த்தார்கள். பக்கத்துப் பல்லக்கில் வீற்றுள்ள மந்திரி ப்ரதானிகளும் இதைக் கண்டு விவரம் புரியாது ப்ரமித்தார்கள். பின்னுல் பல்லக்கில்வரும் வள்ளி அம்மாள் வெகு குசாலாக இருக்கையில் ஊர்வலம் நகராது நின்றிருப்பதும், யார் யாரோ யானையின் பக்கத்தில்வந்து பேசுவதும் கண்டு எட்டிப்பார்த்தாள்.

அவ்வளவுதான்!...பல்லக்குடன் அப்படியே பத்திக்கொண்டு எரிவதுபோன்ற அதிர்ச்சியும் ஆத்திரமும் உண்டாகிவிட்டன! "அரசம்பட்டி க்ராமத்து ஜனங்கள் எப்படிவந்தார்கள்? இந்த அல்ப நாய்களை யார் உள்ளேவிட்டது? இந்தப் பட்டிக்காட்டு ஜனங்களா இத்தகைய நாகரீகத்தில் பழகிவிட்டார்கள். ஐயோ! வீரலட்சிமியின் பிதா அரசம்பட்டியிலிருப்பதாகவல்லவா நான் சொல்லி இருக்கிறேன். இப்போது அந்த ரகஸியத்தை இந்த சனியன்களால் தெரிந்துகொண்டுவிட்டால் என்ன செய்வது?" என்று துடிதுடிக்கிருள். பெரிய அந்தஸ்துடன் வீதியில் ஊர்வலமாக வரும்போதுதான் எத்தகைய கூச்சலும்போட்டுக் கிளர்ச்சி செய்வதற்கும் முடியவில்லை. என்னசெய்வதென்று திண்டாடித் திணறி நாலாபுறமும் பார்த்துப் பதறுகிருள்.

இதற்குள் வீரலக்ஷ்மி கட்டுக்கடங்காத சந்தோஷத்துடன் சுப்ரமண்யனைப் பார்த்து...."சுப்ரமண்யம்! நீங்களெல்லோரும் அரண்மனையைச்சேர்ந்த விருந்தினர்மாளிகையில்வந்து தங்குங்கள்; நான் பிறகு சந்திக்கிறேன். எல்லோரும் அங்கு வாருங்கள்" என்று கூறி சுப்ரமண்யனை இமைஇமைக்காது பார்க்கிருள்.

பகிரங்கமான ஊர்வலத்தில் அதிகம் பேசவும் முடியவில்லை. ஆகையால், சுருக்கமாக அப்படிக் கூறிப் பின்னர் ஊர்வலத்தை

நடத்தலாம் என்று பாகனுக்கு உத்திரவிட்டாள். வள்ளிகல்யாண படத்தையும் புத்தகத்தையும் திருப்பித்திருப்பிப் பார்க்கிறாள். அவளை யறியாத ஒரு இன்பம், அவள் இதயபாதாளத்தை எட்டிப்பார்த்தது. அன்று காட்டில் மாடுமேய்த்துக்கொண்டிருந்த சுப்ரமண்யன் கையினலா இத்தகைய அழகிய உயிர் ஓவியம் பிறந்திருக்கிறது? மாடு மேய்க்கும் கோலுக்குப் பதிலா சித்திரக்கோல்வழி விசித்திர உருவத்தைத் தீட்டி இருக்கிறது?" என்ற எண்ணங்களாகிய அலைமோத அவனையே பார்க்கிறாள்.

பின்னால், எரிமலையின்மத்தியிலுள்ளவள்போல் தத்தளிக்கும் வள்ளியம்மாள் தன் பல்லக்கின் அருகிலேயே கூடவரும் தன் கையாளாகிய மஞ்சுளாவின் கணவனிடம் ஏதோ ரகஸியமாகக் கூறினாள். அவன் அடுத்த நிமிஷம் மந்திரி ப்ரபாகர் பல்லக்கருகில் வந்து ஏதோ குசமசவென்று பேசினான். ஊர்வலம் நகர்ந்து கொண்டே இருக்கிறது.

குடியான மக்கள் பலர் தம்தம் குறைகளை முறையிட்டுக் கத்தினார்கள். அவ்வூரிலுள்ள புராதனமான அம்பாளுடைய ப்ரம் மாண்டமான கோயில் இருக்கும் வீதிப்பக்கம் ஊர்வலம் வந்ததும் கோயில் அதிகாரிகள் பூர்ண கும்பத்துடன் பஞ்சாதி சொல்லிய வாறு மகாராணிக்கு அருகில் யானையின் பக்கத்தில் வாழ்த்துக்கள் கூறி மாலைசூட்டி அம்பாளின் ப்ரஸாதங்கள் காணிக்கைகள் கொடுத்து மரியாதை செய்தார்கள்.

கோயிலின் கோபுரவாசலில் எண்ணற்ற பாதேசிகளும் பிச்சைக்காரர்களும் மொண்டி முடம், கூன் குருடுகள் முதலிய அங்க ஹீனர்களும் ஆக பலாகப்பட்டவர்கள் ஒரே இடத்தில் நின்று "மகாராணீ! மகாராணீ! நமஸ்காரங்க! ஒங்க கீர்த்தி மலே போலே வளரணமுங்க! ஆண்டவன் ஒங்களுக்கு சகலமங்களமும் கொடுக்கணமுங்க!... இந்த பாவஜென்மங்களே ரக்ஷிக்கணமுங்க!... என்று ஒரே கூக்குரலாகக் கத்தியவாறு எல்லோரும் வணக்கத்தைத் தெரிவித்து வாழ்த்தினார்கள்.

ஒரு கஷ்டமான வ்யாதியை தான் அனுபவித்த டாக்டரானல் அவனுக்கு ரோயாளிகளின் வருத்தம் தெரியும் என்பது போல் ஆதியில் ஏழ்மையின் பரிபவம் எப்படி என்பதைத் தான் அனுபவித்திருப்பதால் இக்கூட்டத்தைப்பார்த்ததும் உண்மையில் உள்ளம் உருகிக் கண்ணீர் பெருகியது. அந்தப் பரிதாபகரமான கூட்டத்தை உற்றுப்பார்த்தாள்.

தனக்குப் பணப்பைகளாகவே சிலர் காணிக்கைகள் கொண்டு கொடுத்திருப்பது சடக்கென்று கண்ணில்பட்டதும் பைகளுடன் பணத்தை அப்படியே அந்த துரத்ருஷ்டப் பிண்டங்களின்முன் தன் வேலையாள்மூலம் கொடுத்து...."அன்பர்களே! இதைப் பங்கிட்டெடுத்துக்கொள்ளுங்கள். ஆண்டவன்கிருபையால் உங்கள் குறை தீரும்" என்று சொல்லும்போது அங்கிருந்த ஒரு உருவத்தைக் கண்டு திடுக்கிட்டு அதிர்ச்சியினுல் அப்படியே நின்றாள்.

ஒருக்ஷணத்திற்குள் அவள் இதயக்கடலில் பெரும் புயல் காற்று வீசித் தத்தளிக்கச் செய்தது...வாய்விட்டுக் கத்திவிடவும் உள்ளம் துடித்தது. ஆனால், தன்னுடைய நிலைமையை உணர்ந்து சற்று அடக்கிக்கொண்டு மறுபடியும் பார்ப்பதற்குள் அவ்வுருவத்தைக் காணாது அவ்விடம் காலியாகஇருக்கக் கண்டதும் அவள் இதயத்தில் செம்மட்டியாலடிப்பதுபோன்ற மகத்தான அதிர்ச்சி உண்டாகியது. அதுவரையில் உத்ஸாகப் பதுமையாக இருந்த வீரலட்சுமி இப்போது சோகப்பதுமையாய் உள்ளுக்குள் மகத்தான வேதனையுடன் இடிந்துவிட்டாள். அவள் இதயம் "அப்பா! அப்பா!"... என்று விறிட்டழைத்தது.

அன்றுகாலையில் அவ்வூரே அபாரமான ஆனந்தத்தில் மூழ்கிக் கிடந்ததற்கு நேர்மாறாக அன்று மாலை "மகாராணிக்கு உடம்பு சரியில்லையாம். ஊர்வலத்தின் அதிர்ச்சி தாங்காது மயக்கம்போட்டு விட்டதாம். அரண்மனையே அல்லகல்லோலப்படுகிறதாம்" என்ற பேச்சே ஊர் பூராவும் பரவிவிட்டது.

ஊர்வலம் நடுபாதியில் கலைந்து அபசகுனம்போல் நேரே அரண்மனைக்குப் போய்விட்டதால் சிலர் "மகாராணிக்கு ஒன்றுமில்லாதிருக்கவேண்டுமே!" என்று வருத்தப்பட்டார்கள். வீரலக்ஷ்மி அரண்மனைக்கு வந்ததும் தனது தனியறைக்குச் சென்று சகல அலங்காரங்களையும் களைந்துவிட்டு "இனி நான் யாரையும் பார்க்க முடியாது. எத்தகைய சடங்குகளும் இனி நடத்தவேண்டாம்" என்று சட்டம் போட்டுவிட்டு எல்லோரையும் துரத்திவிட்டாள்.

இதற்குள் வள்ளியம்மாள் அலையக்குலைய ஓடிவந்து "கண்ணு! என்ன உடம்பம்மா?"...என்று பதறியவாறு கேட்டாள். வீரலக்ஷ்மி மிகுந்த கோபத்துடன் எல்லோரையும் வெளியே அனுப்பி விட்டு "அம்மா! நான் கேட்கும் கேள்விக்குச் சரியான பதில் சொல்லப்போகிறாயா! அல்லது வந்தது வரட்டும் என்று அனுபவிக்கப்போகிறாயா? உண்மையைச் சொல்லவேண்டும். அப்பா எங்கே?... அந்த மர்மத்தை இனி மறைத்துப் பயனில்லை. எங்கே என் பிதா?"...என்று வெகு கடுமையான குரலில் அக்னியைக் கக்கும் கண்களுடன் கேட்டாள்.

வள்ளியம்மாள் கதிகலங்கித் தம்பித்துவிட்டாள் எனினும் அதை யடக்கிக்கொண்டு "கண்மணீ! இந்தத் திருநாள் வைபவம் முடிந்ததும் உன்னிடம் சொல்லும்படி அப்பாவே நேரில் சொல்லி யனுப்பி இருக்கிறார். அதாவது:—நீ பிறந்த அன்று தற்செயலாக வந்து ஜோஸ்யம் சொல்லிய சாமியாரை அப்பா சந்தித்தாராம். இன்னும சிலமாதகாலம்வரையில் அப்பாவுக்கு கிரகம் வெகுகடுமையாயிருப்பதால் அவர் நம்மைப் பிரிந்திருந்தால் ஒருவருக்கும் உயிருக்கு ஆபத்துவராது நீங்கிவிடும். கூடவிருந்தால் க்ரகதோஷத்தின் பலன் மகாராணியையே கொன்றாலும் கொன்றுவிடும்; அல்லது அப்பாவையே கொன்றுவிடும். ஆகையால் தனித்து க்ஷேத்ராடனம் செய்துகொண்டு பிறகு உன் மகளிடம் சென்றால் சர்வ க்ஷேமமும்

உண்டாகும். தோஷங்கள் நிவாரணமாகிவிடும். இதை மீறினால் ஆபத்தாக முடியும்...என்று சொன்னாராம். அதனால் அப்பாவுக்கு மிகவும் வருத்தமாகிவிட்டதாம். அந்த ஜோஸியரின் வாக்கு உன் விஷயத்தில் அப்படியே பலித்திருப்பதால் அதை மீறவும் முடியவில்லை. எங்காவது நீ சந்தோஷமாயிருந்தால்...க்ஷேமமாயிருந்தால் போதும். அந்த க்ரகதோஷம் கழிந்தஉடனே மறுநாளே ஜோஸ்யரைக் கேட்டுக்கொண்டு உன்னிடம் வந்து சேருவதாயும் உன் கல்யாணவற்பாடுகளும்செய்துநிச்சயதார்த்தத்தைமுடித்துவிடும்படியாயும், தான் தூரவிருந்து வாழ்த்துவதாயும் விவரமாக ஒரு ஆளிடம் சொல்லியனுப்பினார். தன் கையினால் எழுதியனுப்பினால் கூட எங்கே தோஷம் தாக்கிவிடுமோ என்று பயந்து எழுதவில்லை என்றும், அவ்வப்போது தான் தூரவிருந்து உன்னைப் பார்த்துவிட்டுப் போவதாயும் அதுகூட குழந்தைக்குத் தெரியக்கூடாது என்றும் சொல்லியனுப்பினார்.

இன்றைய விழாவில் அதைச் சொல்லவேண்டாம் என்றுதான் பேசாதிருந்தேன். விஷயம் இதுதான். வீண்கலாட்டா செய்யாதே. அப்பா நன்றாகஇருக்க நாம் பாடுபடவேண்டும். நீ நன்றாக இருக்க அவர் பாடுபடவேணும். கண்மணீ! கொஞ்சம் சாந்தியடை...அப்பாவை நீ தற்செயலாக எங்கேனும் உப்பரிகைமீதிலிருந்துபார்த்தால்கூட அவரைப்பார்த்ததுபோல் காட்டிக்கொண்டு கூப்பிடாதே. அவரை நீ பார்த்தால் அவர் இறந்துவிடுவார். அவர் உன்னைப்பார்ப்பது உனக்குத் தெரிந்தால் நீ இறந்துவிடுவாய். இந்த இரண்டில் எது நேர்ந்தாலும் சகலமும் நாசமாகி நானும் தற்கொலையில் மாண்டுவிடுவேன்!...சாமியாரின் ஜோஸ்யத்தின் உண்மை சத்யமானது. ஆகையால் பதறாதே! எந்த ஜென்மத்தின் பாக்யமோ இம்மாதிரி பதவியும் போகமும் கிடைத்திருக்கிறது" என்று சற்றும் தங்குதடையின்றிப் படபடத்துக் கூறினாள்.

"என்ன! அப்பாவை நான்பார்த்தால் அவர் இறந்துவிடுவாரா? ...அவர் என்னைப் பார்த்தால் நான் இறந்துவிடுவேனா? இப்படியுமா ஒரு ஜோஸியம் இருக்கும்?...அப்படியானால் கோயில் வாசலில் நான் பார்த்த உருவம் அப்பாவைப்போலவே இருந்ததே. அது அப்பாவாக இருக்காதா? இதென்ன பயங்கரமான செய்தியாயிருக்கிறதே!" என்று அதேயோசனையிலாழ்ந்துவிட்டாள்..."அம்மா! நீ சொல்வது உண்மையான விஷயமா? அப்படி என்றால் அப்பாவுக்குப் பயித்தியம் பிடித்திருக்கிறது என்ற விஷயம்......

வள்ளியம்மாள் இடைமறித்து..."ஆம் கண்ணே! க்ரகக் கோளாறினால் மூளையும் கோளாறாக இருந்தது. பலபல வைத்தியங்கள் செய்தும் நன்றாகக் குணமாகாததால், பச்சிலை மருந்தை ஒரு சாமியார் கொடுப்பதாகக் கேள்விப்பட்டு அங்குச் சென்றார். அதில் மிகவும் குணமாகிவிட்டது. அப்போதுதான் அந்தப் புண்யவானான ஜோஸ்யச்சாமியாரைக் கண்டாராம். இளந்தளிர்போன்ற

உன்னுள்ளத்திற்கு விசனத்தையும் கலக்கத்தையும் உண்டாக்கும் இவ்விஷயங்கள் உனக்குத்தெரியவேண்டாமென்றதனுல் மந்திரியார் இதை உன்னிடம் சொல்லக்கூடாதென்று என்னையே கட்டுப் படுத்தியதோடு, மகாராணியின் தகப்பனுருக்கு இத்தகைய உடம்பாம் என்று வெளியில் தெரிந்தால் அவமானமும் பரிகாஸத்திற்கு இடமும் ஆகுமே என்றதனுல் வெளியாருக்குச் சற்றும் தெரியாத முறையிலேயே நடத்திவருகிறோம். இதுவிஷயத்தில் நீ ஒன்றும் கவலைப்படாதே. இந்த வைபவம் சிறப்பாக நடக்கட்டும். பிறகு சொல்லலாம் என்று நான் எதிர்பார்த்தேன். அதற்குள் இந்த வேலைக்கார நாய்களும் கழுதைகளும் உனக்கு ஏதேதோ கலகம் செய்து கலைத்து உன் மனத்தைக் குழப்பி இருப்பதாகத் தெரிகிறது. அதனுல்தான் நீ இத்தனைப் பதட்டமாகக் கேட்கிருய். இனி இது விஷயமாக யாதும் பேசாதே. யார் எதைச் சொன்னுலும் கேட்காதே. கடவுளை நம்பிஇரு' என்று கூறிவிட்டு இனியும் தான் இங்கு நின்ருல் பின்னும் ஏதாவது வார்த்தை கிளம்பும் என்று, உடனே தனக்கு வேலைஇருப்பதாகச் சொல்லிப் போய்விட்டாள்.

வீரலக்ஷ்மிக்கோ மனது ஒன்றும் சமதானயடையவில்லை. தன் தாயார் சொல்வது சரியா? பொதுமக்கள் சொல்வது சரியா? ...என்கிற பெரிய யோசனை உண்டாகிவிட்டது. "இப்போது நான் கிளர்ச்சிசெய்துவிட்டால் காரியம் கெட்டுவிடுமோ என்னவோ! எதற்கும் சற்று பொறுமையை வகித்துப்பார்க்கலாம். ஜோஸியச் சாமியார் சொல்லியிருப்பதாகச் சொல்கிருளே! அது உண்மையாயிருக்குமா! உண்மையாயிருப்பின் சாமியார் வாக்குபொய்யாகுமா! அந்தவாக்கை மீறி நம் அப்பாவை அழைத்துக்கொண்டு வந்தால் ஒருவேளை அப்பா..........ஐயோ! நினைக்கவே பயமாக இருக்கிறதே!......இதென்ன தர்மசங்கடமான நிலைமை?" என்று தனக்குள் தான் பலமாக எண்ணிப் பெருங்குழப்பத்திலாழ்ந்தாள்.

தான் கோயில்வாசலில் கண்ட உருவமே அவள் கண் முன்பு தாண்டவமாடியது. "எனக்கு அதிர்ஷ்ட தேவதை இத்தனை பெரியபாக்யத்தைக்கொடுத்து ரக்ஷிப்பது; என்னைப்பெற்ற பிதாவை துர்பாக்யதேவதை பிடித்து ஆட்டுவதா! இதென்ன அநியாயம்! தன் வயிற்றில் பிறந்த பெண் ஒரு ஸாம்ராஜ்யத்தின் மகாராணியாயிருப்பதும், தான் ஆண்டிபபரதேசியைப்போல் தெருவில் திரிந்து அனாதைக்காவடிபோல் பிச்சை எடுத்துப்புசிப்பதா? இதுவா க்ரகங்களின் ஆட்சி!...இதுவா கடவுளின் திருவுள்ளம்?...என் ரத்தம் கொதிக்கிறதே!...அம்மாவின மனம் கலங்கித்தவிக்கக் காணவில்லையே! கட்டிய கணவன் சன்யாசிபோல் திரியும்போது தான சர்வாபரணபூஷிதையாய் ஊர்வலத்தில் ஒய்யாரமாய் வருவதற்கு எப்படி மனது துணிந்தது?...ஒருவேளை பிறர் சந்தேகிக்காமலிருப்பதற்காக இம்மாதிரி செய்திருப்பார்களா? ஒன்றுமே புரியவில்லையே!" என்று குழம்பித்தவிக்கையில் லக்ஷ்மணஸிங்கு அங்கு மெல்ல பூனைபோல் நடந்துவந்து எட்டிப்பார்த்தான்.

மகாராணி மிகவும் குழப்பத்துடன் படுத்திருப்பதைக் கண்டு தூரவே நின்றான்...

இவன்வந்துள்ளநிழலைக்கண்டு வீரலக்ஷ்மிதிரும்பிப்பார்த்தாள். "லக்ஷ்மணஸிங்!....இப்படிவா! பயப்படாமல்வா....போனகாரியம் என்ன ஆயிற்று?"...என்றாள்.

லக்ஷ்ம:—தாயே! கோயிலைமட்டுமல்ல, அதைச் சுற்றி பிச்சைக்காரர்கள் உள்ள வட்டாரங்கள் பூராவும் சுற்றிச்சுற்றிப் பார்த்துவிட்டேன். அவரைக் காணவில்லை. தாங்கள் பார்த்தது அவராகத்தான் இருக்குமா! வேறு அவரைப்போல்......

வீர:—லக்ஷ்மண்ஸிங்!சந்தேகமில்லாமல் நான் என்னருமைப் பிதாவையேதான் பார்த்தேன். அவருடைய சாமியார் வேஷத்தில் முதலில் எனக்கும் புரியவில்லை. அங்குள்ள ஏழைகளுக்கு நான் பணத்தைக் கொடுத்தபோது அத்தனை ஜனங்களும் என்னை மகாராணி என்ற மரியாதையுடன் கைகுவித்து நமஸ்கரித்தார்கள். ஆனால், அந்த ஒரு உருவம்மட்டும் கைகுவிக்காமல் இருகைகளையும் அமர்த்தி வாழ்த்தி ஆசிகூறியது. கண்களில் மடை திறந்ததுபோல் நீர் பெருகியது. அதன்பிறகுதான் நான் உற்று நோக்கியதில் என்பிதாவின் நெற்றியிலுள்ள ஒரு வடு நன்றாகத் தெரிந்தது. உடனே காலை உற்று நோக்கினேன். அவருடைய வலது காலில் ஆறுவிரல்கள் உண்டு. அதையும் பார்த்தேன். அவர்தான் என்பதில் சந்தேகமே இல்லை. அதனால்தான் தவித்து உன்னை ஏவினேன். லக்ஷ்மணஸிங்!...இந்த ரகஸியம் இப்படியே இருக்கட்டும். இன்னும் போகப்போக என்னவாகிறது பார்க்கலாம்...என்று தன்தாயார் கூறிய விஷயத்தை அவனிடம் கூறாமல் மறைத்துப்பின்..."ஸிங்! நமது விருந்தினர் தங்கும் பங்களாவில் எங்கள் அரசம்பட்டிக்ராமத்து ஜனங்களை வந்திருக்கச்சொல்லி இருக்கிறேன். நீ அவர்களை இங்கு நான் அழைத்துவரச்சொல்லியதாக அழைத்துவா" என்று உத்திரவிட்டாள்.

வெளியில் சென்று திரும்பிவந்த லக்ஷ்மணஸிங்கு, "மகாராணீ! அம்மாதிரி யாருமே விருந்தினர் மாளிகைக்கு வரவில்லையாம்"... என்றான். "என்ன! நான் அவர்களை நேராக வரும்படிக்குக்கூறியிருக்கையில் அவர்கள் வரவில்லையா?... நீ அவர்களைப்பற்றிச்சரியான தகவல் விசாரித்துக்கொண்டுவா; ரகஸியமாக வேலை நடக்கட்டும்" என்று கூறி அவனையனுப்பினாள். அவளுடைய உள்ளம் ஒருநிலையில் நில்லாது தவித்தது.

22

வீரலக்ஷ்மி, இனி யாரும்வந்து தொந்திரவு கொடுக்கக்கூடாதென்று கூறித் தனிமையை நாடினாள். தனது ஆதிநேசன் சுப்ரமண்யன் கொடுத்த படமும் புத்தகமும்மட்டும் இவள் தன் கையிலேயே கொண்டுவந்தாள். அவை மேஜைமீது கண்ணைக்கவர்ந்

தன. மறுபடியும் அவைகளை எடுத்துப்பார்த்தாள். வெகு பொருத்தமான வர்ணங்கள் தீட்டப்பட்டுள்ள அந்தச் சித்திரம் இவள் கண்களைக் கவர்ந்தது. மறுபடியும் அதை எடுத்துப்பார்த்தாள்.

"சாதாரண மாடுமேய்த்த பையா இத்தகைய அற்புதச் சித்திரத்தை வரைந்திருக்கிறது! மாடுமேய்த்த சுப்ரமண்யன் மூளையிலா இத்தகைய எழில் ப்ரவாகம்போன்ற கற்பனை ஊற்றும் கலையின் திறனும் நிறைந்திருக்கிறது!" என்று எண்ண எண்ண அவள் அகக்கண்முன்பு சுப்ரமண்யனின் உருவமே கம்பீரத்தோற்றத்துடன் காட்சியளித்தது. அடுத்த க்ஷணமே தானும் அவனும் ஆதியில் வள்ளிகல்யாண நாடகம்போட்ட அன்றைய நிகழ்ச்சிகள் கண்முன்பு தோன்றி ஒருவித இன்பத்தைக் கொடுத்ததோடு அன்று விளையாடிய விளையாட்டே இன்று உண்மையில் நடக்கக்கூடாதா என்கிற ஆசைப்புயலையும் கிளப்பியது!

சுப்ரமண்யனின் இப்போதைய தோற்றம் அதி அத்புதமாய் வசீகரமும் நாகரீகமும் நிறைந்த வீரபுருஷனின் தோற்றம்போலவே அவளுக்குத் தோன்றியது. அவன் கொடுத்த வள்ளித்திருமண புத்தகத்தை உடனே எடுத்துப் பிரித்து பக்கம் பக்கமாகப் பார்த்தாள். அதில் அழகிய முத்துக்கள் கோத்ததுபோல் கையெழுத்தில் ஒரு காகிதம் கூடச்சேர்த்து ஒட்டியிருந்ததைக்கண்டு அபாரமான வியப்புடன் அதைப்பார்த்தாள்.

"சத்தியம் என்கிற சிறந்த பாலத்தின்மீது தர்மம் என்கிற ஆணையைக் கொண்டு நடத்துவதே செங்கோன்முறைமையாகும். மக்களின் வாழ்வைப் பாழ்படுத்திப் படுகுழியில் வீழ்த்தப் பலபல படிகள் இருக்கின்றன. அதே வாழ்க்கையைச் சீர்படுத்தி இறைவனின் குறிப்புப் புத்தகத்தில் இடம் பெற்று உலகமுள்ளளவும் அழியாத புகழுடன் உயர்த்துவதற்கு ஒரே ஒரு மார்க்கத்தை, ஒரு சிறந்த வழியைக்கடைபிடித்தால் போதும். அதுதான் தூய உள்ளத்தில் ஒப்புயர்வற்ற கருணைக் கடவுளின் பக்தியைக்குளம்போல்தேக்கிக்கொள்ளவேண்டும். குளத்தில் தாமரை, அல்லி, நீலோத்பலம் முதலிய உயர்ந்த புஷ்பங்கள் பூத்துக் குலுங்குவதுபோல் பக்திக்குளத்தில் சிறந்த பலபல குணங்கள் உண்டாகி அதன் சிறப்பை அடையச்செய்யும். அழுக்குள்ளவர்கள் குளத்தில் குளித்தால் அவர்களது அழுக்கைப் போக்கிவிடுவதுபோல் பொறாமையும் துர் எண்ணமும் கொண்டுள்ள துஷ்டர்களையும் இந்த பக்தி நிறைந்தவர்களின் சகவாஸத்தினுல் தூய ஆத்மாக்களாகச் செய்துவிடலாம். தடாகத்திற்கு பக்தி நம்பிக்கை த்யாகம் பரோபகாரம் இளகியநெஞ்சம் பாரபக்ஷமற்றநோக்கு முதலிய சிறந்த குணங்களே படித்துறைகளாகும். சத்தியமே நீராழிமண்டபமாகும்...சொங்கோல் வாழ்க! வீரம் செழித்து ஓங்குக! பகைவர்களின் துர்ச்செயல் வீழ்க!...வணக்கம்.

சுப்ரமண்யன்."

என்று அழகிய கருத்துடைய ஒரு வ்யாஸம்போன்ற வாக்யங்களை எழுதியிருந்ததைப் படிக்கப்படிக்க அவள் கண்களில் ஆனந்தபாஷ்பம் பெருகியது. "மாடுமேய்த்த நான் அரசியானதுபோல் மாடு மேய்த்த சுப்ரமண்யன் எனக்கு ஏன் மணாளனாகக்கூடாது?" என்கிற எண்ணம் வெகு தீவிரமாக எழுந்து வேலைசெய்தது.

"விருந்தினர் மாளிகையில் வாராமல் எப்படிப் போயிருக்கக் கூடும்? வழிதெரியாது அலைகிறார்களா? அல்லது அவர்களை காவலாளிகள் உள்ளேவிட மறுத்துவிட்டார்களா? ஒருவேளை அம்மாவுக்கு இவர்கள் வருகை தெரிந்து ஏதாவது தடைசெய்திருப்பாளா!" என்று பலவிதம் குழம்பி யோசனை செய்யும்போது வள்ளியம்மாள் அங்கு வருவதைக்கண்டு புத்தகத்தையும் படத்தையும் மறைத்தாள்.

வள்ளியம்மாள் வெகு உத்ஸாகத்துடன் வந்து "கண்மணீ! உன்மனது சற்று சாந்தியடைந்திருக்குமென்று நம்புகிறேன். உன்னுடைய பிறந்ததினமாகிய இச்சுபதினத்தில் உன்னை நமது மந்திரியாரின் குமாரர் முரளீகிருஷ்ணன் பார்க்கப் பலவிதமான வரிசைகளுடன் வந்திருக்கிறார்" என்று கூறிமுடிப்பதற்குள் வீரலக்ஷ்மி எதையோ எண்ணியவளாய்..."அம்மா! இந்த நாட்டின் சம்பிரதாயப்படி எனக்கு இன்றோடு மைனர் நீங்கி மேஜராகிவிட்டதே என்பதனால் என் உத்திரவைக் கேட்டு அழைத்துவரலாம் என்று வந்தீர்களா?" என்று தந்திரமாகக்கூறி, கடகடவென்று சிரித்தாள்.

மகளுடைய குழப்பம்மாறிச் சிரிப்புவந்துவிட்டதைக் கண்டு பரமசந்தோஷமடைந்த வள்ளியம்மாள், "கண்ணா! ஆமாம். இன்றையிலிருந்து நீ அதிகாரம் பெற்றுவிட்ட மகாராணியல்லவா? இதுவரையில் உன் பெயரால் மந்திரி ஆட்சிபுரிந்தார். நாளைதினம் நீ தர்பாருக்கு விஜயம்செய்து முடிசூட்டிக்கொண்டு ப்ரமாணம் பெற்று செங்கோலைப்பிடித்து ஆட்சி செலுத்தப்போகிறாயே! இனி நான்கூட மகாராணியின் உத்திரவைப் பெற்றுத்தானே இங்கு வரவேண்டும். மகாராணியைப் பெற்ற தாயாரானாலும் மகாராணியின்கீழ் கைகட்டி வாய்புதைத்து நடக்கவேண்டியவள்தானே!" ...என்று கூறி கடகடவென்று தானும் சிரித்தாள்.

மகாசூட்சும புத்தியுள்ள வீரலக்ஷ்மி, தான் சிங்காதனத்தில் அமர்ந்து செங்கோலைப் பிடிக்கும்வரையில் பழயபடியேதானிருக்கவேண்டும்....அதற்குள் எத்தகைய வித்யாஸத்தையும் காட்டக்கூடாது. நாளையிலிருந்து சகலமும் தனது உரிமைக்கு வந்துவிடுகின்றன என்கிற ரகஸியத்தை அறிந்தாயிற்று. ஆகையால் பொறுமையை இழக்கக்கூடாது. அரசம்பட்டி விஷயத்தையும் கேட்கக்கூடாது...என்கிற யோசனையுடன் "அம்மா! மந்திரியின் மகனா வந்திருக்கிறார்.? உடனே வரச்சொல்லுங்கள்" என்றாள்.

வள்ளியம்மாளின் சந்தோஷம் கரைபுரண்டுவிட்டது. முரளியை அழைத்துவந்தாள். அவனுக்கு ஒரு கண் பொட்டை என்பதை ஏற்கெனவே அறிந்துள்ள வீரலக்ஷ்மி அதைக்காட்டிக்கொள்

ளாமல் "வாருங்கள்! வாருங்கள்! இப்படி அமருங்கள்!" என்று தடபுடலாக வரவேற்றாள்.

இம்மாதிரி அவள் வரவேற்பாள் என்பதை வள்ளியம்மாள் சற்றும் எதிர்பார்க்கவே இல்லை. அவளுடைய பெருமிதத்திற்கும் கும்மாளத்திற்கும் எல்லையே இல்லாதுபோய்விட்டது. முரளியின் பின்னாலேயே ப்ரபாகரும் வந்தார். அவரையும் மரியாதைசெய்து உட்காரவைத்தாள். முரளி என்ன பேசுவதென்று தெரியாது விழிக்கிறான்! ஆனால் அதைக்காட்டிக்கொள்ளாமல் ப்ரபாகர் மிக்க ஸாமர்த்யத்துடன் "குழந்தாய்! அன்பு என்ற ஒரு அற்புதமான சக்தி இருக்கிறது பாரு; அதைவிடச் சிறந்தபொருள் உலகத்தில் வேறு எதுவுமேஇல்லை. முரளி உன்னைப்பார்ப்பதற்கு ஆவலுடன் துடித்தான். பார்த்த உடனே இப்படிப் பேசவேண்டும், அப்படிப் பேசவேண்டும் என்று ப்ரமாதமாகக் கற்பனைசெய்தான். பார்த்தபிறகோ அன்புக்கும் அழகுக்கும் அடிமையாகி அப்படியே தடைகட்டிய நாகம்போல் உட்கார்ந்துவிட்டான்...என்ன முரளீ! அதானே?...என்றவாறு வள்ளியம்மாளைப் பார்த்தார்.

வள்ளி அளவற்ற ஆனந்தத்துடன் "ஏதோ, நான்செய்துள்ள அபாரமான பாக்யத்தினால் ஒரு சக்ரவர்த்தினியைப் பெற்றேன். அவளுக்கு ஏற்ற கணவனையும் பெற்றுவிட்டேன். இந்த ஜோடியைப் பார்க்கப்பார்க்க என் னுள்ளம் பூரிக்கும் பூரிப்புக்கு எல்லையே இல்லை. ப்ரபோ! நாம் இன்றே தாம்பூலத்தை மாற்றி நிச்சயம் செய்துவிட்டால் என்ன?" என்றாள்.

"அம்மா! நாளையதினம் தர்பாரில் இந்த யோசனையை நடத்தலாம். இன்று எனக்கு உடம்பு சரியில்லை; படுத்துக்கொள்கிறேன். நீங்கள் போய்வாருங்கள்" என்றுகூறி உத்திரவுக்கு எதிர்பார்க்காமல் சடக்கென்று போய்க் கதவைத் தாளிட்டுக்கொண்டாள்.

வள்ளியம்மாள் சற்று திடுக்கிட்டாள். எனினும், தான் மறுத்து எதுவும் சொல்லாததால் நாளை கட்டாயம் சம்மதித்து விடுவாள்: "மகாராணியின் தர்பாரிலேயே இக்காரியம் செய்வது இன்னும் உசிதம். முதல்முதல் தர்பாரில் நிச்சயதார்த்தம் நடப்பதென்றால் பெருமைதானே" என்று சமாதானம் கூறி, அவர்களையும் அழைத்துச் சென்றாள். ஆனால், ப்ரபாகருக்குமட்டும் மனத்தில் பலமான வேதனைசெய்தது.

23

மறுதினம் காலை நல்ல சுபவேளையில் வீரலக்ஷ்மியை சிம்மாஸனத்தில் அமர்த்தி ஆசிகள் கூறி ஆஸ்தான புரோகிதர் மங்களகரமான மந்திரகோஷத்துடன் மகுடத்தைச் சூட்டி செங்கோலைக் கையில் கொடுத்தார். சபையில் ப்ரம்மாண்டமான ஜேகோஷமும் ஆசிமொழிகளின் ஆரவாரமும் மங்கள வாத்யங்களின் முழக்கமும் வானையளாவின. தன் பிதா இந்த வைபவத்திற்கு இல்லையே என்கிற குறை நெஞ்சையடைத்தது வீரலக்ஷ்மிக்கு.

எனினும் தனக்கு முதல்முதல் பட்டாபிஷேகம் செய்தபோது அவர் பார்த்ததை நினைத்து திருப்தியடைந்தாள். அதுதானே உண்மையான பட்டாபிஷேகம். அதிகாரத்தைத் தான் வாங்கிக் கொள்ளும் சடங்குதானே இது...என்று தேற்றிக்கொண்டாள்.

வள்ளியம்மாள் மெல்ல விவாகப்பேச்சை ஆரம்பித்தாள். வீராங்கனை சிம்மாஸனத்தில் வீற்றிருந்தபடியே "அம்மா! இந்த இடம் அரசாங்கத்தின் தர்பார் என்பது நினைவிருக்கட்டும். இது தேசவிஷயமான காரியங்களையும், ப்ரஜைகளின் நன்மைகளையும் க்ஷேமத்தையும் கோரும் இடமாகையினால் விவாகப்பேச்சுக்கு இடம்இல்லை. அதோடு, இனி என் விவாகத்தின் பொறுப்பு என்னுடையது. இதைப்பற்றி வீண்பேச்சும் எதிர்பார்ப்பும் வேண்டாம். நான் இதற்குச்சம்மதிக்கமாட்டேன். அப்பா வரட்டும்; அதற்குப் பிறகு யோசிக்கலாம். அதுவும் இந்தப் பொட்டைக் கண்ணன் விஷயத்தில் தீர்மானமாக இல்லை என்பதை இப்போதே சொல்லிவிட்டேன். நீங்கள் அதை பகிரங்கமாக ப்ரஸ்தாபித்தால் மந்திரிசபையையே மாற்றியமைக்க நேரும். ஏற்கெனவே புதிய திவானும் புதிய மந்திரிகளும் கொண்ட புதிய அரசாங்கத்தின் ஊழல் குப்பைகள் உலகமறிந்துவிட்டது! நான் எதையும் கவனிக்காமலிருப்பதாக நீங்கள் நினைக்கலாம். புதிய அரசாங்கத்தில் எப்படி எப்படியெல்லாம் அக்ரமமும் அனியாயமும் நடக்கிறது... மந்திரிகளில் சிலர் எப்படியெல்லாம் லஞ்சம்வாங்கிக் கோடீச்வரர்களாகிவிட்டார்கள் என்றும் அரண்மனை சிப்பந்திகளின் பேச்சு மூலமாகவே நான் அறிந்துவிட்டேன். என்கைக்குப் பதவிவரும் நன்னாளையே நான் எதிர்பார்த்திருந்ததால் மவுனமாகவே நடக்க வேண்டியிருந்தது. இனி நீ அனுவச்யமாகத் தலையிடாதே. மரியாதைக்குப் பங்கம்வேண்டாம். எந்தமுறையில் யார்யாரை நடத்த வேண்டுமோ அந்தப்படி நடத்தஎனக்குஇனிமேல்தெரியும். அம்மா முன்னறிதெய்வம் என்கிற மதிப்பினால் இதை ரகஸியமாய் உனக்குத் தெரிவித்தேன்; ஜாக்ரதை!" என்றாள்.

வள்ளியம்மாளுக்கு மண்டையில் ஓங்கி அடித்ததுபோன்ற வேதனைஉண்டாகிஉலகமே தட்டாமாலை சுற்றுவதுபோல் அதிர்ச்சி உண்டாகியது. மெல்ல சமாளித்துக்கொண்டு "வீரலக்ஷ்மீ! இளங்கன்று பயமறியாது என்ற நிலைமையில் நீ அதிகமாகச் செல்லப் பார்க்கிறாய்...என்று முடிப்பதற்குள். "ஆம்... அதிகமாகச் சென்றவர்களை நானும் அதிகமாகவே பார்க்கிறேன். இனி அந்தப் பூச்சி மிட்டலுக்கும் இந்த வீரலக்ஷ்மி பயப்படமாட்டாள்" என்று வெகு முடுக்காகக்கூறியதும், கொஞ்சநஞ்சம் இருந்த நம்பிக்கையும் மறைந்து வள்ளியம்மாளுக்கு அயோமயமாகிவிட்டது.

ஊரெல்லாம் ஒரே குதூகலம். ப்ரஜைகளின் சந்தோஷத்தைச் சொல்லிமுடியாது. மகாராணி அதிகாரத்திற்குவந்த அன்றே சாதாரண வெறும் குடியானவர்களின் குடிசைக்கு நேராகவந்து அவர்களுடைய சுகதுக்கங்களை விசாரிக்கவும் விளைவுவாசிகளை

கவனிக்கவும் தொடங்கிவிட்டாள்என்ருல் இதைவிட குடிமக்க ளின் சந்தோஷத்திற்குச் சாட்சி வேறு வேணுமா?

பட்டிக்காட்டில் மாடுமேய்த்துக்கொண்டிருந்த ஒரு சாதாரணக்குடியானவர்களின் மகளுக்கு இத்தகைய கூர்மையான புத்தி எப்படி உண்டாயிற்று என்று வியப்புற்றுப் பொதுமக்கள் வாழ்த்தினர்கள்.

மகாராணிபட்டத்திற்குவந்து அதிகாரம்பெற்ற உடனே முதல்காரியம் பழபதிவான் தம்பதிகளே விசாரணைஇல்லாமல் வைத்திருக்கும் அனியாயத்தைக் கண்டித்து அவர்களே விடுதலேசெய்ய உத்திரவு பிறப்பித்தாள். ஆனல், அவர்கள் சிறையிலில்லாததை யறிந்ததும் வருத்தத்துடன் அவர்கள் எங்கிருப்பினும் வந்து சேர வேண்டும் என்று பகிரங்க பிரகடனத்தைச் செய்தாள். அரசம் பட்டி கிராமத்து ஜனங்களே அன்று காணுததால் அவர்களே ஒருவேளே சிறையிட்டிருப்பார்களோ! என்கிற சந்தேகத்தினுல் தானே சிறைச்சாலேகளுச் சென்றுபார்க்கும்போது இருட்டுக் குகை போன்ற தனி இடத்தில் அவர்களே அடைத்திருப்பதைக் கண்டு கடுஞ்சீற்றங்கொண்டு துடித்தாள்.

யுத்த எதிரிகளே அடைத்துவைக்கும் இடத்திலா தன் சொந்த ஊரின் குடிமக்களே—ஒரு பாபமும் அறியாதவர்களே—அடைத்தது என்ற கடுங்கோபம்பிறந்தது. அவர்கள் அன்றுஊர்வலம் நடக்கும் போதேதங்களேஎங்கேயோஅழைத்துப்போவதாகச்சொல்லிஅனேறே இவ்விடததில் அடைத்துவிட்டதாகக் கூறிப் புலம்பினர்கள்.

வீரலக்ஷ்மி அவர்களுக்குச் சரியான மரியாதைகளேச் செய்து அரசமபட்டிக்குப் பாதுகாப்புடன் அனுப்பியதுமன்றியில் தானே நேரில் அரசம்பட்டிக்கு ஒரு ப்ரயாணம் வருவதாகவும் கூறினள். கஜேந்திரபுரியின் அனியாய ஆட்சியைக் கண்டித்து சீர்திருத்தம்செய்யும்முறையில் மந்திரிப்ரபாகரின் யோசனையைச் சற்றும் கேட்காமல் தானே எல்லாம் செய்யப்புகுந்ததையும் தன் மகனே மணக்க இசையாது தன்னுடைய ஊழல்களே வெளிக் கிளப்பிவிடுவதையும் கணடு ப்ரபாகருக்கு இவளமீது மகத்தான த்வேஷம் உணடாகிவிட்டது. எனினும அதை உள்ளடக்கிக் கொணடே இவளுக்கு நாசததை உண்டாக்கத் துணிந்துவிட்டான்.

எந்தசமயம் மகாராணிக்கு என்ன ஆபத்து நேர்ந்துவிடுமோ என்கிற பயததினுல் லக்ஷ்மணஸிங்மட்டும சதா மகாராணியின் க்ஷேமத்தையே கோரி அவளேவிட்டுப் பிரியாமல் காத்துக்காதது வருகிருன். பதரிகைகளில் ப்ரகடனத்தைப்போட்டும் பழபதிவான் தம்பதிகளின் விஷயம எதுவுமே தெரியவில்லே. வீரலக்ஷ்மிக்கு இதுவே மிகுந்த கவலையைக் கொடுத்தது.

18/62

ராப்பர் 2-ம் பக்கம் தொடர்ச்சி

மனிதன் புனித பூரணனாகிப் புதுவாழ்வு பெறவேண்டும். அதற்கு மூன்று சாதனங்கள்—சுத்தம் சுதந்திரம் சமத்துவமாகும். இவை மானிடம் தெய்விகமாகச்செய்யும்; தெய்வஜீவனமளிக்கும். உரிய கடமைகளை ஒழுங்காகச் செய்தாலே நல்ல தேகப்பயிற்சியாகும். ஒவ்வொரு மூச்சையும்: செயலாக்கி, வீட்டுக்கும் நாட்டுக்கும் பயனாகும்படி வாழ்வதே தேகசுத்தமாகும். பணமிருப்பவர் தேவையளவே துய்த்து, மிச்சத்தை நல்ல தொழிலில் போட்டுப் பலருக்கும் உழைத்துப்பிழைக்க வழிசெய்தலே சிறந்த தருமமாகும். கல்வியும் தொழிலும் சுகாதாரமும் சன்மார்க்கமும் வளரும் பணிகளை ஆக்கலும் ஊக்கலும் சிறந்த தொண்டுகளாகும். இதனால் கர்மசுத்தி ஏற்படும். அது அந்தக்கரணசுத்திக்கு வழி துலக்கும். வெளுத்த ஆடையில் சாயம் ஏறுவதுபோல், பழைய அழுக்குகளைச் சுரண்டியெறிந்தே புதிய வெள்ளையடிப்பதுபோல், அந்தக்கரணசுத்தியால் ஆத்மசுத்தி பெற்றதும் சுதந்தரசக்தி உதிக்கும்.

சுதந்தரமே மனித இயற்கை. மனிதனுக்கு மனிதன் அடிமையில்லை. உடலுக்கு மனம்,மனதிற்கு ஆன்மா அடிமையில்லை. ஆண்டவனுக்கே நாம் ஆள். வேறெவருக்கும் இல்லை. அருட்பெரியாரை மதிப்போம். ஆனால் அவர்கள் "நாம் இப்படி அடைந்தோம், நீரும் பரம்பொருளை இப்படி அடைக" என்று வழிகாட்டவேண்டும். ஒரே வான், ஒரே கதிரவன், ஒரே மாநிலம் ஒரே காற்று, ஒரே உயிரினம் ஒரே உள்ளத்துடிப்பு—இவற்றை நினைத்து ஆன்மநேய ஒருமையில் வாழவேண்டும். மனவிகாரத்தை நீக்கினால், ஆத்ம சந்நிதி துலங்கும். அங்கேதான் சமத்துவ ஜோதியைக் காணலாம்.

சுதந்தரமாக மூச்சுவிடுவதுபோல் சமத்துவமாக வாழ எல்லோருக்கும் உரிமையுண்டு. பரம்பொருள் ஒன்று பாருயிர் ஓரினம்; எல்லா உடலும் அதன் கோயில் என்ற உணர்வுடன் கருணை கொண்டு நடத்தலே சமத்துவமாகும். இவ்வாறு சுத்த சுதந்தர சமத்துவ சாதனங்களால் புதிய பரமாத்ம வாழ்வு பெறலாம்.

பரமாத்மா எங்கே? ஊனில், உயிரில், உள்ளில், உலகில், எங்கும் நிறைந்த வானில் பரமாத்மா. விறகில் தீ, கல்லில் கனல், பாலில் நெய், அப்பில் உப்பைப்போல் அது எல்லா உயிருக்கும் உயிராக, சுத்தான்ம சைதன்யமாக விளங்கும். யந்திரத்தில் இறங்கி, கம்பிவழியே ஓடி ஒரு விளக்காகப் பளிச்சிடும்போதே மின்சாரத்தை நாம் அறிகிறோம். சுத்தசுதந்தர சமத்துவ சக்தியான பரம்பொருளை இயற்கை அற்புதங்களால் நாம் அறிகிறோம். எலெக்ட்ரன் அணுக்கள் ரேடியோவில் விளையாடுவதுபோல சுத்த சக்தி நமக்குள் இறங்கி விளையாடும். நாம் அதன் மின்மீட்டியே. ஒரு மின்மீட்டியில் இரு கம்பிகளை இணைத்து மின் ஓட்டம் பெறலாம். அதுபோல் உள்ளத்தையும் மூளையையும் தியானத்தில் ஒருமைப்படுத்தி சுத்தசக்தியை எல்லாரும் உணரலாம். அந்த உணர்ச்சிதான் கடவுள் அடைவாகும். சுத்தசக்தி சைதன்ய அறிவிலேயே நான் வாழ்கிறேன். என் அனுபவங்களை உங்கள் முன் வெட்டவெளிச்சமாக வைத்துவிட்டேன். சுத்தயோகத்தில் கனிந்த அமரக் கனிகளையும் உங்கள் கையில் கொடுத்துவிட்டேன். ...இந்தக் கனிகளையுண்டு, அதன் உண்மை விதைகளை எங்கும் விதைத்துப் புதிய வாழ்வு செழிக்க உதவுமின்!

JAGANMOHINI, owned and edited by V. M. KOTHAINAYAKI AMMAL is printed and published by V. M. PARTHASARATHY at the Jaganmohini Press, 26. Car St., Triplicane, Madras. 5.

Managing Editor: V. M. SRINIVASAN. M. A. B. L.

Jaganmohini, (June 1950.) Regd. No. M. 2210.

மாடர்ன் தியேட்டர்ஸாரின்

மந்திரி குமாரி

விரைவில் வருகிறது